
சிறுவர்களுக்கான
இராமாயணம்
கே.வி.குணசேகரம்

# சிறுவர்களுக்கான இராமாயணம்

## என்னுரை

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே! மாணவர்கள் தான் எதிர்காலத் தலைவர்கள் என்பதால் எனது எழுத்து மாணவர்களைப் பற்றியதாகவே எப்போதும் இருக்கும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்றொரு முதுமொழி உண்டு. அதற்காக மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்த வல்ல புராணக்கதைகளையும், இதிகாசக் கதைகளையும் எழுதியுள்ளேன். சமயம் தான் ஒழுக்கத்தை வளர்ப்பது. மேம்படுத்துவது. கடவுள் நம்பிக்கை உள்ள ஒருவன் எதையும் சாதிக்கலாம். சமயக்கருத்துக்களை நம்புவதன் மூலம் மனம் சமாதானமடையும், நம்பிக்கை உண்டாகும். நம்பிக்கையுடன் செய்யும் செயல்களை வெற்றியளிக்கச் செய்யும். அதனால் கடவுளைப் பற்றிய நூல்களைத் தேடிப் படியுங்கள். அதனால் உங்களது வாழ்வு சிறக்கும். எனது ஐந்து நூல்களை இந்து சமய பண்பாட்டமைச்சின் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன் வெளியிடத் தீர்மானித்துள்ளார். அவர் பொறுப்பேற்ற பின்பு இந்து சமயம் என்றுமில்லாத வளர்ச்சியடைந்துள்ளது. விழாக்கள், குரு பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. பழந்தமிழ், சமய நூல்கள் அச்சிடப்பட்டு வெளிவருகின்றன. அறநெறிப் பாடசாலைகள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆசிரியர்களை வளப்படுத்த பல்வேறுபட்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மொத்தத்தில் சைவசமயத்தின் எழுச்சிக் காலம் இதுவென்று துணிந்து கூறலாம். அமைச்சருக்கும், பணிப்பாளருக்கும், இக் கதையை கணனி மயப்படுத்தியும், படங்களை வடிவமைத்தும் தந்த செல்வி.ப.யாழினிக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

நன்றி

அன்புடன்,

கே.வி.குணசேகரம்.

## இராம அவதாரம்

பாரத நாடு மிகவும் பெரியது. பெருமைகள் பலவும் வாய்ந்தது. புண்ணிய தீர்த்தங்கள், புனித நதிகள், வணக்கத்திற்குரிய மலைகள், அடர்ந்த பெரிய காடுகள் உள்ள நாடு. அங்கு பல முனிவர்களும், மகான்களும் பிறந்து நாட்டிற்கும், உலகிற்கும் அரிய பல சேவைகளைச் செய்தனர். அத்துடன் அந்நாட்டிலே பல பேரரசுகளும் சிற்றரசுகளும் இருந்தன. அவற்றில் ஒன்று கோசல நாடு. தசரதச் சக்கரவர்த்தி அயோத்தியைத் தலை நகராகக் கொண்டு அந்நாட்டை நீதி நெறி தவறாது ஆட்சி புரிந்து வந்தான்.

தசரதன் நீதியான மன்னன். அதனால் அங்கு வாழும் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். மன்னன் அயோத்தியில் உள்ள கோவில்களையெல்லாம் நல்ல முறையில் பராமரித்தான். மக்கள் எந்தவிதமான குறைபாடுகளுமின்றி வாழ்ந்தனர். தசரதனின் அரண்மனைக்குப் புலவர்களும், முனிவர்களும், அறிஞர்களும் வந்து தமது திறமைகளை வெளிக்காட்டி மன்னனையும் மக்களையும் மகிழ்வித்து செல்வர். அதனால் மக்களும், அந்தணர்களும், முனிவர்களும், சிற்றரசர்களும் தசரதன் மீது அளவில்லாத அன்பை வைத்திருந்தனர்.

மக்கள் எல்லோரும் எந்தவிதமான குறைகளுமின்றி மகிழ்வுடன் வாழ்ந்து வரும் போது தசரதன் மிகுந்த மனக்கவலையுடன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு கோசலை கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவிகள் இருந்த போது யாருக்கும் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் தசரதன் மிகுந்த துயரத்துடன் அதை வசிட்ட முனிவருக்குச் சொன்னான். அதைக் கேட்ட வசிட்டர்,‘‘மன்னா, உனக்குப் பிள்ளைப்பேறு வேண்டுமானால் அதற்கு நீ ஒரு யாகம் செய்தல் வேண்டும். அதற்கு புத்திரகாமேட்டி யாகம் என்று பெயர். அந்த யாகத்தைச் செய்தால் நிட்சயமாக உனக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கும்’’ என்றார். அதன்படி வசிட்டர் யாகத்தை சிறப்பாக நடத்தினார். பல ஆயிரம் அந்தணர்களும், இலட்சக்கணக்கான பொது மக்களும் அந்த யாகத்தில் கலந்து கொண்டனர். அப்போது அந்த ஓமகுண்டத்தின் நடுவில் இருந்து தெய்வப்புரிசன் ஒருவன் தோன்றினான். அவனது கையில் பாயசம் நிறைந்த பொற்கிண்ணம் ஒன்று இருந்தது. அவன் அதைத் தசரதனிடம் கொடுத்து,‘‘உனது மனைவிகளுக்கு இதைப் பங்கிட்டுக் கொடு’’ என்று கூறி மறைந்தான்.

தசரதன் பொற்கிண்ணத்தில் இருந்த பாயசத்தைத் தனது மனைவியர் மூவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். சில மாதங்களில் மூவரும் கர்ப்பமடைந்தனர். பத்து மாதங்கள் முடிந்ததும் கோசலைக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு இராமன் என்ற நாமத்தை தசரதன் சூட்டி மகிழ்ந்தான். சில நாட்களின் பின் கைகேகிக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குப் பரதன் என்ற நாமத்தைத் தசரதன் சூட்டி மகிழ்ந்தான். அதன் பின் மூன்றாவது மனைவியான சுமித்திரைக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தன. அவற்றிற்கு இலட்சுமணன் என்றும் சத்ருக்கன் என்றும் நாமம் சூட்டித் தசரதன் மகிழ்ந்தான். தனக்குப் பிள்ளைகள் பிறந்தமையால் தசரதன் மக்களுக்கும், அந்தணர்களுக்கும், முனிவர்களுக்கும் வெகுமதிகளும் பரிசுப் பொருட்களும் வழங்கினான். அதைப் பெரியதொரு விழாவாகக் கொண்டாடினான். அயோத்தி மக்கள் குதூகலத்துடன் அவ்விழாவில் கலந்து கொண்டனர்.

இலட்சுமணனுக்கு இராமன் மீது அளவற்ற அன்பு இருந்தது. அதனால் எவ்வேளையிலும் அவன் இராமனுடன் தான் இருப்பான். இராமனும் அவனின் மீது அளவற்ற அன்பை வைத்திருந்தான். இருப்பினும் ஏனைய மூவரும் இராமன் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தனர். இராமனும் அவர்கள் மீது அன்பு கொண்டிருந்தான். தசரதனுக்கு மூத்த மகனான இராமனின் மீது அளவு கடந்த பாசம் இருந்தது.

உரிய வயது வந்ததும் தசரதன் அவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடுகளைச் செய்தான். வேதஉபநிடதங்களையும் யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, வாள்ப் பயிற்சி தேரோட்டல் முதலான பல கலைகளையும் அவர்கள் கற்றுத் தேர்ந்தனர். இராமனும் இலட்சுமனனும் சகல வித்தைகளையும் கற்று மாவீரராயினர். அவர்களின்

திறமையைக் கண்டு வசிட்டரும் தசரதனும் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். அவர்களது போர்த் திறமைகளைக் கண்ட மக்கள் அதிசயித்தனர். அவர்களது திறமைகளைக் கேள்விப்பட்ட அயல்நாட்டரசர்கள் அச்சம் கொண்டனர். இருந்த போதும் இராமனது நற்குணங்களைத் தெரிந்து கொண்ட அவர்கள் இராமனுடன் நட்புப் பூண ஆவலுற்றனர். இராமனது அமைதியான சுபாவம் அனைவரையும் கவர்ந்தது.

## விசுவாமித்திரனின் வருகை

இராமனுக்குத் திருமண வயது வந்ததை உணர்ந்த தசரதன் அவனுக்குத் திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான். அதற்காகப் புரோகிதர்களையும், வசிட்டரையும், அறிஞர்களையும் சபைக்கு அழைத்துப் பேசினான். அப்போது வாயில் காவலன் ஒருவன் வந்து தசரதனை வணங்கி,''மகாராஜா் விசுவாமித்திரர் என்ற முனிவர் தங்களைக் காண வந்திருக்கிறார்'' என்றான்.

வலிமை மிக்க பெருமையும் தவவலிமையும் மிக்க விசுவாமித்திர முனிவர் தன்னைக் காண வந்திருக்கிறார் என்பதைக் கேட்டு மகிழ்ந்த தசரதன் தன் சிம்மாசனத்தை விட்டிறங்கி அவரை வரபேற்பதற்காகச் சென்றார். விசுவாமித்திரனின் புகழையும் தவவலிமையையும் பற்றி முன்பே கேள்விப்பட்டமையால் அவன் முனிவரைப் பெருமகிழ்வுடன் வரவேற்று, அவரை வணங்கி அரச சபைக்கு அழைத்து வந்தார். விசுவாமித்திரர் அரசனை வாழ்த்தி ஆசி கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

''முனிவரே, நல்ல நேரத்தில் இங்கு வந்தீர்கள். எனது மகன் இராமனுக்குத் திருமணம் செய்யும் நோக்குடன் கூடியிருந்தேன். தாங்கள் அவனை ஆசீர்வதித்து திருமணத்திற்கான ஆலோசனையை வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்'' என்றான்.

அதைக் கவனிக்காதவர் போல விசுவாமித்திரர் சொன்னார்,''அரசே, இராமனால் எனக்கொரு காரியமாக வேண்டும்'' என்றார்.

''தாங்கள் முன்பு சாதாரண முனிவராக இருந்து பின்பு பலகாலம் தவஞ் செய்து பெரும் முனிவராகி விட்டீர்கள். உங்களுக்கு எம்பெருமானான சிவனின் அருள் நிறைய உண்டு. தாங்களது திருவடி பதிந்ததால் எமது நாடும் அரசும் பெரும் நன்மையடைந்துள்ளது. பெருமை பெற்றுள்ளது. தாங்கள் விரும்புவதைச் செய்வது எனது பாக்கியமாகும். சொல்லுங்கள்'' என்றான். அதைக் கேட்ட விசுவாமித்திரர் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

''மன்னா, உனது பெருந்தன்மையை உனது பேச்சு எடுத்துக்காட்டுகிறது. மக்களுக்கும், அந்தணர்களுக்கும், முனிவர்களுக்கும் மகிழ்வான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த உன்னை நம்பித்தான் வந்திருக்கிறேன். நீ நான் கேட்காமலே அதைத் தருவதாகக் கூறிவிட்டாய். உனது பரம்பரையினரின் தாராண்மை உன்னிடமும் நிறைந்திருக்கிறது'' என்று கூறிவிட்டுத் தசரதனின் முகத்தைப் பார்த்தார் விசுவாமித்திரர். அது பூரண மகிழ்வுடன் இருந்ததைக் கண்டு மகிழ்வுடன் சொன்னார்,''மன்னா, நான் உலக நன்மைக்காவும் அசுரர்களின் கொட்டம் அடங்குவதற்காகவும் யாகம் செய்யத் தொடங்கினேன். இரண்டு அரக்கர்கள் அதைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் யாகசாலையை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.''

''யார் அவர்கள். அவர்களைச் கொல்லும்படி ஆணையிடுகிறேன்'' என்றான் தசரதன்.

''மன்னா, சுபாகு, மாரீசன் என்ற இரு அரக்கர்கள் புலாலையும் இரத்தத்தையும் எனது யாக சாலைக்குள்க் கொண்டு வந்து போடுகிறார்கள். பலமுறை சொல்லியும் கேட்கிறார்களில்லை. சாபம் கொடுத்துச் சபித்து விடுவேன். யாகம் செய்பவர் ஒருவருக்கு வெகுமதி கொடுக்கலாமே தவிரத் தண்டிக்கலாகாது'' என்றார் விசுவாமித்திரர்.

''அப்படியா? தாங்கள் என்னிடத்தில் என்ன உதவியை எதிர்பார்க்கிறீர்கள்'' என்று தசரதன் கேட்டான்.

‘‘அரசே, தங்கள் மூத்த மகன் பெரும் வீரன். பலசாலி. அவன் வயது குறைந்தவனானாலும் அசுரர்களை இலகுவாக வெல்வான். நான் யாகத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால் யாகசாலைக்குக் காவல் வேண்டும். அதற்குத் தகுதியானவன் இராமன். அவனை என்னுடன் அனுப்பி வையுங்கள்’’ என்றார் விசுவாமித்திரர்.

‘‘முனிவரே, அவன் முறைப்படி பயிற்சி பெற்றாலும் உரிய வயதை அடையாதவன். பொறுப்பாக நடந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவன்’’ என்றார் தசரதன்.

‘‘மன்னா, உனது மகனைப் பற்றி முழுமையாக அறிந்த பின்பு தான் நான் இங்கு வந்தேன். அவனால் உலகம் பெரும் நன்மை அடையப்போகிறது. அவனுக்கு எந்த ஆபத்தும் வராது. இதன் மூலம் அசுரவம்சம் பயமுறல் வேண்டும். எந்த அரக்கனும் இராமனை எதிர்த்துப் போரிட முடியாது. அவ்வளவு பலசாலி அவன். இராமனைத் தவிர எவராலும் அவ் அரக்கர்களை அழிக்க முடியாது. அதனால் பயம் கொள்ளாது இராமனை என்னுடன் அனுப்பு’’ என்றார் விசுவாமித்திரர்.

அசுரர்களைத் தனது படையை அனுப்பி அழிக்கத் திட்டமிட்ட தசரதன் அதைக் கேட்டுத் திகிலடைந்து போனான். அவன் இதுவரை போர்க்களத்திற்குச் சென்று எதிரிகளோடு போரிட்டிருந்தால் அனுப்பலாம். அதை விட இராமனை மட்டும் காவலுக்குக் கேட்டதால் மிகுந்த துக்கமடைந்தான் தசரன்.

தசரதன் எதுவும் பேசாது அமைதியாக இருந்ததைக் கண்டு விசுவாமித்திரர் சற்றுக் கோபமாகச் சொன்னார்,‘‘மன்னா, என்னில் உனக்கு நம்பிக்கை இல்லையா? எனது தவவலிமையைப் பற்றி உனக்குத் தெரியாதா? எனது தவவலிமையால் தான் நான் இதைக் கூறுகிறேன். கொடுமைகள் செய்யும் அரக்கர்களை அழிக்கும் ஆரம்ப நடவடிக்கை இது. இது இராமனால் தான் நடைபெற வேண்டும். இதனால் உனக்கும் இராமனுக்கும் இராச்சியத்துக்கும் நன்மை உண்டாகும். தாமதியாதே தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்துக்கள் அதிகரிக்கும். அதனால் அவனை என்னுடன் அனுப்பு’’ கட்டளை இடுவது போலச் சொன்னார் விசுவாமித்திரர்.

தான் இராமனை அனுப்பாவிட்டால் இராமனை முனிவர் சபித்து விடுவார் என்று பயந்த தசரதன் நினைவிழந்து சிங்காசனத்தில் சாய்ந்தான்.

## இராமனும் இலட்சுமணனும் முனிவரோடு செல்லல்

மயக்கம் தெளிந்து எழுந்த தசரதன் விசுவாமித்திரருக்குச் சொன்னான்,‘‘மகா முனிவரே, திருமணம் செய்து பல காலம் பிள்ளையில்லாதிருந்து யாகம் செய்தே இராமனைப் பெற்றேன். அதனால் எனது முப்படைகளையும் உம்முடன் அனுப்புகின்றேன். அத்துடன் நானே படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்று அவ்அசுரர் இருவரையும் அவர்களது கூட்டத்தையும் வேரோடு அழிக்கிறேன். அவனுக்கு ஏதாவது நேர்ந்தால் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது’’ என்று கலங்கினான்.

‘‘விசுவாமித்திரருக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. அவரது முகமும் கண்களும் சிவந்தன,‘‘மன்னா, பாரததேசத்தில் எத்தனை நாடுகள் உள்ளன. அங்கெல்லாம் செல்லாது இங்கு வந்ததற்குக் காரணம் உண்டு. தர்மத்தில் உயர்ந்த தர்மமுடைய ரகுகுலத்தில் பிறந்த நீ என்னையும் எனது தவவலிமையையும் எனது நோக்கத்தையும் புரியாது கலங்குகிறாய். அத்துடன் நீ நான் கேட்டதைத் தருவதாக வாக்குத் தந்துள்ளாய். அதை மீறப்போகிறாயா..? சொல் நான் சென்று விடுகிறேன்’’ என்று அதட்டினார்.

அதைக் கண்டு பயந்த வசிட்டர் கலக்கத்துடன் தசரதனின் அருகில் வந்து,‘‘மன்னா, இராமன் வீரன். முனிவர் எங்கும் செல்லாது இங்கு வந்தமைக்கு ஏதோ ஒரு முக்கிய காரணமிருக்கிறது. முனிவர் தனது தவவலிமையால் எதையும் சாதிக்கக் கூடியவர். அதைவிட அவரின் தவப்பலன் மிகவும் வலிமையானதும் சக்தி வாய்ந்ததும் ஆகும். முனிவருக்குக் கோபம் வந்து சபித்தாரானால் உங்கள் வம்சம் முன் செய்த தான தர்ம புண்ணியங்களெல்லாம் அழிந்து விடும். அதனால் இராமனோடு இலட்சுமணனையும் அனுப்புங்கள். இராமனுக்கு புவியில் பல தீமைகளை அழிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

விசுவாமித்திரனின் பாதுகாப்பில் இருப்பவர்களுக்கு எந்தத்துன்பமும் வராது'' என்று கூறத் தசரதன் சம்மதித்து இராமனையும் இலட்சுமணனையும் விசுவாமித்திரருடன் அனுப்பச் சம்மதித்தான்.

இராமனும் இலட்சுமணனும் வசிட்டரிடமும் தசரதனிடமும் தாயிடமும் சிற்றன்னைகளிடமும் ஆசி பெற்றனர், ''இராமா, உன்னை வெல்ல யாராலும் முடியாது. உனது கடமை இப்போது தொடங்கியுள்ளது. தீமைகளை அழித்து நன்மைகளை உண்டாக்கு. முனிவர்களின் யாகத்தை சுபாகு, மாரீசன் என்ற இரு அசுரர்களும் அவர்களது சேனையும் அழித்து வருகிறது. நீ அயோத்தியின் அரசனாக வேண்டியவன். அதனால் மக்களையும் முனிவர்களையும் காப்பது உனது கடன். சிவனின் ஆசியும் எனது ஆசியும் விசுவாமித்திரரின் ஆசியும் உனக்குப் பலமாக எவ்வேளையிலும் இருக்கும். சென்று வா'' என ஆசீர்வதித்தனர்.

இராமன் தசரதனிடம் வந்து சொன்னான்,''தந்தையே கலங்காதீர்கள். தீமை ஒருபோதும் வென்றதில்லை தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பது அரச பரம்பரையினரது கடமை. கலங்காதீர்கள். அவ்விரு அசுரர்களையும் அவர்களது கூட்டத்தையும் அழித்து நீதியை நிலைநாட்ட ஆசீர்வதியுங்கள்'' என்றான். தசரதன் இராமனையும் இலட்சுமணனையும் ஆசீர்வதித்து விடை கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து வேதியர்கள் பல்வேறு சடங்குகளைச் செய்தனர். அதன் பின் இராமனும் இலட்சுமணனும் விசுவாமித்திரருடன் புறப்பட்டனர். அப்போது இந்திரன் முதலான தேவர்கள் வானில் இருந்து பூமாரி சொரிந்து வாழ்த்தினர். இராமனும் இலட்சுமணனும் தோளில் இரண்டிரண்டு அம்புராத் துணிகளை (அம்புகள் வைக்கும் கூடு) தரித்திருந்தமையால் வழி நின்ற மக்களுக்கு அவர்கள் மூன்று தலைகளை உள்ள இரண்டு நாகங்களைப் போலத் தெரிந்தனர். வழிகளில் நின்ற மக்கள் பூக்களைச் சொரிந்து தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

அவர்கள் மூவரும் நடந்து சென்று சராயு நதிக்கரையை அடைந்தனர். இராமனும் இலட்சுமணனும் களைப்படைந்திருந்தனர். அதைக் கண்ட விசுவாமித்திரர் சொன்னார்,''இருவரும் ஆற்று நீரில் நீராடுங்கள். அந்நீரைக் குடியுங்கள். நாம் காலங்கடத்தக் கூடாது. மந்திரங்களில் சிறந்தது பலை, அதிபலை என்ற இரண்டு மந்திரங்கள். அவற்றை நான் உங்களுக்கு உபதேசிக்கிறேன். அம்மந்திரங்களைக் கற்றவர்கள் தூங்கிக் கொண்டிருந்தாலோ அல்லது மறைந்திருந்தாலும் அசுரர்களால் அவர்களை வெல்ல முடியாது. இம்மந்திரங்களை நீ நினைத்தால் பெரும் பலசாலியாவாய். உன்னை வெல்ல யாராலும் முடியாது. மந்திரங்களைச் சொன்னால் பசியும் தாகமும் உண்டாகாது. இது பிரமதேவனால் உபதேசிக்கப்பட்டவை'' என்றார்.

பின்பு இராமன் புனித நீரில் நீராடி, அதைப் பருகியதும் விசுவாமித்திரர் பலை, அதிபலை என்னும் இரண்டு மந்திரங்களையும் அவனது காதில் ஓதினார். அன்று இரவு முழுவதும் சரயூ நதிக்கரையில் மூவரும் உறங்கினர். அரண்மனையில் சொகுசான பஞ்சு மெத்தைகளில் படுத்துறங்கிய இராமனும் இலட்சுமணனும் புற்தரையில் படுத்து உறங்கினர்.

## அங்க தேசம்

பொழுது விடிந்ததும் புற்றரையில் உறங்கிய இராமனும் இலட்சுமணனும் எழுந்து நதியில் நீராடி விட்டுச் சூரியனை வணங்கிக் காயத்திரி மந்திரத்தை ஜெபித்து விட்டு விசுவாமித்திரரை வணங்கினர். மூவரும் அங்கிருந்து புறப்பட்டு சரயூ நதி கங்கையுடன் கலக்கும் இடத்திற்கு வந்தனர். நதிக்கரையில் பல முனிவர்கள் பன்னசாலை அமைத்துத் தவம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது விசுவாமித்திரர் அம்முனிவர்களின் வரலாற்றைச் சொன்னார், ''இராமா, மன்மதன் முன்பு கண்ணுக்குப் புலப்படும் வடிவத்தில் இருந்தான். சிவபெருமான் தவம் செய்து கொண்டிருந்தார். அவரது தவத்தைக் கலைத்துப் பார்வதியோடு கூட வைத்தல் வேண்டும் என்று தேவர்கள் மன்மதனை இரந்து கேட்டனர். அதனால் சிவனுக்கு மோகவுணர்வு உண்டாவதற்காக மன்மதன் சிவன் மீது மலர்க்கணைகளைத் தொடுத்தான். தனது தவத்தைக்

கலைத்த மன்மதன் மீது கடுங்கோபம் கொண்ட சிவன் தனது நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதனால் மன்மதன் எரிந்து சாம்பலாகி விட்டான்.''

''அந்தச் சம்பவம் நடந்த இடம் தான் இது. அதனால் இப்புண்ணிய பூமியில் முனிவர்கள் ஆதிகாலம் தொட்டுத் தவம் செய்து வருகிறார்கள். இவர்கள் எப்போதும் சிவனின் நினைவாக இருப்பதால் பாவமின்றி வாழ்கிறார்கள். அதனால் நாம் இன்று இரவு அங்கதேசம் என்று சொல்லப்படும் இப்புண்ணிய பூமியில் தங்கியிருந்து நாளைய தினம் கங்கையைத் தாண்டிச் செல்வோம். இனி நாம் நீராடி எமது கடமைகளை முடித்து விட்டு ஒவ்வொரு முனிவர்களினதும் பன்னசாலைக்குச் சென்று அவர்களை வணங்கி ஆசிபெறுவோம்'' என்றார்.

முனிவர்களது பன்னசாலைக்குச் சென்ற போது விசுவாமித்திரரையும், இராமனையும், இலட்சுமணனையும் தமது தவவலிமையால் அறிந்து கொண்ட முனிவர்கள் அவர்கள் மூவரையும் பெரு மகிழ்வுடன் வரவேற்று அவர்களுக்கு உணவு கொடுத்தனர். இரவானதும் சிவன் மன்மதனை எரித்த இடமான காமாசிரமம் என்ற இடத்திற்குச் சென்று அவ்விடத்தை வணங்கி அங்கேயே தங்கினார்கள்.

## சரயூநதி

பொழுது விடிந்ததும் இராமனும் இலட்சுமணனும் விசுவாமித்திர முனிவருடன் கங்கை நதியின் கரைக்கு வந்தனர். அங்கு இருந்த முனிவர்கள் ஓர் ஓடத்தில் அவர்களை ஏற்றிவிட்டனர். அவர்கள் கங்கையைக் கடக்கும் போது ஓர் இடத்தில் அலைகள் மேலெழுந்து ஆர்ப்பரித்தன. அது பெரும் ஒலியை எழுப்பியது. அதைக்கேட்ட இராமன் விசுவாமித்திர முனிவரிடம் கேட்டான்,''சுவாமி, இப்பெரும் சத்தம் அச்சத்தைக் கொடுக்கிறது. இது எதனால் ஏற்பட்டதென்று தங்கக்குத் தெரியுமா?''

''இராமா, கைலாய மலையில் பிரமதேவன் தனது மனதினால் ஒரு நீர் நிலையை அமைத்து அதற்கு மாணசம் என்று பெயரிட்டான். அந்த நீர் நிலையில் இருந்து நீர் பெருகும் சத்தம் தான் இது. அதன் பெயர் சரயூ நதி. அந்நதி அயோத்திமா நகரைச் சுற்றி ஓடுகிறது. பிரமன் தனது மனதினால் அமைத்து கைலாய மலையில் இருந்து பெருக்கெடுத்து ஓடுமாறு அருளியமையால் தான் அந்நதிக்கு சரயூ நதி எனப்பெயர் ஏற்பட்டது. அந்த நதி கங்கையோடு கலக்கும் சத்தம் தான் கேட்டுக் கொண்டிருக்கிறது. அது ஒரு புண்ணிய தீர்த்தமாகும். அதை வணங்குங்கள்'' என்றார் விசுவாமித்திரர்.


இராமனும், இலட்சுமணனும் அந்த நதியை வணங்கினர். ஓடம் மெதுவாகக் கங்கை நதியின் தென் கரையை அடைந்தது.

ஓடத்தால் இறங்கி நடந்து செல்லும் போது ஓர் அடர்ந்த காடு எதிர்ப்பட்டது. அக்காடு மிகவும் நெருக்கமாகவும் இருள்படர்ந்ததாகவும் இருந்தது.

''சுவாமி, காட்டு மரங்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதால் எம்மால் உள்ளே செல்ல முடியவில்லை. இருளாக இருப்பதால் மேலே செல்ல முடியவில்லை. சில வண்டுகள் கூட்டம் கூட்டமாகப் பறக்கின்றன. உள்ளே கொடிய மிருகங்களின் ஒலி கேட்கிறது. கழுகுகளும், ஆந்தைகளும் பறந்து திரிகின்றன. இப்படியான காடு எமது இராச்சியத்தில் உண்டா..? இதன் பெயர் என்ன?'' என்று இராமன் கேட்டான்.

''இராமா, இந்தக் காடு ஒரு காலத்தில் மிகவும் செழிப்பாக இருந்தது. இங்கு மக்கள் வந்து தமக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் சென்றனர். வேறு நாடுகளுக்கு இக்காட்டினூடாகவே மக்கள் சென்று வந்தனர். இப்பொழுது தாடகை என்ற அரக்கி இக்காட்டில் வசித்து வருகிறாள். அவள் ஆயிரம் யானைகளின் பலத்தைக் கொண்டவள். நினைத்த போது நினைத்த உருவை அவள் எடுப்பாள். அவளுக்குப் பிறந்தவன் தான் மாரீசன். தாடகை காட்டின் பெரும் பகுதியைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறாள். அதனால் அவள் மக்களுக்குப் பல்வேறு வகையான துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். இப்போது மக்கள் எவரும் இக்காட்டுக்குள்ச் செல்ல அனுமதிக்க மாட்டாள். ஆனால் நாம் இக்காட்டினூடாகத் தான் செல்ல வேண்டும். அதனால் அவதானமாக இரு. உன்னால் தான்

அவளை அழிக்க முடியும். நான் சொல்லும் போது அவளை அழிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்'' என்றார் விசுவாமித்திரர்.



## தாடகை வதம்

விசுவாமித்திரர் தாடகையைப் பற்றிச் சொன்னதும் இராமன் தனது வில்லை எடுத்து நாணில் அம்பைப் பொருத்தினான். பின் அம்பை விட்டான். அம்பு நாணை விட்டுப் புறப்பட்ட சத்தம் அக்காட்டை அதிரச் செய்தது. பறவைகள் அச்சத்தால் பறந்தபடி கீச்சிட்டன. சிங்கங்கள் கர்ச்சித்தன. புலிகள் உறுமின. யானைகள் பிளிறின. காடு சில கணங்கள் அதிர்ந்தது. அக்காட்டில் வாழும் தாடகையின் கூட்டத்தைச் சேர்ந்த அரக்கர்கள் பயத்தால் நடுங்கியபடி தாடகை இருந்த இடத்திற்கு ஓடி வந்தனர்.

அச்சத்தத்தைக் கேட்டு அதிர்ச்சியடைந்த தாடகை கடுங்கோபங்கொண்டு அச்சத்தம் வந்த திசையை நோக்கி நடக்க அசுரர்கள் அவளைப் பின் தொடர்ந்தனர். என்றும் கேளாத அப்பயங்கரச் சத்தத்தால் அவள் அளவுக்கதிகமாகக் கோபங் கொண்டிருந்தாள். தாடகையும் அரக்கர் கூட்டமும் வந்த போது புழுதி எழுந்து காட்டை மறைத்தது.

தாடகையை உற்றுப் பார்த்தான் இராமன். ஒரு கருங்கல்லாலான பெரிய பாறை ஒன்று அசைந்து வருவது போல இருந்தது. தாடகையைக் கண்ட இராமன், ''தம்பி, அவதானமாக இரு. அவள் மனிதரைப் பிடித்து உண்பவள். மக்கள் யாராவது பார்த்தால் அதிர்ச்சியால் இறந்து விடுவார்கள். இவள் பெரும் பலசாலி. அத்துடன் மாயங்களையும் தந்திரங்களையும் செய்து தாக்குபவள். இவள் பெண்ணாக இருப்பதால் கொல்லத் தயக்கமாக இருக்கிறது. இவளது காதையும் மூக்கையும் அறுத்து கைகால்களை முறித்து அனுப்ப யோசிக்கிறேன். அதனால் இவளால் வனத்தில் நடமாட முடியாத நிலை ஏற்படும். அதனால் மக்கள் அச்சமின்றி வாழலாம்'' என்றான்.

இராமன் சொல்லிக் கொண்டிருக்கும் போது இராமனைக் கண்ட தாடகை மிகுந்த கோபம் கொண்டு தனது கைகளை உயர்த்தியவாறு இராமனைப் பிடிப்பதற்காக இராமனை நோக்கி வேகமாக ஓடி வந்தாள். அதைக் கண்ட விசுவாமித்திரர் சிவனை நினைத்து மந்திரங்களை ஜெபித்தபடி இருந்தார். தாடகை மிகவும் வேகமாக ஓடி வந்து புழுதியை வாரி இறைத்தாள். காடு இருளானது. இராமன் ஒரு கணம் அதிர்ந்தான். அத்துடன் கூட வந்த அரக்கர்கள் கற்களால் தாக்கத் தொடங்கினர்.

அதைக் கண்ட விசுவாமித்திரர் சொன்னார்,''இராமா, இவளைப் பெண் என்று நினைக்காதே. இராட்சதி. மக்களைப் புழுப் போல காலால் நசிப்பவள். இவளது கூட்டத்தினர் முனிவர்களின் சிவபூசைகளையும் யாகங்களையும் அழிப்பவர்கள். அதனால் தயக்கம் கொள்ளாதே. இவள் இப்போது கண்களுக்குத் தென்படுகிறாள். அவள் மாய உருவெடுத்தால் கண்ணுக்குப் புலனாக மாட்டாள். அதனால் கருணை காட்டாது அம்மை விடு'' என்றார்.

அதைக் கேட்ட இராமன் அவளின் கண்களுக்குத் தோன்றாதபடி நின்று கொண்டு தாடகையின் அட்டகாசத்தால் எழுந்த ஒலியை நோக்கி அம்புகளை ஏவினான். அவை தாடகையைச் சுற்றி வேலி போல அமைந்தன. அதனால் தாடகை அசைய முடியாது. கோபத்துடன் கத்தினாள். பின் அம்பு வேலியைத் தகர்த்துக் கொண்டு ஆவேசத்துடன் இராமனை நோக்கி ஓடி வந்தாள்.

''இராமா, அவளைக் கொல். இல்லாவிட்டால் அவள் உன்னையும் இலட்சுமணனையும் கொன்று விடுவாள்'' என்று கூற இராமன் ஓர் அம்பை எடுத்துத் தாடகையை நோக்கி விட்டான். அது நேராகச் சென்று தாடகையின் மார்பில் பதிய, அவளது மார்பில் இருந்து இரத்தம் ஆறு போலப் பாய்ந்தது. அதனால் தாடகை நிலத்தில் விழுந்தாள்.

## மகிழ்ந்த விசுவாமித்திரர்

தாடகை நிலத்தில் விழுந்து துடி துடித்து மாண்டதும் அவளுடன் வந்த அரக்கர் கூட்டம் அலறியடித்தபடி ஓடித்தப்பியது. தாடகை மலை போலச் சரிந்து கிடந்ததைக் கண்டு மகிழ்ந்த விசுவாமித்திரர் இராமனின் அருகே வந்து அவனைக் கட்டித் தழுவினார்.

''இராமா, மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எனது நெடு நாளைய கவலை தீர்ந்தது. நீ வளமாக வாழ்வாய்'' என்று ஆசீர்வதித்து விட்டுத்தான் கற்ற அனைத்த வித்தைகளையும் இராமனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

''இராமா, நீ மாவீரன். இனி உன்னை எந்த ஒரு அரசனாலோ, அரக்கராலோ கொல்ல முடியாது. அத்துடன் தேவர்களாலும் வெல்லப்பட முடியாதவன் நீ. நான் சொல்லித் தந்த மந்திரங்கள் எந்த எதிரியையும் கொல்லும் சக்தி வாய்ந்தவை. வீரனே, பல்வேறு சக்திகளை உடைய தண்ட சகடம் என்ற ஆயுதத்தையும் தர்மசகடம், காலசகடம், விஷ்ணு சகடம் என்ற படைக்கலன்களையும் உனக்குத் தருகிறேன். இவற்றையும் அழிக்க யாராலும் முடியாது. அத்துடன் மோதகி, சிகரி என்னும் இரண்டு கதாயுதங்களையும் உனக்குக் கொடுக்கிறேன். அத்துடன் அறச் சங்கிலி, காலச் சங்கிலி, முகிற் சங்கிலிப் படைகளையும் தருகிறேன். அசுரர்களை அழிப்பதற்காகக் கங்காலம், காபாலம், கங்கணம் என்ற முச்சூலங்களையும் தருகிறேன். தர்ப்பணம், சோடனம், சந்தாபனம், விலாபனம் என்னும் படைகளையும் கருவேள் என்ற கணைகளையும், மோகன அஸ்திரத்தையும் கொடுக்கிறேன். இவை உன்னை எவ்வேளையிலும் பாதுகாக்கும். இவற்றை ஏவு முன் சொல்ல வேண்டிய மந்திரங்களையும் உனக்கு உபதேசிக்கிறேன்'' என்றார்.

அவற்றைக் கேட்டு மகிழ்ந்த இராமன் விசுவாமித்திரனின் பாதங்களைப் பணிந்து அவற்றைப் பெற்றுக் கொண்டான். அப்போது மந்திர தேவதைகள் வானில் இருந்து கீழே இறங்கி வந்து,''நாம் இனிமேல் தங்களின் கட்டளைப்படி இராமனுக்கு எப்பொழுதும் துணையாக இருப்போம்'' என்றன.

''இராமன் மிக்க மகிழ்வுடன் தேவதைகளைப் பார்த்தான். அவற்றின் உடல்கள் பொன்னைப் போலப் பளபளத்தன. அவற்றைப் பார்த்து மகிழ்ந்த இராமன்,''மிக்க நன்றி. இப்போது செல்லுங்கள். தேவையேற்படும் போது அழைக்கிறேன்'' என்றான். அத்தேவதைகள் வானில் சென்று மறைந்தன.



விசுவாமித்திரரின் யாகம்

அதன் பின் விசுவாமித்திரர் இராமனையும் இலட்சுமணனையும் ஓர் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்றார்.

''இராமா, திருமால் வாமனன் வேடந்தாங்கி மாபலிச்சக்கரவர்த்தியிடம் மூன்று அடி மண் கேட்டு அவன் கொடுக்க அண்டம் முழுவதையும் இருஅடியால் அளந்த பின் மூன்றாவது அடியை வைக்க இடமில்லாததால் அவனது தலை மீது வைத்து அவனை அழித்த பின் இவ் ஆச்சிரமத்தில் தான் தங்கியிருந்தார். இதன் பெயர் சித்தாச் சிரமம். அதனால் நானும் அந்தப் பகவானை வணங்கியபடி இந்த ஆச்சிரமத்தில் தங்கித் தவம் செய்து வருகிறேன்'' என்றார்.

''இராமா, நான் இந்த ஆச்சிரமத்தில் தங்கியிருந்து செய்து வரும் யாகத்தை அழிப்பதற்காக அசுரர்கள் பல தடவைகள் இங்கு வந்து யாகசாலையை அழித்துள்ளனர். இப்போது நான் யாகம் செய்யத் தொடங்கப்போகிறேன். அதை அழிக்க அசுரர்கள் வருவார்கள். அப்போது நீ அவர்களை அழித்தல் வேண்டும். இந்த ஆச்சிரமம் எனக்கு எப்படியானதோ அது போல உனக்கும் முக்கியமானதாகும்'' என்று மகிழ்வுடன் கூறிவிட்டு ஆச்சிரமத்துக்குள் மூவரும் சென்றனர். அங்கிருந்த முனிவர்கள் அவர்களை வரவேற்று வணங்கினர்.

அதன் பின் விசுவாமித்திரர் யாகத்தைத் தொடங்கினார். ''சுவாமி, அரக்கர்களால் எந்த இடையூறும் வராமல் காப்பேன். அதற்குத் தாங்கள் தந்த படைக்கலங்கள் உதவியாக இருக்கும்'' என்றான் இராமன்.

விசுவாமித்திரர் நம்பிக்கையுடன் யாகத்தைத் தொடர்ந்து நடத்தினார். ஆறு நாட்கள் கழிந்தன. எந்தவிதமான இடையூறுகளுமின்றி யாகம் நடைபெற்றது. இராமனும் இலட்சுமணனும் இரவு பகலாகக் கண் விழித்துக் காவல் செய்தனர். ஆறாவது தினம்

யாகத்தின் இறுதி நாள். ‘‘இலட்சுமணா, ஆறு நாட்களும் மிக்க அவதானத்துடன் காவல் காத்தோம். இன்று யாகம் நிறைவு பெறும் நாள் என்பது அசுரர்களுக்குத் தெரியும். அதனால் அதைக் குழப்பமுற்படுவர்’’ என்று இராமன் கூறிக்கொண்டிருந்த போது திடீரென்று வேள்வி மேடை தீப்பற்றி எரிந்தது. அதைக் கண்ட விசுவாமித்திரர்,‘‘இராமா, அசுரர்கள் வந்து விட்டனர். அவர்கள் மாய உடுக்கொண்டு யாகத்தை அழிக்க முற்படுவார்கள். அதற்கேற்ற வகையில் தாக்குதலை மேற்கொள்ளுங்கள்’’ என்றார்.

மாரீசனும் சுபாகுவும் வானில் நின்று மாயங்கள் பலவற்றையும் செய்து கொண்டிருந்தனர். வானம் இருண்டது. பெருமழை பொழிந்தது. போல பெரு வெள்ளம் யாகசாலையை நோக்கி விரைந்து வந்தது. அசுரர்கள் பலமாகக் கத்தியபடி யாகசாலையை நோக்கி ஓடி வந்தனர். வந்த அரக்கர்கள் யாகசாலைக்குள் இரத்த வெள்ளம் ஓடும் படி செய்தனர். புனிதமான யாகசாலை இரத்த வெள்ளத்தால் தோய்ந்தது. வானில் இருந்து இரத்த வெள்ளத்தைப் பெருகச் செய்த அசுரனை இராமன் கண்டான். அப்போது மாரீசனும் சுபாகுவும் யாகசாலையை நோக்கி ஓடி வந்தனர். அதைக் கண்ட இராமன் மானப் படைக் கருவியை எடுத்து மாரீசனின் மீது ஏவினான். அது காற்று மேகங்களைக் கலைப்பது போலப் பறந்து சென்று மாரீசனின் மார்பில் துளைத்து அவனைத் தூக்கிச் சென்று தூரஎறிந்தது. இருந்த போதும் அவனது தவவலிமையால் மாரீசன் இறக்கவில்லை. அதனால் கோபங்கொண்ட இராமன் பலம் வாய்ந்த ஆக்கேய அத்திரத்தை எடுத்துச் சுபாகுவை நோக்கி விட்டான். அது சுபாகுவின் நெஞ்சைப் பிளந்தது. அதைக் கண்ட அரக்கர் கூட்டம் தப்பினால் போதும் என்று தலைதெறிக்க ஓடியது. எந்தவிதமான இடையூறுகளுமின்றி யாகம் இனிது நிறைவுபெற்றது. அதைக் கண்டு மகிழ்ந்த தேவர்கள் வானில் நின்று பூமழை பொழிந்தனர்.

யாகம் விரும்பியவாறு முடிந்ததைக் கண்ட விசுவாமித்திரர் இராமனின் அருகில் வந்து,‘‘இராமா, நீயும் உனது தம்பி இலட்சுமணனதும் பெரும் வீரத்தால் யாகம் நல்லபடி முடிந்தது. நான் எதிர்பார்த்த பயனை அடைந்ததால் மிக்க மகிழ்வுடன் இருக்கிறேன். நீ எதிர்காலத்தில் தீமைகளை அழித்து நன்மைகள் உண்டாகச் செய். என்றும் எனது ஆசி உனக்குண்டு’’ என்று வாழ்த்தினார். யாகம் செய்த முனிவர்கள் அனைவரும் இராமனையும் இலட்சுமணனையும் பாராட்டி வாழ்த்தி ஆசி வழங்கினர்.

## மிதிலைப் பயணம்

யாகம் செய்யவிடாமல் தொல்லைகள் பலவும் கொடுத்து வந்து அசுரர்கள் அழித்தமையால் மிக்க மகிழ்வுடன் இருந்தார் விசுவாமித்திரர். இராமனும் இலட்சுமணனும் அந்நதியின் அழகில் மெய்மறந்து ரத்தனர். அப்போது ஒரு தூதுவன் வந்து விசுவாமித்திரரிடம் ஓர் ஓலையைக் கொடுத்தான். அவ்வோலை மிதிலாபுரி மன்னன் ஜனகனிடமிருந்து வந்திருந்தது. அதில்,‘‘எனது மகள் சீதைக்குத் திருமணம் செய்ய எண்ணியுள்ளேன். அதற்குத் தாங்கள் நேரில் வந்து வாழ்த்த வேண்டும்’’ என்றிருந்தது.

அவ்வோலையைப் படித்த விசுவாமித்திரர் மிக்க மகிழ்வுடன் இராமனையும் இலட்சுமணனையும் அழைத்துக் கொண்டு மிதிலைக்குப் புறப்பட்டார்.

அவர்கள் செல்லும் வழியில் ஆறுகள், வாய்க்கால்கள், கற்பாறைகள், அடர்ந்த காடுகள் தென்பட்டன. அவற்றை மிகவும் சிரமத்துடன் கடந்து கொண்டிருந்தனர். அப்படிச் செல்லும் வழியில் ஒரு கற்பார் தடையாக இருந்தது. அதன் மேல் ஏறிக்கடக்க இராமன் தனது காலை வைத்ததும் அக்கற்பாறை ஓர் அழகிய பெண்ணாக மாறியது. அப்பெண் இராமனது பாதங்களைப் பற்றினாள். இராமனும் இலட்சுமணனும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அந்த நிகழ்வைக் கண்ட விசுவாமித்திரர் இராமனுக்குச் சொன்னார், ‘‘இந்தப் பெண்ணின் பெயர் அகலிகை. தேவர் உலகில் வாழும் கௌதம முனிவரின் பிரியபத்தினி. இவள் மிகவும் அழகானவள். அவளைப் போல ஒரு பேரழகி உலகில் இல்லை. அவளின் மீது இச்சை கொண்ட இந்திரன், நள்ளிரவு நேரம் வந்து சேவல் போலக் கூவ கௌதம முனிவர் விடிந்து விட்டதென்று நினைத்து நீராடக் குளத்திற்குச் சென்றார். அப்போது கௌதம முனிவரின் உருவில் வந்த இந்திரன் அகலிகையுடன் கூடியிருந்தான். குளக்கரைக்குச் சென்ற கௌதம முனிவர் குளத்தைப் பார்த்ததும் இன்னும் பொழுது விடியவில்லை. ஏதோ சூழ்ச்சி நடக்கிறது என்று நினைத்துத் தனது பன்னசாலைக்குத் திரும்பியபோது இந்திரனது செயல்

அம்பலமானது. அதனால் கோபம் கொண்ட கௌதம முனிவர் தனது மனைவியான அகலிகையைக் கல்லாக மாறும்படி சபித்தார். கல்லாக மாறி இருந்த அகலிகை உனது புனிதமான பாதம் பட்டதும் சாப நீக்கம் அடைந்தாள்'' என்றார் விசுவாமித்திரர்.

''சாப நீக்கம் பெற்ற அகலிகை மூவரையும் வணங்கி விடை பெற்றுத் தேவ உலகம் சென்றாள்.

''பின்னர் மூவரும் மிதிலையை நோக்கிச் சென்றனர். போகும் போது இராமன் விசுவாமித்திரரிடம் கேட்டான்,''தேவரீர், நாம் அயோத்திக்குச் செல்லாது ஏன் மிதிலைக்குச் செல்கிறோம். தயவு செய்து அதைச் சொல்லுங்கள்'' என்றான்.

''இராமா, மிதிலாபுரியின் அரசன் ஜனகன். அவனுக்குச் சீதை என்றொரு மகள் இருக்கிறாள். அவள் பேரழகி. நல்ல குணவதி. அவளுக்கு அழகும் ஆண்மையும் நிறைந்த மாவீரன் ஒருவனை மணாளனாகத் தேர்ந்தெடுக்கவுள்ளார். அவர் தனுர் யாகம் என்றொரு யாகத்தைச் செய்கிறார் யாக முடிவில் தனது மகளைத் திருமணம் செய்யவுள்ளவனைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு போட்டி வைக்கிறார். அவரிடம் 'சிவதனுசு' என்றொரு பலமிக்க வில் உண்டு. அவ்வில்லை வளைத்து ஒடித்தல் வேண்டும். அவ்வில்லை ஒடிப்பவனுக்கே தனது மகளான சீதையைத் திருமணம் செய்து வைப்பேன் என்று கூறுகிறார். அவ்வைபவத்தில் கலந்து கொள்ளவே நாம் செல்கிறோம்'' என்றார் விசுவாமித்திரர்.

இராமனும் இலட்சுமணனும் விசுவாமித்திரரும் ஜனகனின் அரண்மனையை அடைந்தனர். முனிவரின் வருகையை அறிந்த ஜனகன் ஓடோடி வந்து விசுவாமித்திரரை வணங்கி வரவேற்றனர். விசுவாமித்திரர் இராமனையும் இலட்சுமணனையும் ஜனகனுக்கு விசுவாமித்திரர் அறிமுகம் செய்து வைத்தார்.

யாக மண்டபத்துள் பல்வேறு நாடுகளின் அரசர்களும் பிரதானிகளும் முனிவர்களும் இருந்தனர். யாக மண்டபம் இந்திரலோகம் போல அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் நடுவே வில்லு வைக்கப்பட்டிருந்தது. அந்த நாட்டின் மன்னனான ஜனகன் அங்கு வந்து சொன்னான்,''சபையோர்களே, சிவதனுசு என்று கூறப்படும் இந்த வில் மிகவும் வலிமை உடையது. இதனைத் தூக்கி நிறுத்தி வளைத்து நானேற்றுபவனுக்குத் தான் எனது மகளான சீதையை மணம் முடித்து வைப்பேன். அரசர்கள் வந்து முயன்று பார்க்கலாம்'' என்று கூறிவிட்டு ஜனகன் தனது சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

வில்லின் நீள அகலத்தைப் பார்த்த பல அரசர்கள் திகைத்துப் போனார்கள். சிலர் வில்லை வந்து பார்த்து விட்டுச் சென்றனர். சிலர் வந்து தூக்கினர். அவர்களால் அதைத் தூக்க முடியவில்லை. சிலர் எடுத்து நாண் தொடுக்க முயன்றனர். போட்டிக்கு வந்திருந்த எவராலும் வில்லைத் தூக்கக் கூட முடியவில்லை. அதனால் மன்னனான ஜனகன் மிக்க துயரமடைந்தான்.

அப்போது விசுவாமித்திரர் இராமனைப் பார்த்துச் சொன்னார்,''மகனே, வில்லை எடுத்து நாணைப் பூட்டி இலக்கை எய்து விழுத்து'' என்றார்.

இராமன் விசுவாமித்திரரை வணங்கினான். பின் சபையோரை வணங்கினான். அதன் பின் சிவதனுசு என்ற வில்லைத் தொட்டு வணங்கினான். அதன் பின் வில்லை மிகவும் இலகுவாகத் தூக்கி நிறுத்தி நாணைப் பூட்டி இழுத்தான். பெரும் சத்தத்துடன் வில் முறிந்து இரண்டாக நிலத்தில் விழுந்தது. அதைக் கண்ட சபையோர் திகைத்துப் போனார்கள். எல்லா அரசர்களாலும் தூக்க முடியாதிருந்த அந்த வில்லை இராமன் எடுத்து உடைத்தது அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஜனகமகாராசா மிக்க மகிழ்வுடன் எழுந்து உப்பரிகைக்குச் சென்று தோழிகளுடன் இருந்த சீதையை அழைத்து வந்தார். அவள் இராமனது முகத்தைப் பாராது நிலத்தைப் பார்த்த படி நின்றாள். அவளது முகம் நாணத்தால் சிவந்திருந்தது.

''இராமா, இவள் எனது தவப்புதல்வி சீதை. போட்டியில் வென்ற உனக்கே இவள் உடுத்துடையவள். உனது குலப்பெருமையை நான் அறிவேன். பெருமை மிக்க உயர்ந்த பண்புகளை உடைய உன்னைக் கணவனாக அடைய அவள் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். உனது தந்தையான தசரதச் சன்னரவர்த்திக்கு நான் செய்தி அனுப்புகிறேன்.

உயர்ந்த பண்பாடுகளை உடைய உனது குலப்பெருமையை எனது மகள் காப்பாற்றுவாள்'' என்று மகிழ்வுடன் ஜனகன் கூறினான்.

ஜனகன் அனுப்பிய செய்தியை அறிந்து மட்டில்லாத மகிழ்ச்சியடைந்த தசரதன் தனது ஏனைய புத்திரர்களுக்கும் பெண் தேடி இராமனது சுயம்பரநாளன்று அவர்களுக்கும் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்தான்.

அடுத்து வந்த சுபதினத்தில் இராமன் சீதையைத் திருமணம் செய்தான். இலட்சுமணன் ஊர்மிளாவைத் திருமணம் செய்தான். பரதன் மாண்டவியையும், சத்துருக்கன் சுருதகீர்த்தியையும் திருமணம் செய்தனர்.

சில நாட்கள் மிதிலையில் தங்கியிருந்த இராமனும் சீதையும் சுபநாளில் அயோத்திக்கு வந்தனர். அவர்கள் அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது வழியில் பரசுராமரைச் சந்தித்தனர்.



பரசுராமரைக் கண்டதும் தசரதனுக்கு மனதில் அச்சம் தோன்றியது. அவரால் இராமனுக்கு ஏதாவது ஆபத்து நேருமோ எனப் பயந்தார்.

பரசுராமர் தவம் செய்து பல அரிய வரங்களைச் சிவபெருமானிடம் பெற்றவர். மிகுந்த பலசாலி. எவ்வேளையிலும் கோடரியைக் கையில் வைத்திருப்பவர். அவரைக் கண்டதும் பகைவர்கள் நடுநடுங்குவர். அரசர்கள் அவரை வணங்கி அவருக்கு வேண்டியவற்றைச் செய்வர். அவர் காரணமின்றி யாரையும் சந்திக்கமாட்டார். அவர் வந்தது ஏதோ ஒரு அசாதாரண நிகழ்வென்று தசரதன் பயந்தான்.

பரசுராமர் தசரதனைக் கவனிக்காது இராமனிடஞ் சென்று,''இராமா, மிதிலை அரசனின் மண்டபத்தில் வலிமை மிக்க சிவதனுசு என்ற வில்லை எடுத்து ஒடித்ததாகக் கேள்விப்பட்டேன். என்னிடம் 'விஷ்ணு தனுசு' என்ற பலம் மிக்க வில் உள்ளது. உன்னால் அதை வளைத்து நானேற்ற முடியுமா? முடிந்தால் செய்து காட்டு. இல்லாவிட்டால் நீ என்னுடன் போரிட வேண்டும். மறுத்தால் உன்னையும் உன்னுடன் கூட வந்தவர்களையும் அழித்து விடுவேன். முடிந்தால் வில்லை எடுத்து நானேற்று. இல்லாவிட்டால் என்னுடன் போரிடு'' என்று கர்ச்சித்தார் பரசுராமர்.

அவரது சொற்களைக் கேட்டுத் தசரதன் பயந்து நடுநடுங்கினான். பரசுராமனை வெல்ல முடியாது. அவன் மாவீரன். அத்துடன் பல வரங்களைப் பெற்றவன். இராமனுடன் கூட வந்தவர்கள் பயத்தால் நடுநடுங்கினர்.

தசரதன் பரசுராமனின் பாதங்களைப் பணிந்து,''மகா ஞானியே, இராமன் சிறுவன். பலமில்லாதவன். அவனை எதுவும் செய்து விடாதீர்கள்'' என்று கெஞ்சினான்.

பரசுராமன் தசரதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவன் இராமனுக்குகெதிரே வந்தான். இராமன் தேரை விட்டு இறங்கிப் பரசுராமரின் பாதங்களைப் பணிந்தான். பரசுராமனின் மிரட்டலுக்கு அவன் அஞ்சவில்லை.''முனிவரே, தங்களை வணங்கி ஆசிபெற வேண்டும் என்று நெடுநாளாக நினைத்திருந்தேன். இன்று எதிர்பாராதவாறு தங்களின் தரிசனம்

கிடைத்ததால் மிக்க மகிழ்வடைந்தேன். எங்கே உங்களது வில் அதைக் காட்டுங்கள்'' என்று கேட்டான்.

பரசுராமர் விஷ்ணு தனுசு என்ற வில்லை எடுத்துக் கொடுத்தார். அதைப் புன்சிரிப்புடன் பெற்றுக் கொண்ட இராமன் மிகவும் எளிதாக அதைத் தூக்கி நாணை இழுத்தான். உடனே வில் வளைந்து இரண்டாக ஒடிந்தது. அதை நிலத்தில் போட்ட இராமன் பரசுராமரை மீண்டும் வணங்கினான். கூட வந்தவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். பரசுராமன் இராமனின் அருகே வந்து, ''நீ உண்மையான வீரன். பெரும்பலசாலி என்பதை ஒப்புக் கொள்கிறேன். உன் எதிர்காலம் சிறக்க எனது வாழ்த்துக்கள்'' எனக் கூறி மறைந்தார்.

மிகுந்த பயத்துடன் நடுங்கிக் கொண்டிருந்த தசரதன் பரசுராமன் சென்றதும் மிக்க மகிழ்வுடன் வந்து இராமனைப் பாராட்டினான்.

## கூனியின் சூழ்ச்சி

அயோத்திக்கு வந்த இராமனையும் சீதையும் அரண்மனையில் முனிவர்களும் அந்தணர்களும் அறிஞர்களும் மக்களும் மிகவும் மகிழ்ந்து வரவேற்றனர். நகர வீதிகள் யாவும் அலங்கரிக்கப்பட்டன. வீதிக்கு வீதி அலங்கார வளைவுகளும் மகர தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. மக்கள் மகிழ்வுடன் ஆடிப்பாடித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தசரதன் தனது முதுமையை நினைத்து இராமனுக்குப் பட்டாபிசேகம் செய்ய விரும்பினான். பெரியவர்களும் அறிஞர்களும் மந்திரி பிரதானிகளும் அந்தணர்களும் முனிவர்களும் இராமனுக்கு முடிசூட்டி வைக்கும் படி தசரதனை வேண்டினர். தசரதன் அதற்கு ஒப்புக்கொண்டு முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மந்திரிமார்களுக்குக் கட்டளையிட்டான்.

முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் பெரும் எடுப்பில் நடைபெற்றன. நாடுமுழுவதும் மகிழ்ச்சியில் குதூகலித்தது. அயல் நாட்டரசர்களும் பிரதானிகளும் முனிவர்களும் அதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

இராமனுக்கு முடிசூட்டப்படுவதை அறிந்த மந்தரை என்ற கூனி மிகுந்த கோபத்துடன் கைகேயிடம் வந்தாள். அவள் தான் கைகேயின் வளர்ப்புத் தாய். அவள் எந்நேரமும் கைகேகியுடன் இருந்து அவளை வசியப்படுத்தி வைத்திருந்தாள். கூனியின் சொல்லைக் கைகேகி தட்டமாட்டாள்.

ஏதாவது சூழ்ச்சி செய்து இராமன் அரசனாவதைத் தடுக்க வேண்டும் என்பதே கூனியின் எண்ணமாகும். தசரதன் கைகேகி மீது மிகுந்த அன்பு கொண்டவன். அவளைக் கேளாது அரச விடயங்கள் எதையும் செய்யமாட்டான். இது கூனிக்குத் தெரியும். அதனால் அவள் நம்பிக்கையோடு கைகேகியின் அறைக்குச் சென்றாள். கைகேகி தனது மகன் பரதனை விட இராமனின் மீது பேரன்பு கொண்டவள்.

கூனி கைகேகியிடம் வந்து,''இராமனுக்கு முடிசூட்டப் போகிறார்களாம். நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது'' என்று கூறினாள்.

அதைக் கேட்ட கைகேகி மிகுந்த மகிழ்வுடன், ''அப்படியா இராமன் முடிசூட்டப்படுவது தான் நியாயம். நல்ல முடிவு. நான் மிக்க மகிழ்வுடன் இருக்கிறேன்'' என்று கூறித் தான் அறிந்திருந்த பெறுமதியான முத்து மாலையைச் கழற்றிக் கூனியின் கழுத்தில் அணிவித்தாள்.

கூனி அம்மாலையைக் கழற்றி தரையில் வீசினாள். மாலை அறுந்து அதில் பதிக்கப்பட்டிருந்த முத்துக்கள் தரையில் சிதறின.

கைகேகி கோபத்துடன் கூனியைப் பார்த்தாள். அவளுக்கு ஆத்திரமாக இருந்தது. அதைக் கவனிக்காது கூனி சொன்னாள், ''முட்டாள்ப் பெண்ணே, உன்னிடத்தில் அதிக அன்பு உள்ளவன் போல நடித்து உனது கணவனான தசரத மன்னன் உன்னை நன்றாக ஏமாற்றி விட்டார். அதையறியாத நீ மகிழ்வுடன் எனக்கு முத்து மாலையைப் பரிசளிக்கிறாய். உனது

மகனான பரதன் மீது பெரும் மதிப்பும் அன்பும் கொண்டவள் நான் என்று உனக்குத் தெரியும். அதனால் பரதனுக்குக் கேடுவர நான் விடமாட்டேன். எனது உயிரைக் கொடுத்தாவது தடுத்து நிறுத்துவேன்'' என்று கொதித்தாள் கூனி.

''வீண்கதையைக் கதைக்காதே. இராமன் எனது மூத்த மகன். அவன் மீது நான் பெரும் அன்பை வைத்திருக்கின்றேன். அவன் தான் மூத்தவன். மூத்தவன் இருக்க இளையவனுக்கு எப்படி முடிசூட்டுவது? அதை நாட்டில் உள்ள பெரியவர்களும் அரசரும் விரும்பமாட்டார்கள். அது தான் அரச மரபு'' என்றாள் கைகேகி.

அதைக் கேட்ட கூனியின் கோபம் அதிகரித்தது, ''உனக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே நான் வாழ்கிறேன். இராமன் முடிசூடி அரசனாகி விட்டால், இந்த நாடு முழுவதும் அவனுக்குச் சொந்தமாகி விடும். கோசலைக்கு அரச அந்தஸ்து கிடைக்கும். அதனால் அவள் உன்னை விட அதிகாரமுள்ளவளாக மாறிவிடுவாள். அவளது அனுமதியின்றி நீயோ அல்லது உனது மகனான பரதனோ எதுவும் செய்ய முடியாது. இப்போ தசரதனின் மனைவி நீ. பட்டத்து ராணி. பரதன் அரசனின் மகன். இது இராமன் முடிசூடிய பின்பு நிலைக்குமா என்று யோசித்துப் பார். எதையும் யோசிக்காது இருந்தாயேயானால் பின்பு கவலைப்பட வேண்டிய நிலை உருவாகும்'' என்றாள் கூனி. அத்துடன் பல மணி நேரமாகப் பலவற்றை எடுத்துரைத்தாள். அதனால் கைகேகியின் மனம் தளர்வுற்றது. அவள் சொல்வதிலும் உண்மை இருப்பதாக நினைத்தாள் அதனால் இராமன் மீதும் கோசலை மீதும் தசரதன் மீதும் அவளுக்குக் கோபமும் வெறுப்பும் வந்தது.

''நீ சொல்வது சரி தான். இராமனுக்கு முடிசூட்டுவதாகத் தீர்மானித்து அதற்கான செயற்பாடுகள் தீவிரமாக நடைபெறுகின்றன. இந்நிலையில் அதை எப்படித் தடுத்து நிறுத்துவது'' என்று கேட்டாள் கைகேகி.

''இராமனுக்கு முடிசூட்ட நீ சம்மதிக்கக் கூடாது. பரதனுக்கு முடிசூட்டப்படல் வேண்டும். இராமன் காட்டிற்குச் செல்லல் வேண்டும்'' என்றாள் கூனி.

''இது நடக்கக் கூடிய விடயமா?'' ஏமாற்றத்துடன் கேட்டாள் கைகேகி.

''இரவு உன்னோடு முடிசூட்டு விழாவைப் பற்றிக் கலந்துரையாட அரசர் வருவார். அப்போது இரண்டு வரங்களைக் கேள்'' என்றாள் கூனி.

''இரண்டு வரங்களா?'' அதிசயப்பட்டாள் கைகேகி.

''முன்பு ஒருமுறை தேவர்களுக்காக அசுரர்களுடன் தசரதன் போர் செய்த போது நீ தசரதனுக்கு உதவி செய்தாய். அதனால் மகிழ்ந்த தசரதன் உனக்கு இரண்டு வரங்கள் தருவதாக ஒப்புக்கொண்டார். நீ உடனே வரங்களைக் கேளாது சமயம் வரும் போது கேட்கிறேன் என்றாய். இப்போ அதற்கான வேளை வந்துள்ளது. தயங்காமல் கேள்'' என்றாள் கூனி.

கூனி கூறியபடி இரவு தசரதன் வந்ததும் கேட்பதென்று முடிவுக்கு வந்தாள் கைகேகி.

இரவு வேளை வந்தது. தசரதன் முடிசூட்டு விழாவுக்குத் தேவையானவற்றைச் செய்து விட்டு அதைக் கைகேகியிடம் கூறுவதற்காக வந்தான்.

இரவு வேளையில் தன்னை நன்றாக அலங்கரித்து மகிழ்வுடன் கணவனை வரவேற்கும் கைகேகி அன்று அலங்காரம் எதுவும் செய்யாது படுத்திருந்தாள். அவளின் அங்கங்களில் எந்த ஆபரணங்களும் இருக்கவில்லை. ஆபரணங்கள் தரையில் சிதறிக் கிடந்தன. தலை கலைந்திருந்தது. முகம் வீங்கிக் கறுத்திருந்தது.

கைகேகியின் அந்தப்புரம் இருட்டாக இருந்தது. அதனால் கலவரப்பட்ட தசரதன் ''கைகேகி'' என்று அழைத்தான். பதில் இல்லை, அதனால் மீண்டும்,'கைகேகி' என்று அழைத்தான். பதில் சொல்லாது கைகேகி விக்கி விசும்பி அழுதாள்.

தசரதன் அவளின் அருகே சென்று,''கைகேகி, இன்று உனக்கு என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்? சொல் சொல்'' என்று அவசரப்பட்டான். அவனின் குரலில் பதட்டமும் கவலையும் தெரிந்தது.

கைகேகி ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதைப் போல விம்மி விம்மி அழுதாள். பின்,''உங்களுக்கு என் மீது உண்மையான அன்பிருந்தால் என்னைக் கேளாது எப்படி இராமனுக்கு முடிசூட்டத் தீர்மானிப்பீர்கள்'' என்றாள் கோபத்துடன்.

''ஓ அதுவா. பிழை தான். அதற்காகவா அழுகிறாய்?'' என்று பாசத்துடன் கேட்டான் தசரதன்.

அதற்காகத் தான் அழுகிறேன். சில வருடங்களுக்கு முன்பு எனக்கு இரண்டு வரங்கள் தருவதாக வாக்குத் தந்தீர்கள்''

''ஓம் நினைவிருக்கிறது. இப்போது வேண்டுமானாலும் கேள் தருகிறேன்'' என்றான் தசரதன்.

''இப்போது தருவீர்களா? எதைக் கேட்டாலும் தருவீர்களா? பின்பு பேச்சுமாறக் கூடாது'' என்றாள் கைகேகி.

''எனது வம்சமே பேச்சு மாறுவதில்லை என்று உனக்குத் தெரியும். பிறகேன் சந்தேகப்படுகிறாய். உடனே கேள்'' என்றான் தசரதன்.

''எனக்குத் தெரியும் நீங்கள் சத்தியம் தவறாதவர் என்று. இரண்டு வரங்களில் ஒன்று எனது மகன் நாடாள வேண்டும். அதே சமயம் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டும்''

அதைக் கேட்டுத் தசரதன் திகைத்துத் திகிலடைந்து போனான். இடியொன்று காது வழியாக நெஞ்சுள் இறங்கியதைப் போல இருந்தது.

''கைகேகி நீயா இப்படிப் பேசுகிறாய்? இராமன் தான் எனது மூத்த மகன். பரதனில் பார்க்க இராமன் மீது தான் அதிக பாசம் வைத்துள்ளேன் என்று அடிக்கடி சொல்வாயே அது நடிப்பா?'' கவலையால் பேச முடியாது தவித்தான் தசரதன்.

''எனக்கு நான் கேட்ட இரண்டு வரங்களையும் தருகிறீர்களா இல்லையா? தரவிருப்பமில்லாவிட்டால் சொல்லுங்கள்'' என்றாள் கைகேகி.

''நான் இல்லை என்று சொல்லவில்லை. இராமன் பற்றற்றவன். அவனே பரதனுக்கு முடிசூட்டி வைப்பான். ஆனால் என் உயிரான இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே. அவனைப் பிரிந்து ஒரு கணம் கூட நான் உயிர் வாழ மாட்டேன். தயவு செய்து இராமனைக் காட்டுக்கு செல்லச் சொல்லாதே'' இரந்தான் தசரதன்.

கைகேகியின் மனம் உறுதியடைந்தது. எது நடந்தாலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று நினைத்தாள்.

''இராமா.. இராமா.. என் உயிரே உன்னைப் பிரிந்தால் நான் உயிர் வாழமாட்டேன். கடவுளே கைகேகி இரக்கப்படமாட்டாளா?'' என்று தடுமாறியபடி நிலத்தில் சாய்ந்தான் தசரதன். தசரதனது கெஞ்சல், மன்றாட்டம், அழுகை எதுவும் கைகேகியின் மனதை இளகப் பண்ணவில்லை. அவள் தனது கொள்கையில் உறுதியாக இருந்தாள்.

## பட்டாபிசேகத்திற்கான ஆயத்தம்

பட்டாபிசேகம் நடைபெறுவதற்கான ஆயத்தங்களை மந்திரி சுமந்திரனும் வசிட்ட முனிவரும் செய்து கொண்டிருந்தனர். அயல் நாட்டரசர்களும் மந்திரி பிரதானிகளும் முனிவர்களும் மக்களும் வரத் தொடங்கினர்.

இராமன் மங்கல நீராடினான். பின் ஆடை அணிகளை அணிந்து கொண்டு தாயான கோசலையிடம் வந்து வணங்கி ஆசி பெற்றான். பின் தந்தையின் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

தசரதன் கைகேகியின் அந்தப்புறப் படுக்கை அறையின் தரையில் சுயநினைவின்றிக் கிடந்தான். கைகேகி அரண்மனை வைத்தியருக்குக் கூட அதைச் சொல்லவில்லை. தசரதன் இராமன் மீது அதிக பாசம் கொண்டவன். அதனால் மயக்கம் தீர்ந்து எழுந்தால் இராமனைக் காட்டுக்குச் செல்ல அனுமதிக்க மாட்டான் என்று கைகேகி நினைத்தாள். அதனால் மந்திரியான சுமந்திரரை அழைத்தாள்.

''மந்திரியாரே, முன்பு மன்னர் எனக்குத் தருவதாகக் கூறிய வரங்கள் இரண்டையும் கேட்டேன். அதனால் அவர் அதிர்ச்சியடைந்து மயங்கிவிட்டார். ஆவன செய்யுங்கள்'' என்றாள் கைகேகி.

மந்திரி சுமந்திரர் மிகுந்த வருத்தம் கொண்டார். வரங்களைக் கேளுங்கள். பரதன் நாட்டை ஆளட்டும். அதற்காக இராமன் காட்டுக்கு ஏன் செல்ல வேண்டும்? இராமன் காட்டுக்குச் சென்றால் மன்னரின் உயிர் பிரிந்து விடும். அதைக் கவனத்தில் கொள்ளுங்கள்'' என்றார் மந்திரி.

''இது சம்பந்தமாகயாரின் கருத்துக்களையும் நான் கேட்கமாட்டேன். இப்போது சென்று இராமனை அழைத்து வாருங்கள்'' என்றாள் கைகேகி.

''சரி மகாராணி'' என்ற சுமந்திரர் இராமனிடம் சென்று கைகேகி தன்னைச் சந்திக்கச் சொன்ன விடயத்தைத் தெரிவித்தார்.

தான் முடிசூட்டப்படுவதைக் கேள்விப்பட்ட சிற்றன்னையாகிய கைகேகி தன்னை ஆசிர்வதிக்க அழைக்கிறாள் என்ற மகிழ்வுடன் இராமன் கைகேகியின் அந்தப்புரத்திற்கு வந்தான். அங்கு நின்ற கைகேகியைக் கண்டதும்,''அன்னையே, என்னை ஆசீர்வதியுங்கள் என்று அவளது பாதங்களைத் தொட்டு வணங்கினான். தன்னை வணங்கி விட்டு மகிழ்வுடன் நின்ற இராமனைப் பார்த்ததுக் கைகேகி சொன்னாள்,''இராமா, உனக்குப் பதிலாக உன் தம்பிக்கு முடிசூட்ட வேண்டும். அத்துடன் நீ பதின்நான்கு வருடம் வனவாசம் செல்ல வேண்டும்'' என்றாள் கைகேகி.

''இது உங்கள் விருப்பமா?'' என்று கேட்டான் இராமன்.

''இல்லை மகனே, இது உன் தந்தையின் விருப்பம். இதை அவர் கட்டளையாகச் சொன்னவர். அதை நேரில் உன்னிடம் சொல்லத் தயங்குகிறார். அப்படிச் சொன்னால் உனது தாய் கோபிப்பாள் என்றும் அஞ்சுகிறார். அதனால் என்னைச் சொல்லச் சொன்னார். அதனால் தான் சொல்கிறேன். எனக்கு விருப்பமில்லை'' என்றாள் கைகேகி.

''அப்படியா? மிக்க மகிழ்ச்சி. இது தந்தையின் கட்டளையாக இருந்தாலும் சரி, உங்களது விருப்பமாக இருந்தாலும் சரி அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். அது எனது கடமையாகும். எனது தம்பி பரதன் பெரும் வீரன். நாட்டை ஆளக்கூடிய தகுதியுள்ளவன். அதனால் நான் இப்பொழுதே புறப்படுகிறேன்'' என்று சொல்லி விட்டுச் சென்றான் இராமன்.

அச்செய்தி காட்டுத் தீயைப் போல நகரமெங்கும் பரவியது. பின் அயல்நாடுகளுக்கும் பரவியது. நாட்டு மக்களின் மகிழ்ச்சி அற்றுப் போனது. மக்கள் தமது வீட்டையும் வீதிகளையும் அலங்கரிப்பதை நிறுத்தினர். ஆடல் பாடல் இசை நிகழ்ச்சிகள் யாவும் நிறுத்தப்பட்டன. மக்கள் மிகுந்த துயரத்துடன் நடமாடினர்.

கைகேகியிடம் விடைபெற்ற இராமன் தாயிடம் வந்து நடந்தவற்றைச் சொல்லி வணங்கி ஆசி பெற்று விடை பெற்றான். தசரதன் நீதிக்குமாறாகக் கைகேகியுடன் சேர்ந்து திட்டமிட்டுச் செயலாற்றுகிறான் என்று கோசலை நினைத்துப் பெருந்துன்பப்பட்டாள். எல்லாம் கூனியின் சதியென்றும் கூனியின் சொற்படி கைகேகி நடக்கிறாள் என்றும் அவள் நினைத்தாள்.

தாயிடம் விடைபெற்ற இராமன் அரசர்க்குரிய உடைகளைக் களைந்து விட்டுச் சாதாரண குடிமகனது உடைகளை அணிந்து கொண்டான்.


இராமனுடன் சீதையும் புறப்பட்டாள்

இராமனின் தவக்கோலத்தையும் சாதாரண உடையையும் கண்ட சீதைக்குத் துக்கம் பொங்கியது. அரசகுமாரனான அவனை அந்தக் கோலத்தில் பார்த்து அழுதாள் சீதை.

''நாதா உங்களைப் பிரிந்து ஒரு கணம் கூட நான் இங்கு இருக்கமாட்டேன். நீங்கள் இருக்கும் இடம் தான் எனக்குச் சொர்க்கம். அதனால் நானும் உங்களுடன் காட்டுக்கு வருகிறேன்'' என்றாள் சீதை.

சீதை அப்படிச் சொல்வாள் என்று தெரிந்த இராமன் சொன்னான், ''எனது பிரியமான மனைவியே, நீ அரச வம்சத்தில் பிறந்து சகல சௌபாக்கியங்களுடனும் வளர்ந்தவள். காடு கரடுமுரடானது. பற்றைகள், முட்கள், கொடிய பாம்புகள், கொடிய மிருகங்கள் நிறைந்தது. அதனால் நீ பெருந்துன்பப்படுவாய். அத்துடன் அரண்மனையில் வாழ்ந்த நீ குடிசை அமைத்து வாழ முடியுமா? பனியும், மழையும், கோர வெயிலும் வருத்தும். ஆகையால் அரண்மனையிலேயே தங்கியிரு'' என்றான்.

அவளது பெற்றோரும் அதையே சொன்னார்கள். யார் எதைச் சொல்லியும் அவள் கேட்கவில்லை. அவள் சொன்னாள்,''நீங்கள் இருக்கும் இடம் தான் எனக்கு அயோத்தி. ஒரு பெண் கணவனைப் பிரிந்து வாழ்வது கொடுமையிலும் கொடுமை. அரண்மனையில் வாழ்ந்தோம். இனிக்காட்டில் வாழ்வோம். சில நாட்கள் பழகினால் அது வழக்கமாகி விடும். அதனால் நானும் உங்களுடன் வருவேன். தயவு செய்து என்னையும் அழைத்துச் செல்லுங்கள்'' என்றாள் சீதை.



இராமனும் சீதையும் காட்டுக்குச் செல்லப்போகும் செய்தியை அறிந்து துடிதுடித்துப் போனான் இலட்சுமணன். கைகேகியையும் தசரதனையும் கடுமையாகத் தண்டிக்கப்போகிறேன் என்று சூளுரைத்தான்.

அதையறிந்த இராமன் இலட்சுமணனிடம் வந்து கூறினான்,''தம்பி, கடவுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காரணத்திற்காகத் தான் படைத்துள்ளார். அவர்கள் கருவில் இருக்கும் போதே வினைப்படி அவர்களுக்கு உடலும் கடமைகளும் வழங்கப்படுகின்றன. அத்துடன் அவர்களது வாழ்க்கை முறையும் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. எனது விதி அது.

அதை வெல்ல முடியாது. எமக்கு பரிசோ தண்டனையோ வேறு எவராலும் வழங்கப்பட மாட்டாது. எமது விதிப்படி யாவும் நடக்கும். கவலைப்படாதே'' என்றான்.

இலட்சுமணன் இராமனின் மீது அளவில்லாத பாசம் கொண்டவன். அண்ணன் காட்டில் பெருந்துன்பப்பட தான் அரண்மனையில் இன்பமாக வாழ்வதா என நினைத்துத் தானும் அவர்களுடன் செல்ல விரும்பினான்.

இராமனும் மந்திரிமாரும் முனிவர்களும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவற்றைக் கேளாது தாயான சுமித்திரையிடமும் மனைவியான ஊர்மிளாவிடமும் அனுமதி பெற்று இராமனைப் போலத் தவக்கோலம் பூண்டு இராமனுடன் புறப்பட்டான் இலட்சுமணன்.

அவர்கள் தவக்கோலம் பூண்டு வீதிவழியாகக் காட்டுக்குச் செல்லும் போது நாட்டு மக்கள் கதறி அழுதனர். ஆயிரக்கணக்கானோர் அவர்களின் பின் சென்றனர். பலர் இராமனது காலைப் பிடித்துக் கொண்டு காட்டிற்குச் செல்ல வேண்டாமென்று மன்றாடினர்.

அயோத்தி நகர மக்கள் தன் மீது கொண்ட அன்பை நினைத்து நெகிழ்ந்து போனான் இராமன். அப்போது அவனுக்குக் கவலை உண்டானது. அதைச் சிரமப்பட்டு அடக்கினான்.

''என் அருமை மக்காள், நீங்கள் என்மீது வைத்த அன்பை நினைக்க எனக்குப் பெருமையாக உள்ளது. உங்களை விட்டுப் பிரிவது எனக்கு வேதனையைத் தருகிறது. இருப்பினும் தந்தையின் கட்டளையை என்னால் மீற முடியாது. பெரியவர்கள், தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று சொல்லியுள்ளனர். அதை மீறலாமா? மீறினால் பழிக்காளாவேன் அல்லவா. தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவது தான் மகனின் கடமை. அதனால் மகிழ்வுடன் விடை தாருங்கள். அது தான் நீங்கள் எனக்குச் செய்யும் பேருதவி'' என்றான்.

அதைக் கேட்ட மக்கள் ஒருவாறு தேறி மிகுந்த கவலையுடன் அவர்களுக்கு விடை கொடுத்தனர். அவர்களைக் காட்டிற்குக் கொண்டு சென்று விடத் தேர் தயாராக நின்றது. இராமனும், சீதையும், இலட்சுமணனும் தேரில் ஏற மந்திரியான சுமந்திரர் தேரை ஓட்டினார். எவ்வளவோ தடுத்தும் கேளாமல் மக்கள் தேரைப் பின் தொடர்ந்து சென்றனர்.

நகர எல்லையைக் கடந்ததும் சுமந்திரர் தேரை வேகமாக ஓட்டினார். மக்கள் சிறிது சிறிதாக நின்றனர். இறுதியில் எல்லோரும் நின்று விட்டனர். இரவு ஆயிற்று. தேரை ஓர் ஆற்றங்கரையில் நிறுத்தினார் சுமந்திரர். அன்று இரவு அவர்கள் அவ்வாற்றங்கரையில் தங்கினர். முதன் முதலாகச் சீதை புற்றரையில் படுத்து உறங்கினாள். அவளுக்கு நித்திரை வரவில்லை. இரவு முழுவதும் பயங்கரக் கனவுகள் வந்தன.

நடுச்சாம வேளை இராமன் சுமந்திரரை எழுப்பி தேரில் ஏறிப்புறப்பட்டான். சீதையும் இலட்சுமணனும் கூடச் சென்றனர்.

நன்றாக விடியுமுன் தேர் ஓர் இடத்தில் நின்றது. மூவரையும் இறக்கி விட்டு சுமந்திரன் நாட்டுக்குத் திரும்பினார். வழி தெருக்களில் மக்கள் நின்று அழுது கொண்டிருந்தனர். அதைப் பார்க்கச் சுமந்திரருக்குக் கவலையாக இருந்தது.

## தசரதனின் துயரம்

அரண்மனை வைத்தியர் சுயநினைவற்றிருந்த தசரதனை மிகவும் அவதானத்துடன் கவனித்தார். நாலைந்து தினங்கள் சென்றும் அவருக்குச் சுயநினைவு திரும்பவில்லை. அதையறிந்து அவர் நாட்டில் உள்ள பெரும் நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்களை அழைத்தார். அயல்நாட்டு வைத்தியர்களும் செய்தி அறிந்து வந்து சேர்ந்தனர். இருந்தும் தசரதனின் உடல் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. அவரது நினைவுகள் யாவும் இராமன் மீது இருந்ததால் அவர் 'இராமா இராமா' என்று நிமிடத்திற்குப் பலமுறை முணகிக் கொண்டிருந்தார்.

அரண்மனை வைத்தியர் மந்திரியான சுமந்திரனுக்குச் சொன்னார்,''இப்போது நிலைமை மோசமாக இருக்கிறது. இராமன் வந்து 'அப்பா' என்று அழைத்தால் அவர் சுயநினைவடைவார். ஏற்பாடு செய்யுங்கள்'' என்றார்.

சுமந்திரர் அதைக் கைகேகிக்கு எடுத்துச் சொல்லியும் அவள் கேட்கவில்லை. இவ்வளவு காலமும் இராமன் தான் எனது பிள்ளையென்றது நடிப்பா இல்லை திட்டமிட்ட நாடகமா என்று எண்ணினார். அத்துடன் கணவனுக்கு ஒரு சிறு துன்பம் ஏற்பட்டாலும் துயரப்பட்டுத் தன்னுயிரைக் கொடுத்தேனும் தனது கணவனின் உயிரைக் காப்பாற்ற நினைக்கும் பாரதப் பெண்ணா இவள். அரக்கி எனவும் நினைத்தார்.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. தசரதன் சுயநினைவடைந்தார். அவர் முதலில் கேட்டது,''இராமன் எங்கே? அவனை அழைத்து வாருங்கள். இராமா.. இராமா.. நீ எங்கே சென்றாய்'' என்று அழுதார்.

உண்மையை மறைக்க முடியாதென்று உணர்ந்த சுமந்திரர்,''இராமன் நாட்டில் இல்லை. காட்டுக்குச் சென்று விட்டான்'' என்றார் சுமந்திரர்.

''ஐயோ இராமா'' என்று அலறினார் தசரதன்.

அப்போது அவரின் அருகில் இருந்த கைகேகி சொன்னாள்,''உங்களது நிலையை விளக்கிச் சொல்லி அவர்களை அழைத்து வருமாறு பல வீரர்களைக் காட்டுக்கு அனுப்பினேன். அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை'' என்று கூசாமல் பொய் சொன்னாள் கைகேகி.

''அவர்கள் என்றால் வேறு யார் யார் சென்றனர்?'' தசரதன் மிகுந்த துயரத்துடன் கேட்டான்.

''இராமன் தனியே செல்வதை விரும்பாத இலட்சுமணன் நான் தடுத்தும் கேளாது சென்று விட்டான். அது போலச் சீதையும் இராமன் இருக்கும் இடம் தான் எனக்கு அயோத்தி என்று கூறிச் சென்று விட்டாள். அவள் யாரினது சொல்லையும் கேட்காது பிடிவாதமாகச் சென்று விட்டாள். இப்போதும் பல வீரர்களை நான் காட்டுக்கு அனுப்பியுள்ளேன். இது மந்திரிக்குத் தெரியும்'' என்றாள் கைகேகி.

''மந்திரியாரே, நீங்கள் தானே தேரை ஓட்டிச் சென்று நாட்டின் எல்லையில் இறக்கினீர்கள். அதற்குள் எங்கே அவர்கள் சென்றிருப்பார்கள்?'' என்று கேட்டார் வைத்தியர்.

''வைத்தியரே, கைகேகி யாரையும் அனுப்பவில்லை. அவள் நாடகமாடுகிறாள். இவ்வளவு காலமும் மனதுள் நடத்திய நாடகத்தை இப்போ மேடையில் நடத்துகிறாள். அவள் சொல்வதெல்லாம் பொய். நன்கு திட்டமிட்டுச் செயலாற்றுகிறாள். அவளும் தாடகை போன்றதொரு அரக்கி தான். அரக்கர்கள் தமது சுயநலத்தைப் பார்ப்பார்களே தவிர அடுத்தவர்களது துயரத்தைக் கணக்கில் எடுக்கமாட்டார்கள்'' என்றார் சுமந்திரர்.

''இராமா, இராமா இப்போ நீ எந்த வனத்தில் இருக்கிறாய். காட்டுக்குச் சென்று சில நாளில் மாயமாக மறைந்துவிட்டாயா? எனது வீரர்கள் பற்றில்லாதவர்களா? அவர்களால் எப்படி இராமனைக் கண்டுபிடிக்க முடியாது போயிற்று'' என்று அழுதவாறு கூறியவர் மௌனமானார்.

சில நிமிடங்களின் பின் சொன்னார்,''நீ கொடியவள். திட்டமிட்டுப் பொய்கள் பல கூறி என்னையும் நாட்டு மக்களையும் ஏமாற்றி விட்டாய்'' என்று அழுதவர். கண்களை மூடினார். அரண்மனை வைத்தியர் அவரைப் பரிசீலித்து விட்டு அவர் இறந்து விட்டார் எனக் கூறினார்.

தசரதன் இறந்த செய்தி கேட்டு அயோத்தி அதிர்ந்தது. இவ்வளவு நாளும் தசரதன் பெண் பித்துப் பிடித்தவன். கைகேகியின் சொற்படி நாடக மாடினான் என்று நினைத்த மக்கள் தசரதன் இறந்ததும் தசரதனில் குற்றமில்லை என்பதைத் தெரிந்து ஆத்திரமடைந்தனர். அரண்மனையைச் சுற்றி நின்று கோசமிட்டனர்.

தனது கணவர் இராமனைக் காட்டுக்குச் செல்லுமாறு கூறவில்லை என்றும், கூனியும் கைகேகியும் சேர்ந்து செய்த சதியால் தான் யாவும் நடந்தது என்று இராமனின் தாய் கோசலை அறிந்து துயருற்றாள்.

அப்போது பரதன் கேகய நாட்டில் இருந்தான். தசரதன் இறந்த செய்தியை அறிந்து மிக்க துயரத்துடன் அவன் அயோத்திக்கு வந்தான்.

## பரதனின் துயரம்

பரதன் அயோத்திக்கு வந்த போது மக்கள் வீதிகளில் துயரத்துடன் நின்று கைகேகியைத் திட்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் பரதனைக் கண்டதும் அவனுக்கெதிராகக் கோசம் எழுப்பினர். அவனைக் கொல்ல வேண்டும் என்றனர். அதைக் கேட்டுத் திகைத்துப் போனான் பரதன். அவனுக்குத் துக்கமாக இருந்தது. இராமன் மீது மிகுந்த அன்பு கொண்ட தன் தாயா இத்தனைக்கும் காரணம் என்று துக்கப்பட்டான்.

அவன் தனது தாயை வெறுப்புடன் சந்தித்தான். அவள் சொன்னாள்,''பரதா, இனி நீ தான் அரசன். அதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து விட்டேன்'' என்று மிக்க மகிழ்வுடன் கூறினாள் கைகேகி.

பரதன் அதைக் கேட்டு அளவற்ற கோபம் கொண்டான்,''இராமன் தான் எனது மூத்த மகன் என்பாயே. ஒரு தாய் செய்யும் செயலா இது. பெண் இனத்துக்கே வெட்கக் கேடான செயலைச் செய்து விட்டு என்னை மகிழ்வுடன் வரவேற்கிறாயா? எனக்கு நீங்காத பழியைத் தேடித் தந்துள்ளாய்'' எனக் கொதித்தான்.

''மகனே, எல்லாவற்றையும் உனதுநன்மைக்காகத் தான் செய்தேன். எனது மகன் அரசனானால் எனக்குத் தானே பெருமை''என்றாள் கைகேகி.

''பெருமை தீயவழியில் வரக் கூடாது. அதைக்குறுக்கு வழியில் நாடவும் கூடாது. நீ பெருமை என்கிறாய். தெருக்களில் மக்கள் கூடி நின்று அரக்கி, கணவனைக் கொலை செய்த பாதகி என்று திட்டுகின்றனர். நான் சூரியவம்சத்தில் பிறந்தவன். நீதி தான் என் உயிர் மூச்சு. நான் அரச பாரத்தை ஏற்கமாட்டேன். வீரர்களுடன் நானும் காட்டுக்குச் சென்று அண்ணனைத் தேடிக் கண்டு பிடித்து அழைத்து வந்து மூடிசுட்டி வைப்பேன்'' என்று கூறி மரவுரி தரித்துக் காட்டுக்குச் செல்லப் புறப்பட்டான். அதைக் கண்ட சத்துருக்கனும் அவனுடன் மரவுரி தரித்துக் காட்டுக்குப் புறப்பட்டான்.

நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்வுடன் பரதனைப் புகழ்ந்தனர். பரதனும் சத்துருக்கனும் அனைவரிடமும் விடைபெற்றுக் காட்டுக்குச் சென்றனர். அவர்களோடு தாய்மாரும் இனத்தவர்களும் பெரியவர்களும் நாட்டுமக்களும் சேர்ந்து கொண்டனர். எப்படியாவது இராமனைச் சமாதானப்படுத்தி அழைத்து வரவேண்டும் என்று பரதன் உறுதியாக இருந்தான்.

## காட்டில் இராமன்

சுமந்திரனின் தேரால் இறங்கிய இராமனும் இலட்சுமணனும் சீதையும் தென் திசை நோக்கி நடக்கத் தொடங்கினர். கரடு முரடான பாதையில் நடக்கச் சீதை மிகவும் துன்பப்பட்டாள். அதைப் பார்த்த இலட்சுமணனின் கண்கள் கலங்கின. கைகேகி மீது ஆத்திரம் வந்தது.

பிறந்ததில் இருந்து அரண்மனையில் சொகுசான வாழ்க்கை வாழ்ந்த சீதை துன்பப்படுவதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நடந்து சென்ற சீதை 'அம்மா' என்றவாறு தனது வலது காலைத் தூக்கினாள். அதில் ஒரு முள் ஏறி இருந்தது. இரத்தம் பெருகியது. இராமன் அதை அகற்றி விட்டு சிறிது நேரம் இளைப்பாறும் படி சொன்னான். மூவரும் ஒரு மரநிழலில் அமர்ந்தனர்.

சீதை கவலைப்படவில்லை, ''பெண்கள் கணவனின் வீடு சென்றால் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டும்'' என்று நினைத்தாளே தவிரச் சொல்லவில்லை. இலட்சுமணன் காட்டின் உள்ளே சென்று கனிகளைப் பறித்து வந்து இராமனுக்குக் கொடுக்க இராமன் சீதைக்குக் கொடுதான். அரண்மனையில் அறுசுவை உணவுகளை உண்ட அவர்கள் காய்களையும், கனிகளையும், கிழங்குகளையும் உண்டனர். அது இலட்சுமணனுக்குக் கவலையை அளித்தது.

அங்கே அவர்கள் தங்குவதற்காக ஒரு குடிசை அமைத்தனர். இராமனும் சீதையும் இரவில் அக்குடிசையில் தங்கும் போது அவர்களுக்குக் காவலாக இலட்சுமணன் விழித்திருந்தான்.

பின் மூவரும் நடந்து சென்று கங்கைக் கரையை அடைந்தனர். அங்கே ஆயிரக்கணக்கான வேடர்கள் வசித்து வந்தனர். அவர்களுக்குத் தலைவன் குகன். அவன் சிறந்த வில் வீரன்.

கங்கைக் கரையில் ஏராளமான படகுகள் தரித்து நின்றன. அப்பகுதி முழுவதும் குகனின் ஆதிக்கத்தில் இருந்தது. அவன் இராமனைப் பற்றி முன்பே கேள்விப்பட்டிருந்தான்.

இராமன் இலட்சுமணனுடனும் சீதையுடனும் கங்கைக் கரைக்கு வந்துள்ளான் என்று கேள்விப்பட்ட குகன் கங்கைக் கரைக்கு வந்து இராமனை வணங்கினான்.

அப்போது வேடர்கள் பலர் குகனின் கட்டளைப்படி காட்டில் உள்ள பல அரிய பொருட்களைக் கொண்டு வந்து இராமனின் முன் வந்து இராமனின் முன் வைத்தனர்,''சுவாமி, இவற்றை எமது காணிக்கையாக ஏற்றருளல் வேண்டும்'' என்று குகன் வணங்கிக் கேட்டான்.

குகனின் அன்பைக் கண்டு மகிழ்ந்த இராமன் இலட்சுமனையும் சீதையையும் குகனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

இராமன் குகனை அழைத்து கட்டித் தழுவினான் பின்,''குகனே, உன்னைப் பற்றி முழுமையாக அறிந்தவன் நான். அதனால் உன்னை எனது சகோதரனாக ஏற்றுள்ளேன். இனி மேல் நீ என்னை அண்ணா என்றே அழை தம்பி. இவ்வளவு காலமும் எனக்கு இலட்சுமணனும், பரதனும், சத்துருக்கனும் தான் சகோதரர்கள். இன்று முதல் நீயும் எனது சகோதரன்'' என்றான் இராமன்.

அதைக் கேட்டுக் குகன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். ஓர் அரசகுமாரன் வேடனான தன்னைத் தம்பி என்றதை அவனால் நம்ப முடியவில்லை.

''அண்ணா, என்னைத் தாங்கள் தங்கள் சகோதரனாக ஏற்றதை என்னால் நம்ப முடியவில்லை. மிக்க மகிழ்ச்சி. நான் செய்த தவப் பயன் அது. அதனால் நீங்கள் எம்முடன் சில நாட்கள் தங்கியிருத்தல் வேண்டும்'' என்றான்.

இராமன் மிக்க மகிழ்வுடன் குகனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டான். அதனால் மூவரும் குகனின் இருப்பிடத்திற்குச் சென்றனர். குகன் காட்டில் உள்ள பழவகைகளையும் மற்றும் உணவு வகைகளையும் கொண்டு வந்து மூவருக்கும் கொடுக்க அவர்கள் மிகவும் மகிழ்வுடன் அவற்றை உண்டனர்.

சில நாட்கள் குகனுடன் தங்கியிருந்த மூவரும் புறப்பட்டனர். குகன் அவர்களைப் படகில் ஏற்றிச் சென்று கங்கை நதியின் மறுபக்கத்தில் விட்டான். அங்கே பல முனிவர்கள் இருந்தனர். அவர்கள் அவர்களை வரவேற்று உபசரித்தனர். முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் சில நாட்கள் அங்கு தங்கினர்.

பின்பு முனிவர்களிடம் விடைபெற்றுச் சித்திர கூட பார்வதம் என்ற இடத்தை அடைந்தனர். அங்கு ஓர் ஆச்சிரமம் அமைத்து அதில் தங்கினர்.

குகன் இராமரையும் இலட்சுமணனையும் சீதையையும் கங்கையின் மறுகரையில் இறக்கி விட்டுத் திரும்பிய போது வேடர்கள் பலர் ஓடி வந்து குகனை வணங்கி விட்டுச் சொன்னார்கள்,''அரசே, இராமரைத் தந்திரமாகக் காட்டுக்கு அனுப்பி விட்டு ஆட்சியைப் பிடித்த பரதன் படையுடன் எமது பிரதேசத்தை நோக்கி வருகிறான். இராமர் இங்கு தான் உள்ளார் என அறிந்து அவரைக் கொல்ல வருகிறார்கள்'' என்றனர்.

''நண்பர்களே, உடனே சென்று எமது இனத்தவரை ஆயுதங்களுடன் வரச் சொல்லுங்கள். நாம் இறந்த பின்பு தான் அவர்கள் இவ்விடத்தை விட்டுச் செல்ல வேண்டும். அதனால் அவர்கள் எவரையும் உயிருடன் விடாதீர்கள். கொன்று குவியுங்கள்'' என்றான்.

அவன் கூறியதும் வேடர்கள் ஆயிரக்கணக்கில் ஆயுதங்களுடன் குவித்தனர். குகனின் தலைமையில் வேடர்கள் அணிவகுத்து நின்றனர்.

அவர்களின் எதிரே பரதனும் அவனுடன் வந்தவர்களும் ஆயுதங்களுடன் நின்றனர். குகன் முன்னே தவக்கோலத்துடன் நின்ற பரதனைப் பார்த்தான். அவனது முகம் காய்ந்து கறுத்திருந்தது. கூட வந்தவர்களின் முகமும் கவலையால் மூடப்பட்டிருந்தது. அதைக் கண்ட குகன் எதுவும் அறியாது கலவரத்துடன் நின்றான்.

அப்போது பரதன் ஆயுதங்களை நிலத்தில் போட்டு விட்டு குகனை நோக்கிக் கரங்குவித்தபடி வந்தான். குகன் பரதனுடன் கதைத்த பின்பு பரதனின் நல்ல பண்புகளை அறிந்து மெய்சிலிர்த்தான்.

''குகனே, அண்ணன் தான் எனது உயிர். அவர் உன்னைத் தனது தம்பி என்று சொன்னதால் நீயும் எனக்குச் சகோதரன். அதனால் தயவு செய்து அண்ணன் இருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துச் செல். அவரைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்று முடிசூட்ட விரும்புகிறேன்'' என்றான்.

பரதனின் நல்ல உள்ளத்தைப் புரிந்து கொண்ட குகன் பரதனின் எண்ணத்தைப் பாராட்டினான். பின் அவர்களை இராமன் இருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றான்.

## பரதன் இராமனைக் காணல்

சித்திர கூடத்தில் இராமனும் இலட்சுமணனும் சீதையும் இருந்த போது தம்மை நோக்கி ஒரு கூட்டம் வருவதை இலட்சுமணன் கண்டான். தூரத்தில் வந்த போதும் வருபவன் பரதன் என்று கண்டு கொண்டான். தாயுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து ஆட்சியைப் பிடித்த பரதன் இப்போது படையுடன் வந்து இராமனை அழிக்க விரும்புகிறான் என்றே இலட்சுமணன் எண்ணி மிக்க கோபங் கொண்டான்.

உடனே குடிலுள்ச் சென்றான். அவனது கோலத்தைக் கண்ட இராமன் ஏதோ விபரீதம் நடந்து விட்டதென்று உணர்ந்து அவனை அன்போடு பார்த்தான்,''அண்ணா, பரதன் படையுடன் இங்கு எம்மைத் தேடி வருகிறான். அரசைக் கொடுத்த பின்பு ஏன் இந்த புத்தி. நாம் காட்டில் கூட நிம்மதியாக இருக்கக் கூடாதா? அவர்களோடு போரிட எனக்கு அனுமதி தாருங்கள்'' என்று ஆவேசத்துடன் கூறினான்.

''இலட்சுமணா, பரதன் அப்படியானவன் அல்ல. என் மீது உயிரை வைத்திருப்பவன். அவசரப்படாதே'' என்றான் இராமன்.

சீதையும் அதையே சொன்னாள்,''அவர்கள் போருக்கு வந்தால் குகன் எமக்குத் தகவல் தந்திருப்பான். அவசரப்படாதே என்றாள் சீதை. அதைக் கேட்டதும் இலட்சுமணன் மனம் சற்று ஆறுதலடைந்தது.

பரதனுக்கு அப்பிரதேசச் சூழ்நிலையையும் அவர்கள் வாழும் குடிலையும் கண்ட போது அழுகை பீறிட்டது. பெருங்குரலெடுத்து அழுதவாறு,''அண்ணா, அண்ணா'' என குழறியபடி கையைத் தலைக்கு மேல் கூப்பிய படி ஓடி வந்தான் பரதன். சத்துருக்கனும் அவ்வாறே வந்தான். கூட வந்த படையினரும் அவ்வாறே வந்தனர். வந்தவர்கள் அனைவரும் ஆயுதங்களை நிலத்தில் போட்டு விட்டு நிலத்தில் விழுந்து வணங்கினர்.

''அண்ணா'' என அழைத்தவாறு பரதனும் சத்துருக்கனும் ஓடி வர இராமன் மிக்க மகிழ்வுடன் புன்னகைத்து இருவரையும் கட்டித்தழுவினான். பரதனால் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழுதான்.

''இலட்சுமணா, நீ பாக்கியவான். அண்ணணோடு இருக்கிறாய். நாம் பாவம் செய்தவர்கள். அண்ணனைப் பிரிந்திருக்கிறோம். நாமும் இங்கேயே தங்க விரும்புகிறோம்'' என்றான் பரதன்.

''பரதா, நீ எம்முடன் போரிட வருகிறாய் என்று தான் நினைத்தேன். என்னை மன்னித்து விடு'' என்றான் இலட்சுமணன். இராமனைக் கண்ட மகிழ்ச்சியில் மந்திரி சுமந்திரரும் படை வீரரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பரதன் தந்தை இறந்த செய்தியை இராமனுக்கு மிக்க வருத்தத்துடன் சொன்னான். அதைக் கேட்ட இராமனும் இலட்சுமணனும் சீதையும் கலங்கினர்.

அங்கிருந்த முனிவர்கள் கங்கைக் கரையில் தசரதனின் ஆத்மசாந்திக்கான பூசைகளைச் செய்தனர். இராமனும் இலட்சுமணனும் பரதனும் சத்துருக்கனும் அதில் கலந்து கொண்டனர்.

கிரியைகள் நிறைவடைந்ததும் பரதன் இராமனின் அருகில் வந்து, அவனை வணங்கி விட்டுச் சொன்னான்,''அண்ணா, தாங்கள் அயோத்திக்கு வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான்.

''பரதா, தந்தையின் சொற்படி நான் காட்டுக்குக்கு வந்தேன். அவர் கூறிய காலம் வரை இங்கேயே வாழ்வேன்'' என்றான் இராமன்.

''நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். தந்தையின் உத்தரவுப்படி காட்டுக்கு வந்தீர்கள். நான் ஆட்சியைப் பொறுப்பேற்றேன். அது முடிந்து விட்டது. இப்போது நானே விரும்பி உங்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கிறேன். அதை வேண்டாம் என்று கூறாதீர்கள். ஏற்று எல்லோரினதும் விருப்பத்தைப் பூர்த்தி செய்யுங்கள்'' என்று இரந்தான் பரதன்.

''பரதா, தந்தை என்னைப் பதின்நான்கு வருடங்கள் காட்டில் இருக்குமாறு கூறியுள்ளார். அவரின் விருப்பப்படி அந்தப் பதின்நான்கு ஆண்டுகளும் நீதான் அயோத்தியை ஆள வேண்டும். அது தான் முறை. அதனால் என்னைத் தயவு செய்து வற்புறுத்தாதே'' என்றான் இராமன்.

''அண்ணா, தங்களைக் காட்டுக்குச் சென்று வாழும்படி கூறியவர் எனது தாய். இப்போது எனது தாயாரும் மற்றும் இரு அன்னை மாரும் கூட வந்திருக்கின்றனர். இப்போது எனது தாயாரைக் கொண்டு சொல்ல வைக்கிறேன்'' என்று கூறிக் கைகேகியை அழைத்து வந்தான்.

''என்னை மன்னித்து விடு இராமா. கெடுகாலம் வந்தால் புத்தி தடுமாறும். கூனியின் செயற்பாட்டால் எனது உள்ளம் மாறிவிட்டது. தற்போதைய நிலையைப் பார்த்ததும் எனது மனம் துன்பப்படுகிறது. அதனால் வந்து அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொள்'' என்றாள் கைகேகி.

''அன்னையே, உங்களது வேண்டுகோளை நான் ஏற்கமாட்டேன். உங்கள் விருப்பப்படி பரதன் நாட்டை ஆளட்டும். உரிய காலம் முடிவடைந்ததும் நான் வந்து உன்னிடம் அரச பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். அது வரை நீயே அரசனாக இருந்து நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்'' என்றான் இராமன்.

கோசலையும் சுமித்திரையும் விம்மி விம்மி அழுதனர். இராமன் அவர்களைத் தேற்றினான். இருப்பினும் அவர்களால் அழுகையை நிறுத்த முடியவில்லை.

அப்போது பரதன் சொன்னான், ''அண்ணா, எம் அன்புத் தந்தை தங்களின் பிரிவைத் தாங்க முடியாது இறந்து விட்டார். நாட்டு மக்கள் தந்தையையும் தங்களையும் இழந்து பெருந்துன்பப்படுகின்றனர். எனது விருப்பத்தை ஏற்றால் அனைவரும் மகிழ்வர். ஆனால் அதை ஏற்கத் தாங்கள் மறுக்கிறீர்கள். அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்'' என்று கூறிநிறுத்தினான் பரதன்.

இராமன் அவனை பார்த்தான்,''உனது முடிவைச் சொல்'' என்றது இராமனின் பார்வை.

சிறிது நேரம் மௌனமாக நின்ற பரதன் சொன்னான்,''அப்பா இருந்த அரியணையில் முறைப்படி அமரவேண்டியவர் தாங்கள். அப்படி இருக்கையில் என்னால் எப்படி அதில் அமர முடியும். என் வாழ்நாளில் அந்த அரியணையில் ஒரு நிமிடங் கூட அமரமாட்டேன்'' என்று மிகவும் உறுதியாகச் சொன்னான் பரதன்.

அதைக் கேட்ட எல்லோரும் திகைப்படைந்தனர்,''இது என்ன பேச்சு. இதன் அர்த்தம் என்ன?''என்று குழம்பினார் சுமந்திரன்.

‘‘அண்ணா, தாங்கள் இருக்க வேண்டிய அரியாசனம் அது. அதனால் தங்கள் பாதுகைகளைத் தாருங்கள். அவற்றைச் சிங்காசனத்தில் வைத்து விட்டுத் தினமும் அதை வணங்கிய பின் நாட்டைப் பரிபாலிப்பேன்’’ என்றான் பரதன்.

அருகில் இருந்தோர் திகைத்தனர். இப்படி ஒரு பாசமுள்ள தம்பியா என அதிசயித்தனர். அதைக் கேட்ட இலச்சுமணன் தான் பரதனைத் தவறாகப் புரிந்து விட்டேன் என்று கலங்கினான்.

‘‘வேண்டாம் பரதா. முறைப்படி நடப்பது தான் நீதி. நீ எனக்காக அரியணை ஏறு’’ என்று இராமன் சொன்ன போது பரதன் சொன்னான், ‘‘அண்ணா, உங்கள் விருப்பத்தை நான் ஏற்றது போல எனது விருப்பத்தையும் தாங்கள் ஏற்றாக வேண்டும். இது எனது அன்புக் கட்டளை’’ என்றான் பரதன்.

இராமனால் அதற்குப் பதில் கூற முடியவில்லை. சிறிது தடுமாறினான். அப்போது பரதன் சொன்னான்,‘‘இது கட்டளை அல்ல. எனது விருப்பம். அதனால் எனது விருப்பத்தைத் தயவு செய்து பூர்த்தி செய்யுங்கள். தாங்கள் வனவாசம் முடிந்து திரும்பி வரும்வரை தங்கள் பிரநிதியாக இருந்து செயற்படுவேன். அயோத்தியில் இருக்க மாட்டேன். நந்திக்கிராமத்தில் இருந்து கொண்டு நல்லாட்சி செய்வேன்’’ என்றான்.

‘‘சரி, உனது விருப்பம் போல் நட’’ என்றான் இராமன்.

‘‘மிகவும் மகிழ்ச்சி அண்ணா. பதின்நான்கு ஆண்டுகள் முடிந்ததும் திரும்பி வந்து விடல் வேண்டும். ஒரு நாள்த் தாமதமானாலும் நான் அக்கினிப் பிரவேசம் செய்வேன். இது தங்கள் மீது ஆணை’’ என்றான். அவனது கண்களால் கண்ணீர் வழியச் சிறு குழந்தை போல அழுதான். அதைக் கண்ட இராமனுக்கு மெய்சிலிர்த்தது. இவ்வளவு பாசம் என்மீது வைத்திருக்கிறானா என்று அதிசயப்பட்டான். பரதனைக் கட்டித் தழுவி முத்தமிட்டான். பின் தனது பாதுகைகளைக் கொடுத்தான்.

அவற்றை வாங்கிய பரதன் அவற்றைத் தனது கண்களில் ஒற்றி விட்டு அவற்றைத் தனது தலை மீது வைத்தான்.

எல்லோரும் மிக்க துயரத்துடன் இராமனிடமிருந்து விடை பெற்றனர். இராமன் மிகுந்த கவலையோடு இலட்சுமணனுக்குச் சொன்னான்,‘‘நாம் காட்டுக்கு வந்தமையால் பலரது அன்பைப் புரிந்து கொண்டோம். வருவதெல்லாம் நன்மைக்கு என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உண்மை’’ என்றான். அவனது குரல் தளர்ந்தது.

## பஞ்சவடி

சில நாட்கள் சென்ற பின்பு இராமனும் இலட்சுமணனும் சீதையும் சித்திரகூடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர். வழியில் தென்பட்ட புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, அங்குள்ள தலங்களைத் தரிசித்தனர். பின் தெற்கு நோக்கிச் சென்றனர். செல்லும் வழியில் முனிவர்களிக் ஆச்சிரமங்கள் இருந்தன. அங்கு சென்றுஅவர்களை வணங்கி அவர்களிடம் ஆசி பெற்றனர். பின் அம்முனிவர்களுடன் தங்கியிருந்து இளைப்பாறினர். முனிவர்கள் மனம் மகிழ்ந்து அவர்களுக்குப் பல வரங்களை அளித்தனர். சில முனிவர்கள் தாம் சிவனிடம் பெற்ற ஆயுதங்களை அன்புடன் வழங்கினர்.

இப்படியாகப் பத்து ஆண்டுகள் கழிந்தன. காட்டு வாழ்க்கை அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுத்தது. முனிவர்கள் அவர்களுடன் உரையாடி மகிழ்ந்தனர்.

அவர்கள் மூவரும் கோதாவாரி நதிக்கரையில் உள்ள பஞ்சவடி என்னும் இடத்திற்கு வந்தனர். பஞ்சவடி மிகவும் அழகான இடம். எங்கும் மரங்கள் சோலையாக நின்றன. அவற்றில் ஏராளமான காய்களும் கனிகளும் இருந்தன. அழகான பூஞ்செடிகளும் நின்றன. அவற்றை நேரம் போவது தெரியாது சீதை பார்த்து ரசித்தாள். ஏராளமான அழகான பறவைகள் அங்கு இருந்தன. அழகிய ஒரு பஞ்சவர்ணக் கிளி சீதையின் அன்பில் கட்டுப்பட்டு அவளோடு இருந்தது.

இலட்சுமணன் அவ்விடத்தில் ஒரு குடில் அமைத்தான். மூவரும் அதில் தங்கியிருந்தனர்.

## சூர்பனகையின் வருகை

மூவரும் மிகவும் மகிழ்வுடன் அங்கு இருந்த போது சூர்ப்பனகை என்னும் அரக்கி அந்தப் பக்கமாக வந்தாள். மிகவும் அவலட்சனமான தோற்றத்தை உடையவள். அது போலக் கொடிய குணங்களையும் உடையவள். இரக்கமில்லாதவள். அத்துடன் மாயாகாரியங்களை மிக எளிதாகச் செய்பவள். தனது உருவத்தைத் தேவைக்கேற்றபடி மாற்றிக் கொள்பவள்.

பாரத நாட்டிற்கு அருகே இலங்கை என்றொரு அழகிய நாடு உண்டு. அந்த நாட்டைக் குபேரன் ஆண்டு வந்தான். அழகான இலங்கையை இராணவன் என்ற அரக்கன் கைப்பற்றி ஆண்டு வந்தான். அவனது சகோதரி தான் சூர்ப்பனகை.

இராவணன் சிறந்த சிவபக்தன். வேதங்களையும் உபநிடதங்களையும் கற்றவன். வீணை வாசிப்பதில் கைதேர்ந்தவன். அவன் சாமவேதப் பாடல்களை இசையுடன் பாடிச் சிவனை மகிழ்விப்பவன் அதனால் சிவன் மகிழ்ந்து அவனுக்கு வாளைப் பரிசளித்தார். இன்னும் பல ஆயுதங்களையும் அவன் சிவனிடம் பெற்றவன்.

அவன் மிகுந்த பலசாலி. அப்போது வாழ்ந்தவர்கள் இராவணனை விடப் பலம் குறைந்தவர்கள்.அதனால் அவன் அனைவரையும் பயமுறுத்தி வைத்திருந்தான். அவன் சிவனைத் தவிர வேறு எவரையும் மதித்ததில்லை. அதனால் எவராலும் தன்னை எதுவும் செய்ய முடியாதென்று நினைத்து இறுமாந்திருந்தான். தன்னை விடப் பலசாலி எவரும் இருக்கக் கூடாதென்றும், தன்னை மனிதர்கள் மட்டுமல்ல வேறு எந்த உயிராலும் கொல்ல முடியாது என்ற வரத்தை சிவபெருமானிடம் பெற்றமையால் அவன் திமிரான ஆணவத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தான். அந்த வரத்தின் சக்தியால் தேவர்களை வென்று அவர்களை அடிமையாக்கினான்.

முனிவர்கள் யாகம் செய்தால் தன்னை விடச் சிவனின் வரங்களால் பலசாலிகளாகித் தன்னைத் தாக்குவார்கள் என்று பயந்து முனிவர்கள் செய்யும் யாகங்களை அழித்து வந்தான். முனிவர்களைச் சிறைப்படுத்தினான்.

அவன் தனக்கென ஒரு கொடியையும் உருவகித்து வைத்திருந்தான். அவனது வீணைக்கொடி எங்கும் பளபளத்துப் பறந்து கொண்டிருந்தது. அத்துடன் அவன் சிவனது பெயரைத் தனது பெயரோடு இணைத்து இராவணேஸ்வரன் என வைத்தான். நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் இராவணேஸ்வரன் என்று அழைக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.

பஞ்சவடிக்கு வந்த சூர்ப்பனகை அங்கிருந்த ஆச்சிரமத்தின் வாசலில் இலட்சுமணன் காவல் காப்பதைக் கண்டாள். அத்துடன் ஆச்சிரமத்தில் இருந்து வெளியே வந்த இராமனையும் சீதையையும் கண்டு அவர்களின் அழகைக் கண்டு மயங்கினாள்.

தான் பலம் பொருந்திய இராவணேஸ்வரனின் தங்கையாதலால் தான் நினைத்தவற்றையெல்லாம் செய்யலாம் என்று எண்ணினாள்.

இராமனின் அழகில் மயங்கிய சூர்ப்பனகை தனது விகாரமான தோற்றத்தைக் கண்டால் இராமன் விரும்பமாட்டான் என்று தெரிந்து தன்னை ஓர் அழகிய தேவதை போல உருமாற்றி இராமனின் எதிரே போய் நின்றாள்.

தான் வேடம் மாற்றிய போதும் சீதைக்கு இணையான அழகியாக மாறமுடியவில்லை என்ற கோபம் அவளின் மனதில் எழுந்தது. மோகத்துடன் அவள் சிரித்தாள்.

தனக்குத் தெரியாமல் இராமனுக்கு முன் இவள் எப்படி வந்தாள். யார் இவள் என்று இலட்சுமணன் யோசித்தான்.

இராமன் அவளை அன்புடன் நோக்கி,‘‘பெண்ணே, நீ யார்? இந்தப் பயங்கரமான காட்டுக்குள் தனியே எப்படி வந்தாய்? உன் பெயர் என்ன?’’ என்று கனிவுடன் கேட்டான்.

‘‘எனது பெயர் சூர்ப்பனகை பலம் பொருந்திய மாமன்னன் இராவணனின் சகோதரி. இப்பகுதி மிகுந்த அழகுடையது. அதனால் தினமும் அழகை ரசிக்க வருவேன். இந்தப் பூமியின் அழகை விட நீ அழகாக இருக்கிறாய். தேவனா நீ. உன்னைப் போன்ற ஓர் அழகன் இவ்வுலகில் இல்லை. அதனால் உன் மீது காதல் கொண்டு விட்டேன். என்னைத் திருமணம் செய்து கொள். உனக்குத் தேவையான பொன் பொருளை என் அண்ணனிடம் பெற்றுத் தருகிறேன்’’ என்றாள் கனிவுடன்.

‘‘பெண்ணே, நான் திருமணமானவன். இவள் தான் எனது மனைவி. ஒரு பெண் திருமணமானவனை விரும்பக் கூடாது. அது போல திருமணமானவன் இன்னொரு பெண்ணை விரும்பலாகாது. இது மரபு. மரபு என்பதுதொன்று தொட்டுக் கைக்கொள்ளும் முறை. அதனால் பாவம் வந்து சேரும். அத்துடன் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடுடையவன் நான். அதனால் எந்தப் பெண்ணையும் நான் ஏறெடுத்துப் பார்க்கமாட்டேன். இது எனது விரதம். அதனால் உன் மனதில் தோன்றிய தீய எண்ணங்களை அகற்றி விடு’’ என்றான் இராமன்.

‘‘பேரழகனே, உன்னைப் போன்ற அழகன் எமது வம்சத்தில் இல்லை. உனக்கு அருகில் எப்போதும் இருக்க ஆசைப்படுகிறேன். உன் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கலாம். உனது இனியமொழியைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். தயவு செய்து எனது எண்ணத்தைப் பூர்த்தி செய்’’ என்றாள் சூர்ப்பனகை.

‘‘இது தீய ஆசை. விட்டு விடு’’ என்றான் இராமன்.

‘‘விட்டு விட முடியவில்லை. மரவுரி தரித்தாலும் உன்னைப் பார்த்தால் அரசவம்சத்தவன் போலத் தோன்றுகிறது. அரசர்களும், அரக்கர்களும் பல பெண்களை மணந்து கொள்வார்கள். அது தவறில்லை. அதனால் என்னை நீ மணந்து கொள்ளலாம்’’ என்றாள் சூர்ப்பனகை.

‘‘நீ நினைப்பது போல நான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். ஆனால் ஏகபத்தினி விரதன். எனது மனைவியைத் தவிர்ந்த வேறெந்தப் பெண்ணையும் மனதால் கூடத் தீண்ட மாட்டேன். வீணான தீயவார்த்தைகளைப் பேசுவதை விடுத்து இங்கிருந்து சென்று விடு’’ என்று கடுங்கோபத்துடன் சொன்னான் இராமன்.

மோக மயக்கத்தில் இருந்த சூர்ப்பனகை இராமனின் பேச்சை செவி மடுக்காது,‘‘உன்னைத் தான் நான் திருமணம் செய்வேன். எனது சகோதரர்களிடம் சொன்னால் உன்னைத் தூக்கி வந்து என்னிடம் ஒப்படைப்பார்கள்’’ என்றாள்.

இராமன் அவ்வாறு கூறிய பின்பு இலட்சுமணனிடம் சென்று சூர்ப்பனகை,‘‘உன் அண்ணன் மறுக்கிறான். நீயாவது என்னைத் திருமணம் செய்’’ என்றாள்.

‘‘நானும் திருமணமானவன். அண்ணனைப் போல நானும் ஏகபத்தினி விரதன். எனக்குக் கோபம் வருமுன் சென்று விடு’’ என்றான் இலட்சுமணன்.

இலட்சுமணனின் பேச்சு அவளின் கோபத்தைத் தூண்டியது,‘‘உங்கள் இருவரையும் கொன்று விடுவேன். எனது விருப்பத்திற்கு இணங்குங்கள்’’ என்றவாறு தனது பழைய உருவைப் பெற்றாள் சூர்ப்பனகை.

அவளது கோரமான உருவ அமைப்பைக் கண்டு சீதை பயந்து அலறினாள். இராமனும் இலட்சுமணனும் அமைதியாக நின்றனர். அவள் மெல்ல மெல்லத் தனது பெரிய கால்களைத் தூக்கி வைத்து அவர்களை நோக்கி வந்தாள். அதைக் கண்ட இலட்சுமணன் அவளது மூக்கைத் தனது வாளால் அறுத்தான். சூர்ப்பனகை பெருங்குரலெடுத்துக் கத்தினாள். தாடகையைக் கொன்றவன். இவனோ இவன் என்னையும் கொன்று விடுவானோ என நினைத்து அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

## இராவணனின் சபை

தலைவிரிகோலமாகப் பெருங்குரலெடுத்துக் குழறியபடி சூர்ப்பனகை இராவணனின் அரச சபைக்கு ஓடி வந்தாள். அவளது மூக்கைக் காணவில்லை. முகமெங்கும் இரத்தம் பரவிக் காய்ந்திருந்தது. அதைக் கண்ட இராவணன் திகைத்துப் போனான். பாசமுள்ள அவனது நெஞ்சம் பரிதவித்தது. என்ன நடந்தது என்று அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரச சபை திகைத்தது.

சூர்ப்பனகை தனக்கு நேர்ந்த அவல நிலையைப் பற்றி மிகுந்த சினத்துடன் எடுத்துரைத்தாள். இராவணனின் இரத்தம் கொதித்தது. உடனே அவர்களைப் பிடித்துக் கொல்ல வேண்டும் என்று நினைத்தான்.

இராவணன் மிகுந்த பலசாலி. அவனுக்குக் கும்பகர்ணன், விபீடனன் என்ற இரு சகோதர்கள் இருந்தனர். இராவணனது மகன் இந்திரஜித். மிகுந்த பலசாலி. அவனை விட வேறு புத்திரங்களும் இருந்தனர்.

''அண்ணா, கோதாவாரி நதிக்கரையில் அப்பிரதேத்தின் எழிலை மிகுந்த மகிழ்வுடன் ரசித்துக் கொண்டு பஞ்சவடி என்னும் இடத்தை அடைந்தேன். அங்கே அமைக்கப்பட்டிருந்த பூந்தோட்டத்தில் ஓர் ஆச்சிரமம் இருந்தது. அதில் பேரழகியான ஒரு பெண்ணைக் கண்டேன். அப்படியான பேரழகியை உலகெங்கும் தேடினாலும் கண்டு பிடிக்க முடியாது'' என்றாள்.

பேரழகி என்றதும் இராவணனின் மனம் சலனப்பட்டது, ''யார் அவள்?''என்று கேட்டான்.

''அவளின் பெயர் சீதை. பெரும் பலசாலியும் யாராலும் வெல்ல முடியாதவனான உனக்குப் பொருத்தமானவள் அவள். அதனால் அவளை உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பிப்பதற்காக அவளைப் பிடித்தேன். அதனால் இராமனும், இலட்சுமணனும் என்னைத் தடுத்து எனது மூக்கை அறுத்து விட்டனர். தேவர்களே உனது பேச்சைக் கேட்டால் அஞ்சி நடுநடுங்குவர். இலட்சுமணன், ''யார் இராவணன் உனது சகோதரனா? அந்த அரக்கனை ஒரு நொடியில் கொல்வேன்'' என்றான். அது தான் எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்றாள் சூர்ப்பனகை.

''அப்படியான வீரனா அவன்'' இராவணன் கேட்டான்.

''இல்லை அண்ணா, பெரும் வீரன் ஒரு பெண்ணை மானபங்கப்படுத்துவனா'' நீ உடனே பஞ்சவடிக்குச் சென்று இருவரையும் கொன்று விட்டுச் சீதையைக் கவர்ந்து வா. உன்னைப் போன்ற வீரனுக்குத் தகுதியானவள் அவள். என்னை அவமானப்படுத்திய அவர்களைக் கொன்றால் தான் எனது மனம் சமாதானமாகும்'' என்றாள் சூர்ப்பனகை.

சூர்ப்பனகையின் பேச்சினால் இராவணனின் மனதில் சீதையைப் பற்றிய எண்ணம் தோன்றி வளர்ந்தது. அவளது பேரழகு அவனது மனதில் தோன்றியது. நேரம் ஆக ஆக இராவணனின் மனதில் சீதையின் நினைவுகள் அதிகரித்தன. சிவபக்தனான அவனுக்கு அப்போது நீதி நியாயம் தெரியவில்லை.

ஏவலாளர்களை அனுப்பித் தனது மாமனான மாரீசனை அழைப்பித்தான். மாரீசன் வந்ததும் இராவணன் தனது திட்டத்தை விரிவாக அவனுக்குச் சொன்னான். அதைக் கேட்ட மாரீசன் மறுத்தான். அவன் இராமனைப் பற்றி அறிந்திருந்தமையால் பயந்தான்.

இராவணன் நீதி நியாயம் பார்ப்பதில்லை. எதை நினைத்தாலும் செய்து முடித்து விடுவான். அதனால் இராவணன் அவனை மிரட்டினான். பின் எச்சரித்தான். அதனால் பயந்த மாரீசன் ஒத்துக் கொண்டான். இக்கொடியவனால் இறப்பதை விடப் புண்ணியவனான இராமனால் இறப்பது மேல் என்று நினைத்தான் மாரீசன்.

மாரீசனும் இராவணனும் பஞ்சவடிக்கு வந்தனர். இராவணன் மறைந்து நின்றான். சீதை பூந்தோட்டத்தில் மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் இராவணனது மெய்சிலிர்த்தது. சூர்ப்பனகை சொன்னது போல் அப்படியான ஒரு பேரழகியை அவன் காணவில்லை. அவன் தனது புஸ்பக விமானத்தில் எல்லா உலகங்களுக்கும் சென்று வந்திருக்கிறான். ஆனால் இப்படியான பேரழகுள்ள பெண்ணை அவன் காணவில்லை.

மலர் பறித்துக் கொண்டிருந்த சீதைக்கு அருகில் மாரீசன் ஓர் அழகிய பொன்னிறமான மானின் உருவெடுத்து வந்து மேய்ந்தான். தனக்குச் சிறிது தூரத்தில் வந்து நின்ற பொன்மானின் அழகை ரசத்துப் பார்த்தாள் சீதை. அப்படியான அழகுள்ள மானை அவள்

காட்டில் இதுவரை காணவில்லை. அதனால் அதன் மீது ஆசை கொண்டு அதைப் பிடித்துத் தருமாறு இராமனைக் கேட்டாள்.

சீதை திருமணமான நாளிலிருந்து இராமனிடம் எதையும் ஆசைப்பட்டுக் கேட்டதில்லை. அதனால் தனது மனைவியின் அந்தச் சிறு ஆசையைப் பூர்த்தி செய்ய இராமன் அம்பையும் வில்லையும் எடுத்துக் கொண்டு மானைப் பிடிக்கச் சென்றான்.

பூந்தோட்டத்தில் உலாவிய மாய மானைப் பலமுறை இலட்சுமணன் சந்தேகத்துடன் பார்த்தான். அது ஏனைய மான்களை விட வேறுபட்டிருந்தது. மிகவும் அழகாகவும் இருந்தது. அதனால் அவன் இராமனுக்குச் சொன்னான்.

''அண்ணா, அந்த மானை உற்றுப் பாருங்கள். சாதாரணமாக மான்களை விட அது வேறுபாடுள்ளதாக இருக்கிறது. நேற்று அரக்கியான சூர்ப்பனகை அழகிய பெண்ணுருவில் வந்து தன்னைத் திருமணம் செய்யுமாறு கூறியதைப் போல இதுவும் அரக்கர்களின் மாய வேலையாக இருக்கலாம். அதனால் சற்றுச் சிந்தித்துச் செயற்படுங்கள்'' என்றான்.

இவ்வாறு இலட்சுமணன் கூறியதும் இராமன் சந்தேகத்துடன் மானைப் பார்த்தான். அது சாதாரண மான்களை விட வேறுபட்டிருந்தது தெரிந்தது.

இராமன் தயங்கியதைக் கண்ட சீதைக்குத் துக்கமாக இருந்தது. அவள் இராமனிடம் வந்து, ''அந்த மான் எனக்கு வேண்டும். பிடித்துத் தாருங்கள்'' எனக் கெஞ்சினாள். அழுது விடுவாள் போலத் தெரிந்தது.

அரசவம்சத்தவளான சீதையின் அந்தச் சிறு ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று தீர்மானித்த இராமன் இலட்சுமணனுக்குச் சொன்னான், ''தம்பி, எனது மனைவி இதுவரை என்னை எதுவும் கேட்கவில்லை. எதிலும் ஆசைப்பட்டதும் இல்லை. இன்று கேட்கிறாள். அதைப் பூர்த்தி செய்வது கணவனான எனது கடமை அல்லவா. ஒரு வேளை இது அரக்கர்களின் மாயை வேலையாக இருந்தாலும் அதை எமது பலத்தால் முறியடிக்கலாம் தானே. பயப்படாதே. நான் திரும்பி வரும் வரை சீதைக்குக் காவலாக இரு'' என்று கூறிவிட்டு மானின் அருகே சென்றான்.

இராவணனின் திட்டப்படி இராமன் வந்ததும் மாரீசனின் வடிவில் இருந்த மாயமான் ஓடத்தொடங்கியது.

இராமன் அதைத் துரத்திக் கொண்டு வெகு தூரம் வந்து விட்டான். அதைப் பிடிக்க முடியவில்லை. இராமன் மிகவும் களைத்துப் போனான். ஆனால் மான் முன்பை விட வேகமாக ஓடியது. அதனால் கோபம் கொண்ட இராமன் ஓர் அம்பை எடுத்து மானை நோக்கி அம்பைச் செலுத்தினான்.

மானின் உடலில் அம்புபட்டதும் அது அரக்கனான மாரீசனாக மாறியது. பின் மாரீசன் தனது குரலை இராமனின் குரலாக மாற்றி,''இலட்சுமணா, சீதா.. என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று பலமாகக் கதறிவிட்டு மாரீசன் இறந்து போனான்.

மாரீசனின் கதறிய அலறல் சத்தம் காடெங்கும் எதிரொலித்தது. அது சீதைக்கும் இலட்சுமணனுக்கும் கேட்டது.

அவ்வாறு கத்தியது இராமன் எனச் சீதை நினைத்துப் பயந்தாள். இராமனுக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டது என்று அஞ்சினாள். அவளின் உடல் நடுங்கியது. சில கணங்கள் அதிர்ந்து செயலற்றிருந்த சீதை சுயநினைவடைந்து இலட்சுமணனின் அருகே வந்தாள்.

''இலட்சுமணா, உனது அண்ணாவின் கதறல் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா? கேளாதது போல நிற்கிறாய். எனக்குப் பயமாக உள்ளது சென்று பார்த்து வா'' என்றாள். அவளது உடல் நடுங்கியது. கண்களால் கண்ணீர் வழிந்தது.

''தாயே, அந்தக் கதறல் சத்தம் எனது அண்ணனது கதறல் சத்தம் அல்ல. அவரது குரல் என்குத் தெரியாதா? இதில் ஏதோ மாயம் இருக்கிறது. சூர்ப்பனகையை அவமானப்படுத்தியமையால் அரக்கர்கள் ஏதோ சூழ்ச்சி செய்கிறார்கள்'' என்று இலட்சுமணன் கூறும் போது சீதை கோபத்துடன் சொன்னாள்,''சரி. உனது அண்ணனது குரல் இல்லாவிட்டாலும் என்ன நடந்ததென்று சென்று பார்த்து வா'' என்றாள்.

‘‘சற்றுப் பொறுங்கள். அண்ணா பெரும் பலசாலி. சகல வல்லமைகளையுமுடைய தாடகையைக் கொன்றவர். அவரை யாரும் வெல்ல முடியாது. இது அரக்கர்களின் சூழ்ச்சி’’ என்றான்.

அதனால் மிக்க கோபம் கொண்ட சீதை பதட்டத்துடன் சொன்னாள், ‘‘எனக்கு உனது அண்ணனின் குரல் தெரியும். அவரின் கதறல் சத்தம் தான் அது. அது தெரிந்தும் நீ செயலற்றிருப்பதைப் பார்க்க எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. உனது நெஞ்சில் வஞ்சகமான எண்ணம் இருக்கிறது’’ என்று சீதை ஆராயாது தகாத வார்த்தைகளைக் கூறி ஏசினாள்.

அதைக் கேட்டுச் சகிக்க முடியாத இலட்சுமணன் தனது அம்பை எடுத்து சீதையின் முன்பாக ஒரு கோட்டைச் கீறினான். பின், ‘‘எது நடந்தாலும் இக்கோட்டைக் கடந்து தாங்கள் வெளியே வரக்கூடாது’’ என்று கட்டளையிட்டு விட்டுப் புறப்பட்டான்.

## இராவணன் சீதையைக் கடத்தல்

இவற்றையெல்லாம் மறைந்திருந்து அவதானித்த இராவணன் இலட்சுமணன் சென்றதும் ஒரு சந்நியாசியைப் போல வேடமிட்டுச் சீதையின் அருகே வந்தான். அவளின் முகம் அழுதமையால் வீங்கிக்கறுத்திருந்த போதும் அது இராவணனுக்கு பேரழகாகத் தெரிந்தது.

‘‘தாயே, நீண்ட தூரம் நடந்தமையால் மிகவும் களைத்து விட்டேன். இரண்டு நாட்களாக உணவு உண்ணவில்லை. பசிக்கிறது. ஏதாவது உணவு தாருங்கள்’’ என்று இரந்தான் இராவணன்.

சீதை சந்நியாசியைப் பார்த்தாள். இராவணன் தனது மாயவித்தையால் தனது கோலத்தை உண்மையான சிவக்கோலமாக்கியிருந்தான். அவனது முகத்தில் பசிக்களை தெரிந்தது.

சீதை ஒரு தட்டில் உணவு வகைகளை வைத்து எடுத்து வந்தாள். சந்நியாசி சீதை வருமுன் அக்கோட்டைக் கடக்கப் பார்த்தான். அப்போது அக்கோடு தீயாக மாறியது. அதனால் அவன் கோட்டுக்கு வெளியே நின்றான்.

இதையறியாத சீதை, மிக்க பசியோடு வந்திருக்கும் சந்நியாசி மீது இரக்கம் கொண்டு இலட்சுமணன் கீறிய கோட்டைத் தாண்டி வந்து உணவுத் தட்டை நீட்டினாள்.

உடனே இராவணன் சீதையின் கரங்களைப் பற்றிப் பிடித்தான். சீதை திமிறினாள். அவனிடமிருந்து விடுபடப் போராடினாள். அவளால் முடியவில்லை. இராவணன் அவளைத் தூக்கிச் சென்று தனது விமானத்தில் ஏற்றினான். பின் விமானத்தை இலங்கையை நோக்கிப் பறக்க விட்டான்.

விமானத்தில் இருந்த சீதை பலமாகக் கத்தினாள். அவளுக்குத் தான் செய்த தவறு புரிந்தது.

சீதையின் அலறல் சத்தம் மரத்தின் மீது அமர்ந்திருந்த பறவைகளின் அரசனான சடாயுவுக்குக் கேட்டது. சடாயு மிகவும் பலசாலி. தற்போது வயது சென்றமையால் முதுமையடைந்திருந்தது.

அப்போது ஆகாயத்தில் ஒரு பெண்ணின் அபயக்குரல் கேட்டது. என்று மில்லாதவாறு ஆகாயத்தில் பெண்ணின் அவலக்குரல் கேட்டதால் அது என்ன என்பதை அறிவதற்காகச் சடாயு ஆகாயத்தின் உச்சிக்குப் பறந்து சென்று இராவணனின் விமானத்தை வட்டமிட்டது.

விமானத்தில் இருப்பவள் சீதையென்றும் அவளை இராவணன் கடத்திச் செல்கிறான் என்றும் தெரிந்து கொண்ட சடாயு இராவணனை மூர்க்கத்தனமாகத் தாக்கியது. அது தனது கூரிய அலகால் கொத்தியும் நகங்களால் கீறியும் தாக்கியது.

இராவணன் சடாயு விண்இறக்கைகளைத் தனது வாளினால் வெட்டி விழுத்தினான். சிறகை இழந்த சடாயு நிலத்தில் விழுந்து வேதனையால் துடிதுடித்தது.



அதைக் கண்டு ஆத்திரம் கொண்ட சீதை, ''கொடிய அரக்கனே, நீ வீரமுள்ளவனாக இருந்தால் எனது கணவனோடு போரிட்டு அவரை வென்ற பின் கடத்தியிருக்கலாம். அது தான் வீரனுக்கு அழகு. பலசாலியின் அணுகுமுறை. அதை விட்டு விட்டு என்னைத் தனிமைப்படுத்தி விட்டு மாறுவேடத்தில் வந்து என்னைக் கடத்திச் செல்கிறாய். இது தானா உனது வீரம், பலம். உனது தீயசெயலைத் தடுக்கவந்த முதிய பறவையான சடாயுவை இரக்கமின்றிக் கொன்ற நீ சிவபக்தனா? சிவனைச் சாட்டிப் பிழைப்பு நடத்துகிறாய். உனக்கு வெட்கமாக இல்லை. எனது கணவர் சுத்தவீரர். பலசாலி. அவரால் தான் நீ அழியப்போகிறாய்'' என்றாள் சீதை.

இராவணன் அவளது பேச்சைக் கேட்கவில்லை. அவன் இலங்கையை நோக்கி விமானத்தை விரைவாகச் செலுத்திக் கொண்டிருந்தான்.

சீதை தனது ஆபரணங்கள் அனைத்தையும் கழற்றித் தனது முன்தானையைக் கிழித்து அதில் வைத்துக் கட்டி அதை நிலத்தில் போட்டாள்.

விமானம் இலங்கையை வந்தடைந்தது. இராவணன் பணிப்பெண்களை அழைத்துச் சீதையைத் தூக்கிச் சென்று அசோக வனம் என்ற நந்தவனத்தில் சிறைவைக்கும்படி பணித்தான். சிறைவைக்கப்பட்ட சீதைக்குப் பல அரக்கிகளைக் காவல் வைத்தான்.

## இராமன் சீதையைத் தேடல்

இலட்சுமணன் அந்த மாயக் குரல் வந்த திசையை நோக்கி வேகமாகச் சென்றான்.

இராமன், சீதை தனக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டது என்று கலங்குவாள் என்று எண்ணித் தான் தங்கியிருந்த குடிலை நோக்கி வேகமாக வந்தான். இலட்சுமணன் பலசாலி வீரன். அதனால் சீதைக்கு எந்த ஆபத்தும் வர அவன் விடான். அவள் பயந்தால் உரிய வகையில் சமாதானம் கூறுவான் என்ற நினைவோடு இராமன் வந்து கொண்டிருந்தான்.

வந்தது உண்மையான மான் அல்ல. அது மாயமான். அசுரர்களின் சூழ்ச்சி என்று அறியாது சீதையும் இலட்சுமணனும் கலங்குவார்கள் என்று எண்ணிக் கவலைப்பட்டான் இராமன். தான் இலட்சுமணன் சொன்னதைக் கேளாது விட்டதை நினைத்துக் கவலைப்பட்டான். அப்போது இலட்சுமணன் அங்கே வந்தான்.



இலட்சுமணனைக் கண்ட இராமன் ஒரு கணம் அதிர்ந்தான். நடுக்காட்டில் யாருமில்லா வேளையில் அவன் வந்தது இராமனைக் கலவரப்படுத்தியது.

இலட்சுமணன் வந்து குடிலருகே நடந்த சம்பவத்தைக் கூறினான். பின் இருவரும் குடிலை நோக்கி விரைவாகச் சென்றனர்.

இருவரும் குடிலை அடைந்து சீதையைத் தேடினர். அவளை அங்கு காணவில்லை. அதனால் அவர்கள் காட்டுக்குள் தேடினர். ஓரிடத்தில் சடாயு தனது இறக்கைகள் வெட்டப்பட்டுத் துடிதுடித்துக் கொண்டிருந்ததை இராமன் கண்டான்.

''இராமா, இராவணன் என்ற அரக்கன் தனது விமானத்தில் வந்து சீதையைக் கடத்திச் சென்றான். அதைத் தடுக்க முயன்றேன்.என்னைத் தாக்கி விட்டுச் சென்று விட்டான். நீ இலங்கைக்குப் போய் அவளை மீட்டு வா'' என்று கூறிவிட்டு சடாயு இறந்து விட்டது.

சடாயுவுக்கு இறுதிக் கடன்களை இருவரும் செய்தனர்.

## கிஷ்கிந்தை

இராமனும் இலட்சுமணனும் இலங்கை இருக்கும் தென்திசைப் பக்கமாக நடந்து வந்தனர். அப்போது கிஷ்கிந்தையை வாலி என்பவன் ஆண்டு வந்தான். அக்காடு முழுவதும் குரங்குகள் வாழ்ந்து வந்தன. அவற்றின் அரசன் தான் வாலி. அவன் மிகுந்த பலசாலி. மாவீரன். அவனை யாராலும் போரிட்டு வெல்ல முடியாது. அவனோடு நேரில் போரிட்டால் போரிடுபவரின் பலத்தின் அரைவாசிப் பகுதி வாலிக்குச் சென்று விடும். அப்படி ஒரு வரத்தை அவன் பெற்றிருந்தான். அவன் ஒரு பெரும் சிவபக்தன்.

வாலியின் தம்பி சுக்கிரீவன். வாலியின் மகன் அங்கதன்.

துந்தூபி என்ற ஓர் அரக்கன் ஒருமுறை வாலியுடன் போரிட்டான். துந்தூபி என்ற அரக்கன் மாயவித்தைகள் செய்வதில் கைதேர்ந்தவன். அவன் நிலமை புரியாது வாலியைப் போருக்கு அழைத்தான்.

துந்தூபி பெரியதொரு குகையில் வாழ்ந்து வந்தான். அதனால் அவன் குகைக்குள் இருந்தவாறே போருக்கான அழைப்பை விடுத்தான். குகைக்குள் வாலி வந்ததும் அவனைத் தந்திரமாகக் கொல்லத் திட்டமிட்டான்.

துந்தூபி குகைக்குள் மறைந்திருந்து போருக்கு அழைத்ததால் வாலி குகைக்குள் நுழைந்தான். அப்போது தனது தம்பியான சுக்கிரீவனைக் குகையின் வாசலில் காவல் செய்யுமாறு கட்டளையிட்டு விட்டுச் சென்றான்.

பல நாட்கள் சென்றும் குகைக்குள் இருந்து வாலி திரும்பி வரவில்லை. அதனால் மிக்க துன்பமடைந்த சுக்கிரீவன் ஜாம்பவானை அழைத்து என்ன செய்யலாம் என்று கேட்டான். பெரியவர்களுடன் ஆலோசனை நடத்தினான். ஆனால் முடிவெடுக்க முடியவில்லை.

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் வாசலில் காவல் இருந்த சுக்கிரீவன் குகையின் உள்ளிருந்த இரத்தம் ஆறாகப் பெருகி வந்ததைக் கண்டான். சுக்கிரீவன் ஜம்பவானையும் அனுமானையும் அவ்வூர்ப் பெரியவர்களையும் அழைத்து வந்து காட்டினான். அவர்கள் துந்தூபி என்ற அரக்கன் வாலியைக் கொன்று விட்டானோ என்று அஞ்சிச் சிலநாட்கள் காத்திருந்தனர். வாலி வரவில்லை. அதனால் அந்த அரக்கன் வாலியைக் கொன்று விட்டான் என்று அனைவரும் தீர்மானித்தனர்.

பலம் மிகுந்த வாலியையே கொன்ற அரக்கன் எதிர்வரும் நாட்களில் தம்மையும் அவ் அரக்கன் கொன்று விடுவான் என நினைத்து அந்த குகையின் வாசலைப் பெரியதொரு பாறை ஒன்றால் மூடி விட்டு நாட்டுக்குத் திரும்பினர்.

வாலி இறந்தமையால் அந்நாட்டுப் பெரியவர்கள் சுக்கிரீவனை நாட்டின் அரச பதவியை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினர். சுக்கிரீவன் வாலி உயிரோடு இருந்தால் தன்னைக் கொன்று விடுவான் எனப் பயந்து அதை மறுத்தான்.

சுக்கிரீவனின் பேச்சைக் கேட்க மறுத்த பெரியவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து சுக்கிரீவனுக்கு முடி சூட்டி வைத்தனர்.

குகைக்குள் நுழைந்த வாலியைத் தனது மாயச் செயல்களால் பல வித்தைகளைக் காட்டினான் துந்தூபி. பல இடங்களில் மாறி மாறித் தோன்றுவான். இப்படியாக வாலியைப் பல வழிகளாலும் ஏமாற்றினான். அதனால் வாலி மிகவும் சலிப்படைந்தான். சில சமயம் கடுங்கோபமுற்றான். சில நாட்கள் தோன்றாது மறைந்திருந்த துந்தூபி அன்று புறப்பட்டு வந்த போது வாலி மறைந்திருந்தான். பல மணி நேரமாக வாலியைத் தேடிய துந்தூபி அவனைக் காணாமையால் அவன் தனக்குப் பயந்து சென்று விட்டான் என நினைத்த போது எதிர்பாரது விதமாக அவன் முன்தோன்றிய வாலி அவனைத் தனது கதாயுதத்தால் அடித்துக் கொன்றான். அவனது உடலிருந்து வெளியேறிய இரத்தம் தான் குகை வாசலில் வந்து நின்றது.

பல நாட்கள் துந்தூபியோடு யுத்தம் செய்ததனால் மிகுந்த களைப்படைந்திருந்த வாலி குகையில் சில நாட்கள் ஓய்வெடுத்த பின் வெளியே வந்த போது குகையின் வாசல் பெரியதொரு பாறையால் அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு கடுங்கோபங்கொண்டான்.

தன்னைக் குகையில் அடைத்து விட்டுச் சுக்கிரீவன் ஆட்சியைக் கைப்பற்றி விட்டான் என்று வாலி நினைத்தான்.

குகையை அடைத்த பாறையை விலக்கி வெளியே வந்த வாலி வாசலில் சுக்கிரீவனைக் காணாமையால் கடுங்கோபமுற்றான்.

அவன் அரண்மனைக்கு வந்த போது சுக்கிரீவன் சிம்மாசனத்தில் இருந்தான். அதைக் கண்டு சினமுற்ற வாலி சுக்கிரீவனைத் தாக்கினான். அங்கிருந்தவர்கள் நடந்த சம்பவங்களை வாலிக்குக் கூறிய போதும் அதை அவன் ஏற்றாது சுக்கிரீவனைக் கொல்ல முயன்றான். அதனால் சுக்கிரீவன் ஓடி மறைந்து விட்டான். வாலி சுக்கிரீவனின் மனைவியைச் சிறைப்பிடித்துத் தனது மனைவியாக்கிக் கொண்டான்.

சுக்கிரீவன், வாலி தன்னைக் கொன்று விடுவான் என நினைத்து ரிசியமுக பர்வதம் என்ற மலையில் உள்ள குகை ஒன்றில் மறைந்து வாழ்ந்தான். அவனுடன் அனுமானும் ஜாம்பவானும் கூட இருந்தனர்.

அப்படிச் சுக்கிரீவன் வாழும் போது ஒருநாள் சீதை தனது முன்தானையைக் கிழித்து அதில் தனது நகைகளைக் கட்டிய வீசிய பொதியைக் குரங்கு ஒன்று எடுத்து வந்து சுக்கிரீவனிடம் கொடுத்தது. அதை வாங்கிப் பார்த்த சுக்கிரீவன் பாதுகாப்பாக வைத்தான்.

குரங்கு கொண்டு வந்து நகைகளைக் கொடுத்த சில நாட்களின் பின் இராமனும் இலட்சுமணனும் கிஷ்ந்தைக்கு வந்தனர்.

இராமனையும் இலட்சுமணனையும் கண்ட அனுமான் மகிழ்ச்சிப் பெருங்குடன் ஓடி வந்து இராமனின் பாதங்களைப் பற்றினான். ஆனந்தக் கூத்தாடினான். ஓடினான். துள்ளினான். இராமனை வலம் வந்து வணங்கினான்.

அனுமனின் பக்தியைக் கண்டு மகிழ்ந்த இராமன் அனுமனைக் கட்டித் தழுவினான். அவர்கள் மகிழ்வுடன் உரையாடினர். வானரங்கள் அவர்களுக்குப் பழங்களும், காய்களும், கிழங்குகளும் கொண்டு வந்து கொடுத்தன. இராமரும் இலட்சுமணனும் அவர்களின் உபசரிப்பால் மனம் மகிழ்ந்தனர்.

அதன் பின் அனுமான் இராமனையும் இலட்சுமணனையும் சுக்கிரீவனிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினான்.

சுக்கிரீவன், வாலி தனக்குச் செய்த கொடுமைகளை எடுத்துக் கூறித்தன்னை வாலியிடமிருந்து காப்பாற்றுமாறு கேட்டுக்கொண்டான்.

இராமனின் வரலாற்றை மிகுந்த கவலையுடன் கேட்ட சுக்கிரீவன் தானும் வானர கூட்டங்களும் சீதையை மீட்க உதவுவோமெனக் கூறினான். இராமன் தன் மீது சுக்கிரீவன் கொண்ட அன்புக்காகச் சுக்கிரீவனின் மனைவியை மீட்டுத் தருவேன் என்று கூறினான்.

‘‘சுக்கிரீவா, இலட்சுமணனைப் போல நீயும் எனது சகோதரன் வரும் வழியில் சந்தித்த குகனின் அன்பை நினைத்து மகிழ்ந்து அவனை எனது சகோதரனாக்கினேன். இப்போது உனது அன்பின் தன்மையை உணர்ந்து உன்னையும் எனது சகோதரனாக ஏற்றுக்கொண்டேன். இப்போது எனக்கு ஐந்து சகோதரர்கள்’’ என்றான் இராமன். அதைக் கேட்ட சுக்கிரீவனுக்கு மெய்சிலிர்த்தது.

‘‘இராமா, வாலியைக் கொல்வதென்பது மிகவும் சிரமமான காரியமாகும். அவன் பெரும் பலசாலி. அத்துடன் அவனோடு நேரில் போர் செய்ய முடியாது’’ என்று சுக்கிரீவன் சொன்னபோது,
‘‘வீரனுக்கு வீரன் வையகத்தில் உண்டு. ஒரு காலத்தில் பெரும் பணக்காரன் மறுவேளை பிச்சைக்காரனாகலாம். அது போல பிச்சைக்காரன் பணக்காரனாகலாம். இது கால மாறுபாடு’’ என்ற இராமன் வாலியால் கொல்லப்பட்டு எரியூட்டிய பின் மலைபோலக் குவிந்திருந்த துந்தூபியின் எலும்புக் குவியலை காலால் எட்டி உதைத்தான். அவை வெகு தூரத்திற்கு அப்பாற் சென்று மழை போல விழுந்தன.

அடுத்து வரிசையாக நின்ற ஏழு மாமரங்களை தனது ஓர் அம்பால் துளையிட்டுக் காட்டினான். அதைக் கண்ட சுக்கிரீவன் மிக்க மகிழ்வடைந்து இராமனின் திறமையைப் பாராட்டினான்.

‘‘இராமா, நான் இப்போது வாலியை வலிந்து போருக்கு அழைக்கிறேன். அதுவும் உன்னை நம்பி’’ என்று கூறிச் சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைத்தான்.

அந்த அழைப்பினால் மிகுந்த சீற்றம் கொண்ட வாலி போருக்கு வந்தான். இருவரும் கட்டிப்புரண்டு மல் யுத்தம் செய்தனர். வாலி பயங்கரமாகத் தாக்கினான். சுக்கிரீவன் பலவீனமடைந்தான். அதனால் தப்பி ஓடி வந்து இராமனுக்குச் சொன்னான்,‘‘இராமா, உன்னை நம்பித்தான் அந்தக் கொடியவனோடு யுத்தம் செய்தேன். ஏன் நீ எனக்கு உதவவில்லை’’ என்று வருத்தத்துடன் கேட்டான்.

‘‘நீங்கள் இருவரும் தோற்றத்தில் ஒருவரைப் போலவே இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் சண்டையிடும் போது என்னால் அடையாளம் காண முடியவில்லை. அதனால் தான் நான் அம்பு எய்யவில்லை. இப்போ நீ அடையாளம் தெரிவதற்காக ஒரு மாலையை அணிந்து செல்’’ என்றான்.

சுக்கிரீவன் மிக்க மகிழ்வடைந்து மாலையை அணிந்தான். பின்பு வாலியைப் போருக்கு அழைத்தான்,‘‘தோற்றுப் போய் தலை தெறிக்க ஓடியவன் மீண்டும் போருக்கு அழைக்கிறானா? முன்பு அவனை நான் கொன்றிருக்க வேண்டும்’’ என்று பெருங்கோபம் கொண்டு போரிட வந்தான் வாலி.

மிகவும் பயங்கரமாகப் போர் நடைபெற்றது. வீராவேசத்துடன் வாலி போரிட்டான். அப்போது சுக்கிரீவன் தடுமாறி நிலத்தில் விழுந்தான். அவ்வேளை வாலி தனது கதாயுதத்தைத் தூக்கிச் சுக்கிரீவனைத் தாக்க முற்பட்டான்.

அப்போது மறைந்திருந்த இராமன் வில்லை வளைத்து வாலியின் மார்பைக் குறிவைத்து அம்பை விட்டான். அது விரைவாகச் சென்று வாலியின் நெஞ்சைப் பிளந்தது. வாலி அதிர்ச்சியுடன் நெஞ்சில் ஏறி இருந்த அம்பை இழுத்து வெளியே எடுத்தான். அதில் இராமனது பெயர் பதிக்கப்பட்டிருந்தது வாலிக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது.

இராமன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு வாலியின் முன் வந்தான்,‘‘யார் இவன்? ஏன் என்னைக் கொல்ல வேண்டும்?’’ என்று நினைத்தவாறு இராமனைப் பார்த்தான்,‘‘யார் நீ. நாமிருவரும் சகோதரர்களானாலும் பகைவர்கள். நாம் சண்டையிடும் போது ஒருவருக்குச் சார்பாக இருப்பது வேறு. மறைந்திருந்து தாக்குவது துரோகச் செயல். நீ வீரனா? இதுவா உன் வீரம்’’ என்று வாயில் வந்தபடி ஏசினான் வாலி.

இராமன் வாலி செய்த குற்றங்களை விபரமாகக் கூறியபோது வாலி தான் செய்தது குற்றம் தான் என்று ஒப்புக் கொண்டான்.

‘‘இராமா, எனது தம்பி சுக்கிரீவன் நல்லவன். ஆனால் வீரன் அல்ல. அவனுக்கு முடிசூட்டிப் பாதுகாப்பாக இரு. எனது மகனின் எதிர்காலத்தை உனது கையில் ஒப்படைக்கிறேன். அவனை நல்ல முறையில் வளர்ப்பது உனது பொறுப்பு’’ என்று கூறி உயிர்துறந்தான்.

சில நாட்கள் கழிந்ததும் இராமன் சுக்கிரீவனுக்குக் கிஷ்கிந்தை மன்னனாக முடிசூட்டி வைத்தான்.

அரசனான சுக்கிரீவன் வானரப் படையினரை அழைத்துத் திறமையான பல வீரர்களைத் தேர்ந்தெடுத்தான். அவர்களை நான்கு குழுவினராகப் பிரித்தான். பின் சீதையைத் தேடி ஒவ்வொரு குழுவினரையும் ஒவ்வொரு திசைக்கு அனுப்பி வைத்தான்.

இலங்கையை நோக்கிச் செல்லும் குழுவில் அனுமானும் அங்கதனும் ஜாம்பவானும் மேலும் பல வீரர்களும் இருந்தனர்.

அனுமானின் தலைமையில் இலங்கையை நோக்கித் தென்திசையாகச் சென்ற குழுவினர் அப்பகுதியில் உள்ள காடுகள் மலைகள் மற்றும் இடங்களையெல்லாம் அவதானத்துடன் தேடினர்.

அவர்கள் கவனமாகத் தேடியபடி கடற்கரையை அடைந்தனர். அப்பகுதி சேது என்று அழைக்கப்படும் பகுதி. அது இலங்கைக்கும் கடல் பகுதிக்கும் நடுவில் இருந்தது.

கடலைத் தாண்டிச் சென்றால் தான் இலங்கையை அடைய முடியும். அதற்குப் பொருத்தமானவன் அனுமான் என்று ஜாம்பவான் தீர்மானித்து அனுமனை இலங்கைக்குச் சென்று சீதையைத் தேடுமாறு சொன்னார்.



வாயுபகவானின் புத்திரனான அனுமான் பல அதீத திறமைகளைக் கொண்டவன். அவன் பறவையைப் போல வானில் பறக்கக் கூடிய வல்லமை உள்ளவன். எல்லோரினதும் விருப்பத்தை ஏற்று அனுமான் ஆகாயமார்க்கமாக இலங்கையை நோக்கிப் புறப்பட்டான். புறப்பட்ட சில மணி நேரத்துள் அனுமான் இராவணனின் அரண்மனை அமைந்த கோட்டை வாசலில் இறங்கினான்.

கோட்டையின் வாசலைப் பல அரக்கர்கள் காவல் செய்து கொண்டிருந்தனர். ஒவ்வொருவரின் கையிலும் ஆயுதங்கள் இருந்தன. மிகவும் பருத்த உடலை உடைய அவர்கள் கோட்டை வாசலை மிகவும் அவதானத்துடன் பாதுகாத்தனர்.

அனுமானைக் கண்ட வாயிற்காவலர் அவனை உள்ளே செல்லவிடாது தடுத்தனர். அதனால் கோபம் கொண்ட அனுமான் வாயிற் காவலர் அனைவரையும் கொன்று விட்டு உள்ளே சென்றான்.

உள்ளே சென்ற அனுமான் அந்நகரின் கட்டடங்களைப் பார்த்தான். அவை வானை முட்டும் படியாக உயர்ந்திருந்தன. திரும்பிய பக்கமெல்லாம் அழகிய பூ மரங்கள். விதம் விதமான அழகிய பூக்களை உடைய மரங்கள்.

அவற்றை இரசித்துப் பார்த்தபடி உள்ளே சென்றான் அனுமான். இராவணனின் அரண்மனைப் பக்கம் வந்தான். மிகவும் உயரமான அழகிய அரண்மனை அது. பொன்னைப் போலப் பளபளத்தது. அரண்மனைக்கு முன்பாக இருந்த அழகிய மணி மண்டபத்துள் அரக்கர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். எங்கும் செல்வச் செழிப்புத்தென்பட்டது.

அனுமன் இரவுவேளை வந்தமையால் சீதையை விடிந்த பின்பு தேடுவோம் என நினைத்தான். இரவிலும் அரண்மனை பகல் போலக் காணப்பட்டது. அரண்மனை எங்கும் ஒளிப்பிரகாசமாக இருந்தது.

அனுமன் பகல் இரவாகச் சீதையைத் தேடினான். அவளைக் காணவில்லை. இராவணன் பாதாளச் சிறையில் சீதையை மறைத்து வைத்திருப்பானோ என்று எண்ணினான். அந்த எண்ணம் அவனுக்குப் பெருந்துயரைக் கொடுத்தது. எனினும் மனம் தளரவில்லை. அதனால் அவன் தொடர்ந்து தேடினான்.

எதிரில் ஓர் அழகான சோலை தென்பட்டது. அதற்குள்ச் சென்று தேடத் தொடங்கினான். அங்கு ஒரு பெரிய மரத்தின் அடியில் ஒரு பெண் சோகமே உருவாக அமர்ந்திருப்பதைக் கண்டான். அவளது முகம் வீங்கிக் கறுத்திருந்தது. கண்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவளது தோற்றத்தைப் பார்த்தால் சீதை போல் இருந்தது.

அந்தப் பெண் கவலையோடு இருந்தாலும் அழகாக இருந்தாள். மெல்லிய உடலை உடையவளாக இருந்தாள். அத்துடன் தலைவிரிகோலமாகவும் இருந்தாள். அவளைச் சுற்றி மிகவும் பருத்த உடலை உடைய பல பெண்கள் இருந்தனர். அவர்களது உருவ அமைப்பில் இருந்து அவர்கள் அரக்கிகள் என்று அனுமன் உணர்ந்து கொண்டான்.

அனுமன் தன்னை ஒரு சிறு குரங்காக மாற்றிக் கொண்டு சீதை இருக்கும் மரத்தின் மேல் வந்து அமர்ந்தான். அவள் தான் சீதை என்று உணர்ந்து கொண்ட அனுமன் காவலுக்கு இருக்கும் அரக்கியர் நித்திரையாகும் வரை பொறுத்திருந்தான்.

அவர்கள் நித்திரையானதும் அனுமான், “ராம்.. ராம்..ராம்..” என இராம நாமத்தைப் பக்தியுடன் மெதுவாக உச்சரித்தான். திடீரென்று தனது கணவரின் நாமம் கேட்கிறதே. இது கணவர் இல்லை அசுரர்களின் மாயமா என்று சிந்தித்துப் பயந்தாள் சீதை.

அவள் சிறைப்பட்ட நாளிலிருந்து தினமும் அரக்கிகள் பல மாயங்களைச் செய்து அவளை மனமாற்றம் செய்ய முயன்றனர். அது போலத் தான் இதுவும் என்று நினைத்தாள் சீதை.

அப்போது அனுமன் இராமநாமத்தை உச்சரித்தவாறு மரத்தில் இருந்து குதித்துச் சீதையின் அருகே வந்து வணங்கினான். சீதை அது அரக்கர்களின் மாயம் என்றே நினைத்தாள். அனுமன் தனது உண்மையான உருவத்தை எடுத்தான்.

‘‘தாயே, பயப்படாதீர்கள். நான் இராமபிரானின் தூதுவன். வாயுபகவானின் புத்திரன். எனது பெயர் அனுமன். தங்களின் பக்தன். தங்களது கணவரும் இலட்சுமணனும், சுக்கிரீவனின் அரண்மனையில் தங்கியிருக்கின்றனர். எமது அரசரான சுக்கிரீவன் தனது படைகளை அனுப்பித் தங்களைத் தேடும்படி பணித்துள்ளார். அதனால் தான் நாம் தென்திசையாகத் தேடி இலங்கைக்கு வந்தோம். என்னுடன் வந்தவர்கள் கடலின் அக்கரையில் உள்ளனர். இது இராமபிரான் தந்த முத்திரை மோதிரம்’’ என்று கூறிய அனுமான் இராமன் கொடுத்த மோதிரத்தைச் சீதையிடம் கொடுத்தான்.

அதை வாங்கிப் பார்த்த சீதை. அது தனது கணவரின் மோதிரம் என்பதை உணர்ந்து மகிழ்வுடன் தனது கணகளில் ஒற்றிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

‘‘தாயே, எதற்கும் அஞ்சாதீர்கள். நான் தங்களின் இருப்பிடத்தை அறிந்து விட்டேன். இப்பொழுதே நான் சென்று இராமபிரானுக்குச் செய்தியைச் சொல்வேன். அவர் படையைத் திரட்டி வந்து இராவணோடு போராடி அவனைக் கொன்று தங்களை மீட்பார். இது உறுதி’’ என்றான் அனுமன்.

முத்திரை மோதிரத்தைக் கண்டதாலும், அனுமான் கூறிய உறுதி மொழியை நம்பியதாலும் சீதையின் மனம் தெளிவடைந்தது. தனது கணவன் தன் மீது வைத்திருக்கும் பாசத்தால் அவர் உடனே புறப்பட்டு வந்து தன்னை மீட்பார் என்று உறுதியாக நம்பினாள்.

சீதை வைத்திருந்த சூடாமணியை அனுமனிடம் கொடுத்து தன்னைக் கண்டதன் அடையாளப் பொருளாக அதைத் தனது கணவனிடம் கொடுக்குமாறு சொன்னாள்.

## அனுமான் தன் திறமையைக் காட்டல்

சீதையிடமிருந்து மகிழ்வுடன் விடைபெற்ற அனுமான் தான் இலங்கைக்கு வந்து சென்றதை அரக்கர் பயத்துடன் உணர வேண்டும் என்று நினைத்தான். தான் பெரும் பலசாலியென்பதைக் காட்டினால் வரப்போகும் ஆபத்தை நினைத்து அரக்கர்கள் பயப்படுவார்கள். அதனால் சீதையைக் கொடுமைப்படுத்த மாட்டார்கள் என்றும் அனுமான் நினைத்தான்.

அந்த எண்ணம் வந்தவுடன் மிகுந்த கோபங்கொண்டு அசோக வனத்தை அழிக்கத் தொடங்கினான். அங்கு நின்ற மரங்களைப் பிடுங்கி வந்த அசுரர்களைத் தாக்கினான். அனுமானைக் கட்டுப்படுத்த முடியாத அரக்கர்கள் இராவணனிடம் அதை முறையிட்டனர்.

‘‘குரங்கா..? மிகப் பெரிய குரங்கா.. ஒரு குரங்கைப் பிடித்துக் கொல்ல முடியாத நீங்கள் வீரர்களா? நான் சென்று அந்தக் குரங்கைப் பிடித்து வருகிறேன்’’ என்று கோபத்துடன் புறப்பட்டான் இராவணனது மகன் அட்சயகுமாரன். அவனின் பின்னால் ஏராளமான அரக்கர்கள் ஆயுதங்களுடன் சென்றனர்.

அழகாக இருந்த அசோகவனம் சிதைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டு கடுங்கோபங் கொண்ட அட்சயகுமாரன் அனுமனைப் பிடிக்கும்படி கட்டளையிட்டான். அரக்கர் படை அனுமானைப் பிடிக்க நெருங்கிய போது அனுமான் அங்கிருந்த ஒரு பெரிய மரத்தை வேருடன் பிடுங்கித் தன்னைப் பிடிக்க வந்த அரக்கர்களைத் தாக்கினான். பல அரக்கர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்.

அட்சயகுமாரன் அதைக் கண்டு பெருங்கோபங் கொண்டு,‘‘குரங்கைப் பிடித்துக் கொல்லுங்கள்’’ என்று கட்டளையிட்டபடி அனுமானின் அருகே வந்தான். அரக்கர் பலர் அனுமனைச் சுற்றி நின்றனர். அனுமனுக்குக் கோபம் எல்லை மீறியது. தன்னைத் தாக்கிய அட்சயகுமாரனை அடித்துக் கொன்றான். அரக்கர்கள் திகைத்து நின்றனர். பெரும் பலசாலியான அட்சயகுமாரனைக் கொன்ற குரங்கு தம்மையும் கொன்று விடுமென்று நினைத்த அரக்கர்கள் சிதறி ஓடினர்.

அட்சயகுமாரன் கொல்லப்பட்ட செய்தியை அரக்கர் மூலம் அறிந்த இராவணன் கொதித்தெழுந்தான். அப்போது இராவணனின் மூத்த மகனான இந்திஜித்,''தந்தையே, அந்த வானரத்தைக் கொல்ல நீங்கள் செல்ல வேண்டாம். நான் சென்று அந்தக் குரங்கைப் பிடித்து வருகிறேன்'' என்று ஆவேசமாகக் கூறி விட்டுச் சென்றான். அவனின் பின் பல அரக்கர்கள் ஆயுதங்களுடன் சென்றனர்.

வந்தவன் இராவணனின் மகன் இந்திரஜித் என்று அசுரர்கள் கோசமெழுப்பியதன் மூலம் தெரிந்து கொண்ட அனுமன் ஒரு திட்டத்தை வகுத்து அவனிடம் பிடிபட்டான். அதன் மூலம் அனுமன் இராவணனைச் சந்திக்கலாமென்று எண்ணினான். அவனது எண்ணம் நிறைவேறியது. இந்திரஜித் அனுமனைக் கட்டி இழுத்துச் சென்று இராவணனது அரசசபையில் விட்டான். அரசசபைக்கு வந்ததும் அனுமன் தனது உருவத்தைப் பெரிதாக்கினான். அத்துடன் நில்லாது தனது வாலால் ஒரு பெரிய சிம்மாசனம் அமைத்து அதற்கு மேல் ஏறி இருந்தான்.

இராவணனில் பார்க்க உயர்ந்த வாலாலான சிம்மாசனத்தில் இருந்து சொன்னான்,''இராவணனே, நான் இராமனின் தூதுவன் அனுமன். நீ ஒரு வீரனாக இருந்திருந்தால் இராமன் இல்லாத வேளை பார்த்து வந்து கபடநாடகமாடிச் சீதையைக் கவர்ந்து வந்திருப்பாயா? வீரர்கள் நேருக்கு நேர் நின்று மோதி வெற்றியடைய வேண்டும். இல்லாவிட்டால் வீரமரணம் அடைதல் வேண்டும். அது தான் வீரனுக்கு அழகு. இப்பொழுது கூடக் காலங் கடந்து விடவில்லை. சீதையை இராமனிடம் ஒப்படைத்து விட்டு மன்னிப்புக்கேள். அவர் உன்னை மன்னிப்பார்'' என்றான் அனுமான்.

இராவணன் அதைக்கேட்டுக் கோபம் கொண்டு கத்தினான்,''இந்தக் குரங்கைக் கொல்லுங்கள்'' என்று அரக்கப் படைக்குக் கட்டளையிட்டான்.

அதைக் கண்டு கவலை கொண்ட இராவணனின் தம்பியான விபீசனன்,''அண்ணா, தூதுவனைக் கொல்வது முறையல்ல. அது பெரும் பழியை உண்டாக்கும். அத்துடன் தாங்கள் செய்தது பெருந்தவறு. இன்னொருவனின் மனைவியைக் கவர்வது நீதியாகாது. அதனால் அனுமன் சொன்னபடி சீதையை விடுவியுங்கள்'' என்றான்.

அதைக் கேட்டதும் இராவணனின் கோபம் பல மடங்கு அதிகரித்தது,''எனது விருப்பத்தைப் பிழையானது என்று சொல்ல யாருக்கும் உரிமையில்லை. எனது தம்பி என்ற படியால் உன்னை உயிருடன் விடுகிறேன். தப்பித்துப் போ. இனிமேல் இப்படிப் பேசாதே'' என்றவன் அரக்கர்களின் பக்கம் திரும்பி,''இந்தக குரங்கைப் பிடித்து அதன் வாலில் சீலையைச் சுற்றி அதில் எண்ணெய் விட்டுக் கொழுத்துங்கள்'' என்றான்.

அரக்கர் படை அனுமனைப் பிடித்தது அதன் வாலில் இராவணன் சொன்னது போல துணியைச் சுற்றி எண்ணெய் விட்ட பின் தீயை வைத்தனர். தீ அதன் வாலில் பற்றிப் பெரிதாக எரிந்தது.

அனுமான் மிகுந்த மகிழ்வுடன் ஆகாயத்தில் பறந்து இராவணனின் அரண்மனை மீது தீயை வைத்தான். பின்பு இராவணனின் முக்கியமான கட்டடங்களுக்குத் தீ வைத்தான். அதனால் இலங்கை முழுவதும் பற்றி எரிந்தது. அதை மகிழ்வுடன் பார்த்துச் சில நிமிடங்கள் மகிழ்ந்த அனுமான் கடற்கரைக்கு வந்து கடல் நீரில் தனது வாலை நனைத்துத் தீயை அணைத்தான்.

அதன் பின் ஆகாய வழியாக வந்த அனுமான் சுக்கிரீவனிடம் வந்து தான் சீதையைக் கண்டதையும் அதன் பின் நடந்ததையும் கூறினான். இராமனை வணங்கிய அனுமான், சீதை அசோக வனத்தில் இருந்த நிலையை விளக்கிக் கூறிச் சீதை கொடுத்த சூடாமணியை இராமனிடம் கொடுத்தான். இராமன் அதைப் பார்த்துச் சீதையைக் கண்டது போல மகிழ்ந்தான்.

ஏனைய மூன்று திசைகளிலும் சீதையைத் தேடிச் சென்றோர், சீதையைக் காணாமையால் மிக்க துயரத்துடன் வந்த போது அனுமான் தான் சீதையைக் கண்டதை மகிழ்வுடன் கூறிக் கொண்டிருப்பதைக் கேட்டு சீதையைக் கண்டு பிடித்தாயிற்று என்று மகிழ்ந்தனர்.

சீதை இருக்குமிடம் தெரிந்ததால் அவளை விரைவில் மீட்பதற்கான நடவடிக்கையைச் சுக்கிரீவன் மேற்கொண்டான். படைகள் தயாராகின. ஆயுதங்கள் திருத்தப் பெற்றன.

அடுத்த சில தினங்களில் பெரும் வானரப் படையுடன் இராமனும் இலட்சுமணனும் தென் திசையாக நடந்து கடற்கரையை அடைந்து அங்கு முகாமிட்டனர்.

## அரக்கியின் அச்சம்

அனுமன் வைத்த தீயினால் இராவணனது அரண்மனை பற்றி எரிந்தது. அத்துடன் அந்நகரமே பற்றி எரிந்தது. அரக்கர்கள் தீயை அணைப்பதில் ஈடுபட்டிருந்தனர். அரக்கிகள் திகிலுடன் செய்வதறியாது திகைத்து நின்றனர். சிறுவர் சிறுமிகள் வேடிக்கை பார்த்தனர். சிலர் பயத்தால் அழுதனர்.

எல்லோரும் பயத்துடன் அரசசபைக்கு ஓடி வந்தனர். இவ்வளவு காலமும் மகிழ்வாக இருந்த அவர்களுக்குத் தமது வீடு வாசல்களும் பொருட்களும் எரிந்து சாம்பலானது மிகுந்த அச்சத்தைக் கொடுத்தது.

''இவ்வளவு காலமும் நாங்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தோம். எமது அரசர் ஒரு தெய்வப் பெண்ணைக் கடத்தி வந்த பின்பு தான் நாம் எமது சந்தோசத்தை இழந்தோம். இன்னொருவனின் மனைவி மீது ஆசைப்படுவது பழியாகும். அதைப் போல பெரும் பாவம் வேறு எதுவும் இல்லை. இது ஆரம்பம் இன்னும் என்னென்ன நடக்கப்போகின்றனவோ தெரியாது'' என்ற நல்ல குணமுள்ள அரக்கர்கள் தமக்குள்ப் பேசிக் கொண்டனர். அது இராவணனுக்குத் தெரிய வந்தால் தமது உயிர் போய் விடும் என்று அவர்கள் அஞ்சினர்.

இராவணன் அரசசபையைக் கூட்டினான். அரசசபை கூட்டப்பட்டாலும் அவன் யாரின் சொல்லையும் கேட்பதில்லை என்று எல்லோருக்கும் தெரியும்,''எனது தலை நகரைத் தீயிட்டுக் கொழுத்திவிட்டுத் தப்பிச் சென்ற அனுமனைக் கைது செய்து சிரச்சேதம் செய்தல் வேண்டும். அந்த இனத்தையே பூண்டோடு அழிக்க வேண்டும். சுக்கிரீவனைக் கைது செய்து கொல்ல வேண்டும். பெற்றோரால் வெறுக்கப்பட்டு நாட்டில் வசிக்கக் கூடாதென்று நாடு கடத்தப்பட்ட இராமனையும் அவனது தம்பியையும் போரிட்டு அழிப்போம்'' என்று இராவணன் வீர முழக்கம் செய்தான்.

அரக்கர்கள் எல்லோரும் அப்படியே செய்வோம் என கோசமிட்டனர். ஆனால், இராவணனின் தம்பியான விபூசணன் மிகவும் நேர்மையானவன். சிவபக்தன். தனது சகோதரனான இராவணன் செய்தது மிகப் பெருந்தவறென உணர்ந்தவன். அவன் சொன்னான்,''அண்ணா, தங்களை வணங்கி மிகவும் தாழ்மையாகச் சொல்கிறேன். தங்களை வெல்லக் கூடிய ஒரு பலசாலி மூவுலகங்களிலும் இல்லை. மூவுலகையும் அடக்கி மூவுலகிற்கும் அரசனாக இருக்கிறீர்கள். வேத சாத்திரங்களைக் கற்றவர். பிரமாவிடமிருந்தும் சிவபெருமானிடமிருந்தும் அரிய பல வரங்களைப் பெற்றவர். தேவர்கள் கூடத் தங்களது ஏவலர்களாக இருந்து நீங்கள் இட்ட வேலைகளைச் செய்கிறார்கள். இவ்வளவு பெருமைகளை உடைய நீங்கள் இன்னொருவனின் மனைவியைச் சிறைப்படுத்தி வைத்திருப்பது நியாயமான செயலல்ல. அதனால் அவளை விடுதலை செய்யுங்கள்'' என்றான் பணிவாக.

சபை மிகவும் அமைதியாக இருந்தது. விபூசணன் சொல்வதைப் பலர் மனதளவில் ஏற்றுக் கொண்ட போதும் அதை வெளியே சொல்லப் பயப்பட்டனர்.

இராவணன் ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான். அதனால் விபூசணன் தொடர்ந்து சொன்னான்,''அண்ணா, மிகுந்த பலசாலியான நீங்கள் ஏன் சூழ்ச்சி செய்து சீதையைக் கவர நினைத்தீர்கள். இன்னொருவரின் மனைவியை நினைப்பதே பாவம். அப்படியிருக்கத் தாங்கள் சூழ்ச்சி செய்து கவர்ந்து வந்து சிறை வைத்தது எவ்வளவு தவறு என்று தெரியுமா? அதனால் தீராத பழி ஏற்படும். அதை யாரும் மன்னிக்க மாட்டார்கள். சரி என்றும் சொல்ல மாட்டார்கள். அதனால் சீதையை விடுவித்து விட்டு இராமனிடம் மன்னிப்புக் கேளுங்கள். அதனால் வரவிருக்கும் எல்லாப் பழிகளும் நீங்கும். நீங்களும் உத்தமராவீர்கள்'' என்றான்.

விபூசணனது வார்த்தைகள் இடியைப்போல இராவணனின் காதில் ஏறின. அதனால் மிகவும் கொடுமையான வார்த்தைகளால் அவனைத் திட்டினான்.

இராவணனின் சொற்களை மதிக்காத விபூசணன் சொன்னான்,''அண்ணா, மேலும் மேலும் தவறாக எண்ணிக் கோபம் கொள்கிறீர்கள். சிவபக்தனான தாங்கள் ஒரு நிமிடம் மோக உணர்வை விட்டு விட்டு யோசித்துப் பாருங்கள்'' என்று கூறும்போது இராவணன் மிக்க கோபம் கொண்டு,''தம்பி என்று கூடப்பாராது உன்னைச் சிரச்சேதம் செய்வேன். அதற்கு முன் என் முன் நில்லாது ஓடிப் போ. இந்த நாட்டை விட்டுப் போனால் தான் உனது உயிர் உன்னோடு இருக்கும்'' என்று கத்தினான் இராவணன்.

சபையோர் மௌனமாக இருப்பதைக் கண்ட இராவணன் சொன்னான்,''சபையோரே எனது கோரிக்கையை ஏற்றுவிட்டனர். நீ என்னை எதிர்க்கிறாயா? உடனே நாட்டை விட்டு வெளியேறு'' என்றான்.

இனிமேலும் புத்திமதி சொல்வதால் பயன் இல்லை என்று உணர்ந்த விபூசணன் நாட்டை விட்டு வெளியேறினான். அவனுடன் நல்ல மனம் படைத்த அசுரர்கள் பலரும் சேர்ந்து கொண்டனர். அவர்கள் வானவீதியூடாகச் சென்று இராமனும் இலட்சுமணனும் தங்கியிருந்த கடற்கரையை அடைந்தனர். அங்கு சென்றதும் ஓர் அரக்கன் மூலம் தான் யார் என்றும் எதற்காக வந்திருக்கின்றேன் என்றும் சொல்லியனுப்பினான். விபூசணனும் அரக்கர்களும் தன்னிடம் சரணடைய வந்திருப்பதை அறிந்த இராமன் சுக்கிரீவனையும் ஜாம்பவானையும் அழைத்து விபூசணன் தெரிவித்த கருத்தைச் சொன்னான். அனுமன் அதைக் கேட்டதும் சம்மதித்தான். சுக்கிரீவனும் ஜாம்பவானும் சம்மதிக்கவில்லை. அது அரக்கர்களின் சூழ்ச்சியென்றே இருவரும் நம்பினர். சரணடைவது போலச் சரணடைந்து விட்டுப் பின் எமது நடவடிக்கைகளை இராவணனுக்குக் கூறும் சூழ்ச்சி தான் இது என்று உறுதியாகச் சுக்கிரீவன் நம்பினான். அதனால் அவர்களை ஏற்கக் கூடாதென்று உறுதியாகச் சொன்னான்.

இராமனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சுக்கிரீவன் சொல்வது உண்மையாக இருக்கலாம். முன்பு இலட்சுமணன் சொன்னதைக் கேளாமையால் தான் இந்நிலை உண்டானது. இதுவும் சூழ்ச்சியாக இருந்தால் மிகப் பெரிய பாதிப்புக்கள் வரும். சீதையையும் மீட்க முடியாமல் போகும் என்று நினைத்து இராமன் குழம்பினான்.

குழப்பம் தீராத இராமன் அனுமனை அழைத்து, ''நீ தானே இலங்கை சென்று வந்தாய். உனக்கு விபூசணனைப் பற்றி ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டார்.

''விபூசணன் அரக்கர் குலத்தில் பிறந்தவனென்றாலும் நல்லவன். நேர்மையானவன் என்று இலங்கைக்குச் சென்ற போது புரிந்து கொண்டேன். தாயான சீதையைக் கடத்திச் சிறை வைத்தது பிழையென்று சொல்பவன். திருமாலின் மீது பக்தி கொண்டவன். அதனால் அவனை ஏற்றுக் கொள்வதால் நன்மை உண்டாகுமே தவிரத் தீமை வராது'' என்றான் அனுமன்.

அனுமன் தீர்க்க தரிசி. பின் நடப்பதை முன்பே அறிந்து சொல்பவன் என்று சுக்கிரீவனுக்குத் தெரியும். அத்துடன் விபூசணன் நல்லவன் என்று தெரிந்து தான் ஏற்றாலும் மற்றவர்களின் எண்ணத்தை அறிவது நல்லதென்பதற்காகவே இராமன் அவர்களைக் கேட்டான்.

''பிரபு அனுமானின் சொல் தவறாது நடக்கும். அவன் வாயுவின் மைந்தன். ஆகையால் விபூசணனையும் கூட வந்த அரக்கர்களையும் நாம் ஏற்கலாம்'' என்றான் சுக்கிரீவன்.

''அப்படியா? அப்படியானால் நீயே சென்று அவர்களை அழைத்து வா'' என்று இராமன் சொல்லச் சுக்கிரீவன் மகிழ்வோடு சென்றான்.

சுக்கிரீவன் விபூசணனையும் அவர்களோடு கூட வந்தவர்களையும் அன்புடன் பேசி அழைத்து வந்து இராமனிடம் ஒப்படைத்தான். விபூசணன் ஓடி வந்து இராமனின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். பின் எழுந்த விபூசணனைக் கட்டித் தழுவினான், ''விபூசணனே, சகோதர பாசத்தை விட நீதி தான் முக்கியமானது என்று நினைத்து உனது சகோதரனை எதிர்த்துப் பேசி விட்டு வந்த உன்னை நான் மிகவும் விரும்புகிறேன். உனது கொள்கையும் செயல்களும் என்னைக் கவர்ந்து விட்டன. இனி எம்மோடு மகிழ்வுடன் இரு'' என்றான் இராமன். அதைக் கேட்டு விபூசணன் மிகவும் மகிழ்ந்தான்.

‘‘பிரபு, இனி நான் உங்கள் சொற்படி வாழ்வேன். என்னை அடிமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்’’ என்று விபூசணன் சொல்ல இராமன் சொன்னான், ‘‘சகோதரா, நான் யாரையும் அடிமைகளாக நினைப்பதில்லை. இன்று முதல் நீயும் எனது சகோதரன்’’ என்றான் இராமன்.

‘‘பிரபு, அடிமையாக வந்த என்னைச் சகோதரனாக ஏற்றுவிட்டீர்கள். இதை நான் எடுக்கும் பிறவிகள் தோறும் மறக்க மாட்டேன்’’ என்றான் விபூசணன்.

சில நாட்கள் கழிந்ததும் ஒரு சுபவேளையில் இராமனும் வானரப்படைகளும் இலங்கைக்குச் செல்வதற்கான ஒரு பாலத்தை அனுமனின் தலைமையில் வானரப் படையினர் அமைத்தனர். அனைவரும்,‘‘ராம்.. ராம்..’’ என்று கூறியவாறு கற்களைக் கொண்டு பாலம் அமைத்து முடித்தனர்.

அந்தப் பாலத்தின் வழியாகச் சென்ற இராமனும் இலட்சுமணனும் வானரப்படைகளும் அனுமானும் இலங்கையை அடைந்து இராவணனது கோட்டையைச் சுற்றி வளைத்தனர்.

இராவணனது கோட்டையை முற்றுகையிட்ட வானரப் படைகள் முரசு, பறை, கொம்பு, சங்கு முதலிய கருவிகளை இசைத்து ஆரவாரஞ் செய்தனர்.

அச்சத்தத்தைக் கேட்ட சீதை தனது கணவன் படைகளுடன் தன்னை மீட்க வந்து விட்டாரென்று நினைத்து மிக்க மகிழ்ச்சி கொண்டாள்.

விபூசணனின் மகள் திரிசடை என்பவள் தான் சீதைக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தவள். அவள் எப்பொழுதும் இராவணனின் செயல்களைக் கண்டித்துப் பேசுவதுடன் சீதைக்கு ஆதாரவாகவும் இருந்தவள்.

அவள் வந்து சீதைக்கு நடந்தவற்றையெல்லாம் விரிவாகச் சொன்னாள். அதனால் சீதை மகிழ்வுடன் இருந்தாள்.

இராவணனின் கோட்டையை முற்றுகையிட்ட இராமன், கடைசி முறையாக இராவணன் திருத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க விரும்பினான். அவன் வாலியின் மகனான அங்கதனை அழைத்து பேச வேண்டியவற்றைக் கூறி இராவணனிடத்துத் தூதாக அனுப்பி வைத்தான்.

அங்கதன் இராமனின் அரசசபையை அடைந்தான். அவன் இராவணனைச் சந்தித்துச் சொன்னான்,‘‘அரசே, நான் வாலியின் மகன் அங்கதன். என்னை இராமபிரான் தங்களிடம் சில செய்திகளைச் சொல்லும்படி அனுப்பி வைத்துள்ளார். போருக்கென்று வந்த பின் சமாதானப் பேச்சா என்று நினைப்பீர்கள். இராமபிரான் அன்பு மயமானவர். எதிரிகளுக்கும் துன்பம் செய்ய விரும்பாதவர். நீ செய்தது மகாதவறு. இருப்பினும் அதைத் தயாள சிந்தையுடன் மன்னிக்கத் தயாராக இருக்கிறார். அதனால் நீ சிறை வைத்திருக்கும் சீதா பிராட்டியை விடுதலை செய்து இராமபிரானிடம் ஒப்படைத்து விட்டு மன்னிப்புக் கேள்’’ என்றான்.

‘‘அங்கதா, உனது தந்தையை இராமன் மறைந்திருந்து கொன்றவன். அப்படியான தீயவனுக்குச் சார்பாகப் பேச எப்படி உனக்குத் துணிவு வந்தது. என்னுடன் சேர். உனது தந்தையைக் கொன்றவனைக் கொல்வோம்’’ என்றான் இராவணன்.

‘‘எனது தந்தை உன்னைப் போன்ற தவறைச் செய்தமையால் தான் இராமபிரான் அவரைக் கொன்றார். அவர் இறக்கு முன் என்னை இராமபிரானிடம் ஒப்படைத்து எனது வாழ்வை மேம்படுத்தும் படி கூறிவிட்டுத் தான் இறந்தவர். அதனால் வீணாண பேச்சை விட்டு விட்டு உனது தவறுக்கு மன்னிப்புக் கேள். இல்லாவிட்டால் எனது தந்தையின் நிலை தான் உனக்கும் ஏற்படும்’’ என்றான் அங்கதன்.

இராவணன் அங்கதனது பேச்சைக் கேளாது சொன்னான்,‘‘போர் என்று வந்த பின் போரைக் கண்டு பயம் கொள்வது வீரர்க்கழகல்ல. போருக்கு நான் தயார் என்று உனது இராமனிடம் போய்ச் சொல்’’ என்றான் இராவணன்.

## போர் ஆரம்பம்

அங்கதன் இராமனிடம் வந்து சொன்னான்,''பிரபு, அவன் உண்மையான அரக்கன். அதனால் நீதி நியாயத்தைச் செவிமடுக்கிறான் இல்லை. தங்களது பெருமைகளையும் உணர்கிறானில்லை. நாம் இறுதி நேரத்தில் தூது அனுப்பியதால் அதை அவன் பலவீனமாகக் கருதுகிறான். போரில் தோற்றுவிடுவதைத் தவிர்க்கவே நாம் தூது அனுப்பினோம் என்று எண்ணுகிறான்'' என்றான்.

போர் ஆரம்பமானது. வானர வீரர்கள் கோட்டைகளையும் கொத்தளங்களையும் அழித்து அக்கற்களால் அகழிகளை மூடினர். இந்திரஜித் அங்கதனோடு போராடினான். அவனால் அங்கதனின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாததால் நாகாஸ்திரத்தை ஏவினான். அதை ஏவியதும் ஆயிரக்கணக்கான நாகங்கள் வந்து வானர சேனையைச் சுற்றித் தாக்கின. அங்கதன் செய்வதறியாது இராமனை நினைக்க கருடன் அவ்விடத்துக்கு வந்தான். கருடனைக் கண்ட நாகங்கள் தப்பினால் போதுமென்று ஓடி மறைந்தன.

அதன் பின் அங்கதனின் தாக்குதலைச் சமாளிக்க முடியாது இந்திரஜித் தப்பி ஓடினான். அதை அறிந்து பெருந்துயரங் கொண்ட இராவணன் தும்ராட்சன், வச்ரதம்ஸ்ட்ரன், பிரகஸ்தன் ஆகிய பலம் பொருந்திய அரக்கர்களைப் படையுடன் அனுப்பினான். அவர்கள் யாரும் திரும்பி வராமையால் மிக்க கோபம் கொண்ட இராவணன் பெரும் அரக்கப் படையுடன் போர்க்களத்திற்கு வந்தான். அவன் யுத்தம் செய்து கொண்டிருக்கும் போது அனுமன் வந்து இராவணனின் மார்பில் கையால குத்தினான். அவன் நிலை குலைய அவனது கிரீடத்திலும் மார்பிலும் குத்தினான். பின்,''உன்னைக் கொல்ல எனது பிரபுதேவையில்லை. நானே கொன்றுவிடுவேன். ஆனால் இராமபிரான் சீதையைக் கடத்தியமையால் கடுஞ்சீற்றம் கொண்டுள்ளமையால் அவர் உன்னைத் தண்டித்தல் வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

அப்போது படையுடன் அங்கு வந்த இராமன் இராவணனது தேரைத் தாக்கி உடைத்தான். அவனது வில்லின் நாணை உடைத்தான். தேர்ப்பாகனையும், குதிரைகளையும் கொன்றான். பெரும் படையுடன் வந்த இராவணன் யாவற்றையும் இழந்து தனியாக நின்றான்.

''இராவணனே, காலையில் பெரும் படையுடன் வந்தாய். தற்பொழுது எல்லாவற்றையும் இழந்து தனியனாக நிற்பதைப் பார்க்க எனக்குத் துயரமாக உள்ளது. இப்பொழுது மிகவும் இலகுவாக உன்னைக் கொல்ல என்னால் முடியும். படையுடன் வந்த உன்னைத் தனிமைப்படுத்திய பின் கொல்வது அரசதர்மம். ஆனால் நீ திருந்துவதற்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன். அரண்மனைக்குச் சென்று நீ செய்த செயல்கள் நீதியானதா என்று சிந்தித்துப் பார். உனது தவறை உணர்ந்தால் நான் உன்னை மன்னிப்பேன். நீ தவறு செய்யவில்லையென்றால் நாளைக்குப் படையுடன் வா'' என்றான் இராமன்.

இரவு முழுவதும் தூக்கமில்லாதிருந்து யோசித்த இராவணன் மறுநாள் தனது தம்பியான கும்பகர்ணனைப் போருக்கு அனுப்ப நினைத்தான். கும்பகர்ணன் ஆறு மாதங்கள் தூக்கத்தில் இருப்பான். மிகுதி ஆறு மாதங்கள் விழித்திருப்பான். யுத்தம் நடைபெற்ற போது கும்பகர்ணன் உறக்கத்தில் இருந்தான்.

பெரும் உறக்கத்தில் இருந்த கும்பகர்ணனை அசுர படைகள் மிகவும் சிரமப்பட்டு எழுப்பின. அவன் தூக்கக் கலக்கத்துடன் அரசசபைக்கு வந்தான். இராவணன் நடந்தவற்றை விபரமாகச் சொல்லி இராமனோடு யுத்தம் செய்யுமாறு பணித்தான்.

கும்பகர்ணன் அரக்கனானாலும் நீதியானவன். அவன் சொன்னான், ''அண்ணா, உன்னை விடப்பலசாலி மூவுலகிலும் இல்லை. அத்துடன் நீ சிறந்த சிவபக்தர். வேத உபநிடதங்களைக் கற்றவன். அப்படியான உனக்கு இன்னொருவனின் மனைவி மீது காமம் கொள்வது தவறு என்று தெரியவில்லையா? எத்தகைய பலசாலியானாலும் அவன் நீதிக்கு மாறாக நடந்தால் தெய்வத்தால் தண்டிக்கப்படுவான் என்பதும் உனக்குத் தெரியாதா? இப்பொழுது உனது பிள்ளைகள், தளபதிகள், போர் வீரர்கள் யாவற்றையும் இழந்து விட்டாய். உனது எதிரி உன்னிலும் பலம் மிக்கவன் என்று புரியவில்லையா? நேற்றே அவன் உன்னைக் கொன்றிருக்கலாம். எதிரியின் தாக்குதலால் எதிர்ப்பவன் ஆயுதம் இழப்பான். அதற்காகத் தான் போர் நடக்கிறது. ஆனால் இராமன் உன்னைக் கொல்லாது உனது தவறை உணர வைக்க உன்னை உயிருடன் அனுப்பியுள்ளான். இதற்குப் பின்பும் நீ யோசிக்காவிட்டால் மரணத்தை மகிழ்வுடன் விரும்புகிறாய் என்பதே அர்த்தம்'' என்று சொல்லும் போது இராவணன் குறுக்கிட்டுக் கோபத்துடன் ஏசினான்.

‘‘கும்பகர்ணா, உனது உபதேசம் எனக்குத் தேவையில்லை. போருக்குச் சென்று இராமனைக் கொல். இது எனது கட்டளை’’ என்றான் இராவணன்.

கும்பகர்ணன் எதுவும் பேசாது படையுடன் போர்க் களத்துக்குச் சென்றான். கும்பகர்ணனைக் கண்டவுடன் விபூசணன் இராமனுக்குச் சொன்னான்,‘‘பிரபு, இவன் எனது இளைய சகோதரன் கும்பகர்ணன். அவன் என்னைப் போன்றவன். அண்ணனின் கட்டளைக்குப் பயந்து வந்திருக்கிறான் அவனை எம் பக்கம் சேர்க்கலாம். நான் சென்று அவனுடன் பேச அனுமதியுங்கள்’’ என்றான்.

தனது அருகில் வந்து வணங்கி நின்ற விபூசணனைப் பார்த்து கும்பகர்ணன் மிகுந்த துக்கத்துடன் சொன்னான், ‘‘தம்பி, நீ எதிரியின் பக்கம் சேர்ந்து விட்டாயா? அண்ணன் செய்தது மகா தவறு. நேற்று இராமன் சொன்னதைக் கேட்டாவது திருந்தியிருக்கலாம். அவரின் மரணத்தைத் தடுக்க முடியாது. உன்னைப் பொறுத்தவரை நீ எடுத்த முடிவு சரியானது. தீயசெயல்களைச் செய்பவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும். நான் அரைவாசிக் காலத்தை உறங்கிக் கழித்து விட்டேன். அவ்வேளை என்னைக் கவனித்து உணவளித்துப் பாதுகாத்த அண்ணன் தீயவனாக இருந்தாலும் அவனுக்காகப் போராடுவேன் என்று உறுதியளித்து விட்டு வந்தேன். அதை மறுக்க முடியவில்லை. மரணம் எப்போதும் வரும். எப்படியும் வரும். அதனால் அண்ணனுக்காப் போராட முடிவு செய்து விட்டேன். ஆகையால் உனது பக்கம் வரமுடியாமைக்காக வருந்துகிறேன். நீ போ’’ என்றான் கும்பகர்ணன்.

போர்க்களத்திற்கு வந்த கும்பகர்ணன் வானரச் சேனைகளை மிகவும் கொடூரமாகத் தாக்கினான். வானரப் படைகளின் பெரும் பகுதி அழிந்தது. பலர் காயமுற்றனர். ஏனையோர் பயந்து ஓடினர். அப்போது அங்கே வந்த இராமன் சக்தி வாய்ந்த அம்பை விட அது கும்பகர்ணனின் மார்பைப் பிளந்தது. கும்பகர்ணன் நிலத்தில் விழுந்து உயிர் துறந்தான்.

கும்பகர்ணன் இறந்த செய்தியைக் கேட்ட இராவணன் மிகுந்த துயரத்துடன் இருந்த போது அவனது மகனான இந்திரஜித் தந்தையின் துயரத்தைக் கண்டு மனம் வருந்தி அவனுக்கு ஆறுதல் கூறிவிட்டுப் போர்க்களத்திற்குச் சென்றான்.

இந்திரஜித் சிறந்த வீரன். தைரியசாலி. மாயாயாலங்கள் செய்வதில் வல்லவன். விண்ணிலும் நின்று போராடும் வல்லமை உள்ளவன். அவனது தலைமையில் ஆயிரக்கணக்கான அசுரர்கள் வந்து வானரச் சேனையை மூர்க்கத்தனமாகத் தாக்கினர். வானரச் சேனைகள் அழிந்தன. பலர் தப்பி ஓடினர். அப்போது அவனை எதிர்த்து இலட்சுமணன் போரிட்டான். போர் மிகவும் உக்கிரமாக நடைபெற்றது. இந்திரஜித் இலட்சுமணனைக் கடுமையாகத் தாக்கினான். அவனது தாக்குதலை இலட்சுமணன் எளிதில் முறியடித்து உக்கிரமாகத் தாக்கினான். அதனால் இந்திரஜித் வானில் தனது தேருடன் எழுந்து மறைந்து நின்று போரிட்டான்.

வானில் நின்று போரிட்ட இந்திரஜித் தான் வைத்திருந்த பிரம்மாஸ்திரத்தை எடுத்து விட்டான். அது நச்சு ஆயுதம். அதிலிருந்து வெளிப்பட்ட நச்சுப்புகையைச் சுவாசித்ததால் இராமரும் இலட்சுமணனும் வானரசேனைகளும் மயங்கிச் சாய்ந்தன. அதைக் கண்ட இந்திரஜித் பெரு மகிழ்வு கொண்டு தந்தையிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான். அதனால் இராவணன் பெரு மகிழ்ச்சி கொண்டான்.

அதைக் கண்டு மிக்க துயரங்கொண்ட ஜாம்பவான், அனுமனை அழைத்து, ‘‘அனுமான், இராமரும் இலட்சுமணனும் படை வீரர்களும் இந்திரஜித்தின் நச்சம்பால் மயக்கமடைந்து விட்டனர். அம்மயக்கத்தைத் தீர்க்கக் கூடிய மருந்து சஞ்சீவியாகும். அது இங்கிருந்து ஏழு சாகரங்களுக்கு அப்பால் உள்ள ஒசதி மலையில் உள்ளது. அதை உடனே கொண்டு வா. தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்தானது’’என்றார்.

ஒசதி மலையை அடைந்த அனுமன் சஞ்சீவிச் செடியைத் தேடிப் பார்த்தான். மலை முழுவதும் ஏராளமான செடிகள் நின்றன. அதனால் சஞ்சீவிச் செடியை அனுமானால் கண்டு கொள்ள முடியவில்லை. அதனால் அவன் அம்மலையைத் தூக்கிக் கொண்டு போர்க்களத்துக்கு வந்தான்.

சஞ்சீவிச் செடியின் வாசனன வந்ததும் அனைவரும் சுயநினைவடைந்தனர்.


மறுநாள்க் காலை இராமன் போர் முழக்கம் செய்தான். அதன் சத்தம் கேட்டு இராவணனும் இந்திரஜித்தும் திடுக்கிட்டு எழுந்தனர். நச்சுப்புகையைச் சுவாசித்த எல்லோரும் விடியற்காலையில் இறந்திருப்பர் என்று நினைத்த இருவருக்கும் போர் முரசின் சத்தம் அச்சத்தைக் கொடுத்தது.

ஆத்திரத்துடன் போர்க்களத்திற்கு வந்த இந்திரஜித் வேறு வகையான மாயங்களைச் செய்து போரிட்டான். முன்பை விட இலட்சுமணன் உக்கிரமாக இந்திரஜித்தைத் தாக்கியதால் அவன் மரணமடைந்தான்.

களத்தில் தம்பிகள், பிள்ளைகள், தளபதிகள், பெரும் படைகளை இழந்த இராவணன் உயிர்தப்பிய சில நூறு அரக்கப்படையுடன் போர்க்களத்திற்கு வந்தான்.

அடக்க முடியாத பெருஞ்சினத்துடன் போர்க்களத்திற்கு வந்த இராவணன் பேரழிவை உண்டாக்கக் கூடிய ஆயுதங்களை இராமன் மீது ஏவினான். இராமன் பிரமஅஸ்திரம் எனப்படும் வலிமை மிக்க அம்பினைத் தனது கோதண்டம் என்ற வில்லில் பொருத்தி இராவணன் மீது எய்தான்.

தீயைக் கக்கிக் கொண்டு மின்னல் வேகத்தில் சீறிக்கொண்டு சென்ற அவ்வாயுதம் இராவணனின் தேர், கொடி, முடி, குதிரைகள் யாவற்றையும் அழித்து விட்டு இராவணனது நெஞ்சில் புகுந்து அதைப் பிளந்தது. இராவணன் வேரற்ற மரம் போல நிலத்தில் சாய்ந்தான்.



விபூசணன் இராவணனுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகளை முறைப்படி செய்தான்.

திரிசடையும் விபூசணனும் அசோக வனத்தில் இருந்த சீதையை அழைத்து வந்து இராமனிடம் ஒப்படைத்தனர். சீதை இராமனது நெஞ்சில் முகம் புதைத்து விம்மி விம்மி அழுதாள்.

அப்போது இராமனுக்குப் பரதன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது,''அண்ணா, பதின் நான்கு வருடங்கள் கழிந்ததும் இங்கு வந்து அரசைப்பொறுப்பேற்க வேண்டும். ஓரிரு நிமிடங்கள் தாமதமானாலும் நான் தீ மூட்டி அதில் குதித்து விடுவேன்'' என்றவன்.

அதனால் இராமன் அனுமனை அழைத்து,''நீ உடனே அயோத்திக்குச் சென்று பரதனுக்கு எமது வரவை அறிவி'' என்றான்.


உடனே அனுமன் வானவீதியூடாக அயோத்திக்குப் புறப்பட்டான்.

ஒரு நல்ல நாளில் விபூசணனுக்கு இலங்கை மன்னனாக முடிசூட்டி வைத்து விட்டு விமானத்தில் ஏறிப்புறப்பட்டான் இராமன். அவனுடன் சீதையும், இலட்சுமணனும், ஜாம்பவானும் சென்றனர்.

இராமன் வரத் தாமதமாகியதால் பரதன் கவலையுடன் தீமூட்டி அதை வலம் வந்தான். அப்போது வானில் ''ராம் ராம்'' என்று இராம நாமத்தை உச்சரித்தவாறு அனுமான் வந்து பரதனுக்கு இராமனின் வருகையைத் தெரிவித்தான்.

அதையறிந்த பரதன் அயோத்தி நகரை அலங்கரிக்குமாறு கட்டளையிட்டான். மக்கள் இராமன் வரப்போகிறான் என அறிந்து நகரை அலங்கரித்தனர்.

இராமனைக் கண்ட அயோத்தி மக்கள் மகிழ்வுடன் ஆடிப்பாடி இராமனை வரவேற்றனர்.



சிலநாட்கள் கழிய வந்த ஒரு சுபவேளையில் வசிட்ட முனிவர் இராமனுக்கு முடிசூட்டி வைத்தார். அப்போது அனுமான் ராமனின் திருவடியில் அமர்ந்தான். அங்கதன் உடைவாளை ஏந்தியவாறு இராமனுக்கு அருகில் நின்றான். பரதன் வெண்கொற்றக் கொடியைப் பிடித்தான். இலட்சுமணனும் சத்துருக்கனும் சாமரை வீசினர். சீதை பூரிப்புடன் இராமனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். சுக்கிரீவன், விபூசணன், ஜாம்பவான் ஆகியோர் இராமனை வணங்கினர். கோசல நாடு இராமனின் ஆட்சிக்கு வந்தது.

முற்றும்.